www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

22 - 28.08.1993

ரூபா 8/50

දිනමුරසු වාරමලර්

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 13



## அமெரிக்க கடலில் பயங்கரம் - ஆறுபேரோடு சென்ற அதிவேக விசைப்படகு 145 அடி சுறா சுருட்டி விழுங்கியது - விபரம் 6ம் பக்கம்



## கடற்புலிகளால் தாக்குப்பிடிக்க முடியுமா? கிளாலி அவலம் என்றுதான் தீருமோ?

எக்ஸ்ரே ரிப்போர்ட்

சிக்னல் போடும் கார் சிட்டென வந்த அழகி
ஒற்றன் - நகர ரவுண்டப்

இளமைத் தொடர்
கண்ணே மதுமிதா



ஸ்போர்ட்ஸ்

கதை - விடுகதை - வண்ணப்போட்டி
பாப்பா முரசு
தையல் + சமையல்
லேடீஸ் ஸ்பெசல்

சூடான செய்திகள்
சுவையான தகவல்கள்
சிறுகதைகள் - கவிதைகள்
பக்கத்திற்கு பக்கம்
பிரமிப்புக்கள்

இலக்கிய நயம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# முரசம்

அன்புடன் உங்களுக்கு
வணக்கம்.

முரசுக்கு-
உங்கள் இல்லங்களில் மட்டுமல்ல
இதயங்களிலும் இடம் கொடுத்திருக்கிறீர்கள்.
மனம் திறந்து வந்து சேரும்
பிரத்தியேக மடல்களும்
அவற்றில் நிறைந்துள்ள உங்கள் உணர்வுகளும்
பிரிக்க முடியாத
பாச உணர்வின் வெளிப்பாடுகள்.

களம்தேடி வந்து காத்திருக்கின்றன
உங்கள் எழுத்தின் பலம் சொல்லும்
எண்ணற்ற ஆக்கங்கள்.

எல்லோரும் அல்ல ஓரிருவர்
தங்கள் பெயர் வரவேண்டும் என்கின்ற
எண்ணத்தின் துடிப்பிலே
தமிழக சஞ்சிகைகள் சிலவற்றில் வெளிவந்த
கதைகளை
தங்கள் சொந்த ஆக்கமாக
உரிமை கொண்டாடி
கடித உறைக்குள் போட்டு
உற்சாகமாக அனுப்பிவிடுகிறார்கள்.
தயவுசெய்து
அவ்வாறான முயற்சிகளைத் தவிருங்கள்.
உங்களால் முடியும் - எழுதுங்கள்.

முகில்வண்ணன், அஸ்வதி, சுரேஸ்
வை.நிரு, ஷயாரோ, லேகா
இப்படி நீளும் பட்டியலில்....
இவர்களில் எவரையும்
இதுவரை நான் சந்தித்ததில்லை.
ஆனால்
அவர்களிடம் ஒரு வேகம் இருக்கிறது.
இலக்கியத் தாகம் இருக்கிறது.
அதனால், முரசில்
அவர்களுக்கென்று ஒரு இடம்
முன்னுரிமையோடு வழங்கப்படுகிறது.

தெரிந்தவர், அறிந்தவர்
சிபாரிசோடு வருகின்றவர்
வேண்டப்பட்டவர் - படாதவர்
என்ற வேறுபாடுகள் இங்கில்லை.

ஆனால் -
வாசகர்கள் புத்திசாலிகள்.
அவர்களை ஏமாற்றலாம் என்று
நினைப்போர் ஏமாந்து போகிறார்கள்.

ஓரிருவரின் பிரதியெடுக்கும் முயற்சிகளால்
புதியவர்களுக்கு களம் கொடுக்கும்போது
யோசித்தே கொடுக்கவேண்டியிருக்கிறது.

கதைகளால் பக்கம் நிரம்பும் அவசியம்
முரசுக்கு கிடையாது.
உங்களுக்கு தருவதற்கு

எங்களிடம் நிறையவே விசயங்களும்
புதிய முயற்சிகளும் உள்ளன.

எதையும் புதுமையோடு செய்ய வேண்டும்.
சலிப்பூட்டும் ஒரேவிதமான ஆக்க முறைகள்
உங்களுக்கும் அலுப்பூட்டும்
எங்களுக்கும் அலுப்பூட்டும்.
எனவே
புதியவர்களுக்கும்- புதிய முயற்சிகளுக்கும்
முரசு முகம் மலர்ந்து இடம் கொடுக்கும்.

ஆகவே,
எழுதுவோர் வேகத்தைக் காட்டுங்கள்.
வெறுமனே பெயர் வரவேண்டும்
என்ற மோகத்தை தவிருங்கள்.
நேசத்துடன் முரசு அணைத்துக்கொள்ளும்.

எவர்மீதும் கோபத்தில் இதை எழுதவில்லை.
முரசுக்கும் வாசகர்களுக்கும்
ஏற்பட்டுவரும் பிணைப்பும்-பிடிப்பும்
புதுமையானது. என்றும் இளமையானது.
எமக்குள் பொய்யற்ற உறவுகளும்
பரஸ்பர ஆக்கமும் ஊக்கமும்
ஒருவருக்கொருவர் கைகொடுத்தலும்
நிரந்தரமாய் நீடிக்கும்.
அதற்காகவே
அன்போடு சில தவறுகளை
ஆரம்பத்திலேயே சுட்டிக்காட்டவேண்டியிருக்கிறது.
வேறொன்றுமில்லை.

வாசகர் மன்றங்கள் அமைக்க வேண்டும்
என்று
பலதிசைகளில் இருந்தும் கோரிக்கைகள்.
சற்றுப் பொறுங்கள்.
நேரம் வரும்போது கூடிப்பேசுவோம்.

கட்டாயம் பதில் போடுமாறு கூறி
பலர் மடல் அனுப்புகிறீர்கள்.
நேரம் இடம் கொடுக்க மறுக்கிறது.
புரிந்து கொள்வீர்கள்
என்ற நம்பிக்கை உண்டு.
பதில் எழுத முடியாவிட்டாலும்
உங்கள் மடல் படிக்க தவறுவதில்லை.

அன்போடு இன்னொரு விசயம்
ஆக்கங்கள்-
பிரத்தியேக கடிதங்கள் தவிர
முடிந்தவரை தபாலட்டையில் எழுதுங்கள்.
உங்களுக்கும் சிக்கனம்.
எமக்கும் சுலபம்.

பதிவுத் தபால்கள் அவசியமில்லை.
எதற்கு வீண்செலவு?
சாதாரண கடிதங்கள்
கரம் சேருகின்றன.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும் வரை

அன்புடன்
—ஆசிரியர்—


தினமுரசு
போன்: 820265



அறிவித்தல்
இலங்கை எங்கும்
தினமுரசு வாரமலர்
ரூ. 8.50 மட்டுமே.


## கவிதைப் போட்டி இல-10

கவிதை விதைத்து விருது பெறுபவரும்
வியந்து பாராட்டுப் பெறுபவர்களும்.

### பரிசுபெறும் கவிதை

**தேடல்**

ஆயுதம் மட்டும்
ஆட்சி பெறும் நாட்டில்
தேர்ச்சி பெற - நானும்
தேடுகிறேன் நுட்பத்தை.

நடராசா கலையரசி
கொழும்பு-2.

**முகவரி(த்) தேடும் முகங்கள்**

முகவரிகளில்லாத
எங்கள்
முகங்களுக்கு
நாங்களே
முகவரிகள்
இட்டு(க்)
கொள்கிறோம்.

பௌஹானா கபூர்
தெல்தோட்டை.

**முளையாகிறது**

விதை ஒன்று
இன்று
முளையாகுதே.
கலை வண்ணம்
புது
யுகம்காணவே.

சு. துஷ்யந்தன்
அக்கரைப்பற்று.

**கலவரம்**

முதலில்
முகத்தைக்
காட்டு
அடையாள
அட்டைப்
பிரச்சனைக்கு
நீயும்
இலக்காகலாம்.

சிவா
கொழும்பு-11.

**இதாவது மிஞ்சட்டும்**

தலையை நிமிர்த்து
யுத்த அரக்கன்
எம்மையும்
விடமாட்டான்
அத்தாட்சிக்காக
படமாவது
இருக்கட்டும்!

ஏ.அஹ்மது ஜுனைது
ஏறாவூர்-06.

**ஆசை**

சின்ன சின்ன ஆசை
சிறியவனின் ஆசை
பாப்பாவின் முகத்தை.......
படம் பிடிக்க ஆசை
பத்திரமாய் அதனை.....
பேணி வைக்க ஆசை.

எஸ்.சிராஸா பானு
கெகிராவ.

**ஒரு சொட்**

முகம் காட்டும்
ஒரு மொட்டு
முழு நிலவாகும்
முன்னே
ஒரு சொட்.

இ.பவானி
வவுனியா.


**ஞாபகச் சின்னம்?**

தொடரும் பயணம்
இலக்கினை அடையுமோ?
சந்தேகம் என்பதாலே-இந்
ஞாபகப் புகைப்படம்.

அமட்சன் யுவராஜா
மட்டக்களப்பு.

அடையாள அட்டைக்கு
இப்போதே படமா?

ஆர்.பாலகிருஷ்ணன்
மாத்தளை.



**மகிழ்வூட்டவோ?**

போரின் அழிவுகளையும்
வறுமையின் கொடுமைகளையும்
நிழற்படங்களில் பார்த்து
துவண்டிருப்போம் என்றெண்ணி
மழலையின் முகம்காட்டி
மகிழ்வூட்ட முயல்கின்றானோ?

க. நளினி
திருகோணமலை.

**அகமறிய ஆராய்ச்சி**

முகத்தைப்
பார்க்கிறேன்-கமராவினாள்
ஆனால்
அகத்தை அறியமுடியவில்லை
அதற்கும் கருவி வந்திடுமா?
வந்திட்டால்
பசுத்தோல் போர்த்திய
புலிகளைப் பிரித்தறிவிப்பேன்.

எஸ்.எம். தஸ்பீஹா
புத்தளம்.

**எதுவோ?**

தன் சகோதரனுக்கெதிராய்
தன் கையில்
ஆயுதம் ஏந்தும்
சகாப்தமப்பா இது
இன்று
உன்கையில்
"கமரா"
நாளைய விடியலில்
உன் கையில்
எதுவோ?

சாய்ந்தமருதூர்
ஐ.எம். .எம். நஜீம்.

**"மழலையின் ஆசை"**

கொஞ்சம் பொறு
ஒரு
போட்டோ
பிடித்துக் கொள்கிறேன்
டுபாயில் இருக்கும்
எங்க
மம்மிக்கு
அனுப்பி வைக்கலாம்!

வெல்லம்பிட்டியூராள்
நிஷா
வெல்லம்பிட்டிய.

**தலைப்பு**

அதிசயமொன்றை-முரசுக்கு
அறிமுகப்படுத்தப்
போகிறேன்.
இன்னும் இடவில்லை
தலைப்பு:
நீ சிரித்து விட்டால்;
"மகிழ்ச்சியின் மறைவிடம்"
நீஅழுது விட்டால்;
"சோகத்தின் சுவடு"

நிரஞ்சலா தங்கவேல்
திருகோணமலை.

**வியப்பு**

செல்வம் கொழிக்கிறது
சிறு உள்ளம் மகிழ்கிறது
விஞ்ஞானத்தின் உயர்ச்சியது
விந்தை புரியுது கரத்தினில் பார்!

செல்வி: ஆறுமுகம் சிவஞானவல்லி
வவுனியா.

**உள்ளக்களிப்பு**

வியப்பாய் இருக்கிறதா.....!
கையிலுள்ள காமெராதான்...!!
ஆம்......நாங்கள்.
உள்ளக் களிப்பிலிருக்கும்
சின்னஞ்சிறு
மணிகள்.

என்.எம். தஸ்லிமா
அக்குறணை.

**சந்தேகம்!**

பாப்பா-
இது யார் தந்தது?
கவனம்
இதுவும் வெடிக்கலாம்.

செல்வி இஹ்ஸானா பரீட்
கிண்ணியா-02.

**அழகு**

கவிதைக்கு பொய் அழகு
கமராவுக்கு நீ அழகு

செல்வன் க.பிரேமானந்தன்
கொழும்பு-13

**வளர்ச்சி!**

விஞ்ஞானத்தின்
வளர்ச்சியை
உன்
வயது
காட்டுகிறது.

பாத்திமா ஷானா
ஆலம்குலம்-17

## கவிதைப் போட்டி இல-13



படத்தைப் பார்த்தவுடன் மனசுக்குள் கவிதைவரிகள் வந்து எட்டிப்பார்க்கின்றனவா? நல்லது. தட்டிக்கொடுத்து வெளியே கொண்டுவந்து மடலில் இடம்கொடுங்கள். தபாலட்டைதான் மடல். அனுப்புங்கள்! சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா 100/- காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 28.8.93.

-முகவரி-
கவிதைப் போட்டி இல:13
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கொழும்பு -5

## வாசக(ர்)சாலை

**காலத்தின் தேவை**

அரசியல் அலசல் பகுதி, எக்ஸ்ரே ரிப்போட் உள்ளதை உள்ளபடியே ஆராய்ந்து அரசியலை மதிப்பிடும் முரசின் துணிச்சல் இன்றைய காலத்தின் தேவைதான்.

ஏ.தட்சணாமூர்த்தி-மட்டக்களப்பு.

நகர ரவுண்டப் காதலர்களை பயமுறுத்துகிறதே சார். ஒற்றனுக்கு நாங்களும் தகவல் கொடுத்தால் ஆராய்வாரா?

பூ.ஜெஸ்மின்-கொழும்பு-07

*சுவாரசியமான தகவல்கள் எனில் அனுப்பலாம். அனுப்புக.*

*(ஆ.ர்)*

ஆடிவேல் ரதம் நின்ற கோவிலில் குண்டுவெடித்ததைப் பற்றி பூசி மெழுகாமல் செய்தி விளியிட்டது முரசு மட்டும்தான். வரவேற்கிறோம்.

கே. நந்தபாலன்-பண்டாரவளை.

சொல்லும் முறையில் நளினம். உள்ளத்தை கொள்ளை கொள்ளும் அம்சம் பல என்று அசத்திவிடுகிறீர்கள். வாழ்க முரசு.

மா.தர்சினி- கண்டி.

கலைஞரின் இலக்கிய நயத்தை என்னை மறந்து சுவைத்தேன். கண்ணே மதுமிதா தான் இப்போது எம்மை மயக்கிக் கொண்டிருக்கிறாள்.

கே.வாணி-வத்தளை.

முகில் வண்ணனின் சிறுகதைகள் அருமையாக உள்ளன. சுரேசின் நிமிடக் கதைகளும் ஜோர். தொடரட்டும்.

வி.எம்.பாசில்
நீர்கொழும்பு.

தினமுரசின் வருகை என்போன்ற கலைஞர்களுக்கு ஒரு வரப்பிரசாதம். தினமுரசு வளர எம்மால் முடிந்த உதவிகளைச் செய்வோம்.

எப்.லெனாட்குமார்-அப்புத்தளையூர்.

உனது பணிகள் சிறந்திட வேண்டும் அதன் பலனை நான் அடைந்திட வேண்டும்.

ஆறுமுகம் விஜயகுமார்- நுவரெலியா.

கண்ணே மதுமிதா குறும்பான குறுகுறுப்பான தொடர்தான். யார் அந்த ரசிகன். பாராட்டுக்கள்.

எஸ்.கௌரி-திருக்கோணமலை.

பல்சுவை அம்சங்களை வாராவாரம் வாரி இறைக்கும் தினமுரசே நீ பத்திரிகை உலகின் பாரிவள்ளலோ?

ஏ.ஆர் இத்ரீஸ் - மூதூர்-2

அஸ்வதியின் கதை மத வேற்றுமையை விதைப்போருக்கு சாட்டை அடி.

எம். இஸ்மாயில் - அநுராதபுரம்.

வெளிவந்த குறுகிய காலத்தில் பல நெஞ்சங்களில் இடம் பிடித்த பத்திரிகை நீ..

சு.அஸீமா - எருக்கலம்பிட்டி.

உடலுக்கு அவசியம் சிரசு ஆட்சிக்கு உறுதி அரசு எனக்கு விருந்து(தின)முரசு.

ஆர்.சங்கர் - மூதூர்-03

தேன்சிந்தும் தினமுரசே, வாரம் ஒரு முறை உன்னைக் காணாமல் இருக்க முடிவதில்லை.

மா.தங்கேஸ்வரி - மட்/புதுக்குடியிருப்பு.

முரசம் மூலம் எம்மை அன்போடு அரவணைக்கும் முறையே முரசின் தனிச் சிறப்புத்தான்.

ஆர்.சங்கீதா
கந்தப்பளை.

காதுலபூ அருமையிலும் அருமை. இன்னும் எழுதுங்கள். வாசிக்கின்றோம். வாசிப்போம்.

எஸ்.எம்.மனாப்தீன்-வத்தளை.

முரசே! எழுத்துலகை ஆட்சி செய்ய வந்த அரசே! உன் சூடு சுகமானது.

மு. றயீஸ்தீன்-சிலாவத்துறை.

தினமுரசே உன்னைக் காணாத கண்ணென்ன கண்ணோ? நீ வளர மனப்பூர்வமான வாழ்த்துக்கள்.

எஸ்.ஸ்ரீஹரி-இரத்தினபுரி.

என் இனிய தினமுரசே வாரம் தோறும் உன் வரவை எதிர்பார்க்கும் எனக்கு நீ சுமந்துவரும் அத்தனை அம்சமும் வெகுஜோர்.

பஸ்லியா பரீட் - புத்தளம்.

புதிய-புதிய அம்சங்களை அள்ளித் தாருங்கள். சுவைக்கக் காத்திருக்கிறோம். இளைய தலை முறையின் கைகளில் தினமுரசு இல்லையென்றால் அது ஒரு குறையென்று ஆக்கிவிட்டிரே!

செல்வி: அனிதா சுப்பிரமணியம்
மஸ்கெலியா.

என் பேரன்பிற்குரிய தினமுரசே! உனது ஒவ்வொரு வார்த்தையும் வாழ்க்கைக்கான வசந்தத்தின் வழி காட்டிகள்.

மர்லினா பறகாத்-இக்கிரிகொல்லாவ.

சிவந்துவிட்ட நம் மண்ணின் சிந்தனைக்குரிய விடயங்களை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறாய்.

தயா-விஜி-றோஸ்-நுவரெலியா.

சினிவிசிட்டில் படங்களைப் போட்டால் போதுமா பெயர்களையும் போட வேண்டாமா?

என்.ரி.நிகாருடின்-அக்கரைப்பற்று.
அருஸியா இஸ்மாயில்- பாணந்துறை,
என்.டி.எம். சனூஸ்- தெமட்டகொட.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## திருமலையில் திட்டமிட்ட குடியேற்றங்கள்! தமிழ் அமைப்புக்கள் குரல் கொடுக்குமா?

திருமலை மாவட்டத்தில் பெரும்பான்மை இனமக்கள் திட்டமிட்டு குடியேற்றப்படுவதாகவும், பொருளாதார உதவிகள் பெருமளவில் வழங்கப்படுவதாகவும் திருமலையில் உள்ள தமிழ் பேசும் மக்கள் கவலை தெரிவித்து வருகின்றனர்.

வீடொன்றை புனரமைக்க ரூபா 15 ஆயிரம் வழங்கப்படும்போதும் தமிழ் பேசும் மக்களுக்கு அந்த உதவி கிடைப்பதில்லை என்று பலர் குறை சொல்லுகின்றனர்.

தமிழ் அமைப்புக்கள் இந்த விடயத்தில் ஒன்றுபட்டுக் குரல் கொடுக்கவேண்டும் என்றும், அவர்களில் பலர் அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர்.

## இனப்பிரச்சனை இருப்பதை அரசு மறுக்கிறதா? ஜனாதிபதியின் செயலாளரின் அறிக்கையால் சந்தேகம்!

இலங்கையில் இனப்பிரச்சனை என்பது இல்லையென்றும், பயங்கரவாதப் பிரச்சனையே இருப்பதாகவும் இலங்கை ஜனாதிபதியின் செயலாளரால் வெளியிடப்பட்ட கடிதம் குறித்து பல்வேறு சந்தேகங்கள் எழுந்துள்ளன.

அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்று ஒருபுறம் வலியுறுத்தப்படும் நிலையில், இனப்பிரச்சனை இங்கில்லை என்று கூறுவது முன்னுக்குப்பின் முரணாக உள்ளதாக அரசியல் தீர்வில் அக்கறையுள்ளவர்கள் கூறுகின்றனர்.

தமிழ் அமைப்புக்களின் வட்டாரங்களும் ஜனாதிபதியின் செயலாளரது கடிதம் குறித்து அதிருப்தி கொண்டுள்ளதை அறியமுடிகிறது.

வெளியார் தலையீடுகளை எந்தவொரு நாட்டு அரசும் விரும்பாது. அந்த வகையில் ஜனாதிபதியின் செயலாளர் தன் கருத்துக்களை வெளியிட்டிருப்பாரேயானால் அது புரிந்து கொள்ளக்கூடியதேயாகும்.

வெளியார் தலையீடுகளை வேண்டாம் என்று மறுக்கும்போது உள்நாட்டுக்குள் பிரச்சனைகளை தீர்க்கும் மனம்திறந்த போக்குகளும் முயற்சிகளும் முக்கியமானவையாகின்றன.

ஆனால், இனப்பிரச்சனை என்ற ஒன்று பூதாகரமாக இருப்பதை மறுத்துக்கொண்டு பிரச்சனைகளுக்கு தீர்வுகாண்பது எவ்வாறு?

புலிகள் அமைப்புப் பற்றி மாறுபட்ட அபிப்பிராயங்கள் கொண்டிருப்போர் கூட இனப்பிரச்சனைக்கான அரசியல் தீர்வு காணப்படாமல் புலிகளை வெற்றிகொள்ள முடியாது என்றே கூறுகிறார்கள்.

பாதுகாப்புப் படை அதிகாரிகள் சிலர்கூட இனப்பிரச்சனையை இராணுவத் தீர்வினால் தீர்த்துவிட முடியாது என்றுதான் கூறுகின்றனர்.

அப்படியிருக்கும்போது இனப்பிரச்சனை எங்கேயிருக்கிறது என்று கேட்பது தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகளை புறக்கணிப்பதாகவே அமையும். அது நம்பிக்கையீனங்களையே தோற்றுவிக்கும்.

பிரச்சனைகளை தீர்ப்பதற்கு முன் பிரச்சனைகள் இருப்பதை ஒப்புக் கொள்ள வேண்டும். அதன்பின்னரே எவ்வாறு தீர்க்கலாம் என்ற கருத் தொருமிப்புகளுக்கு களம் காண முடியும்.

தமிழ் பேசும் மக்களிடையே எழுந்துள்ள நம்பிக்கையீனங்களை போக்குவது அரசின் கடமையாகும்.

## புதிய சட்டக் கோவை புலிகள் வெளியிட்டனர்!

(யாழ் நிருபர் வர்மா)

'தமிழீழ சட்டக்கோவை' என்ற பெயரில் சட்டநூல் ஒன்றை புலிகள் அமைப்பினர் யாழ்ப்பாணத்தில் வெளியிட்டுள்ளனர்.

வடபகுதியில் புலிகள் அமைப்பினரின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் நீதி-நிர்வாக அமைப்புக்கள் அந்தச் சட்ட விதிகளின் படியே இனிமேல் செயல்பட வேண்டும் என்று கூறப்படுகிறது.

புலிகள் அமைப்பினரால் உருவாக்கப்பட்டுள்ள 'தமிழீழ நீதி மன்றங்கள்' குறிப்பிட்ட சட்டக் கோவைப்படியே செயல்பட உள்ளன. அந்த நீதிமன்றங்களில் சட்டவாதம் செய்வோர் புலிகளின் தலைமைக்கு விசுவாசமாக சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொள்ள வேண்டும். புதிய சட்டக் கோவையின் படியே தமது வாதங்களை முன்வைக்க வேண்டும் என்று புலிகள் அறிவித்துள்ளனர்.

தமிழகச் செய்தி

## ரஜனி அரசியலுக்கு வருவாரா? வரப்போகும் வள்ளி விடை தருவாளாம்!

(ஏழுமலை)

பிரபல நடிகர் ரஜனிகாந்த் அரசியலுக்கு வருவாரா? இதுதான் தமிழக அரசியலில் பரபரப்பான கேள்வி.

தனக்கு அரசியலில் ஆர்வமில்லை என்றே ரஜனிகாந்த் கூறிவருகிறார். எனினும் அவரது படங்களில் இடம் பெறும் அரசியல் வாடை கொண்ட சில வசனங்கள் அரசியலுக்கு ரஜனி வரக்கூடுமோ என்ற சந்தேகத்தை மேலும் அதிகப்படுத்துகின்றன.

அண்மையில் தமிழ்நாட்டின் தலைநகரமான சென்னையில் 'எஜமான்' படத்தின் வெள்ளிவிழா நடத்தப்பட்டது.

அதில் கலந்து கொண்டு ர்ஜனிகாந்த் உரையாற்றினார்.


"சமீபகாலமாக நான் அரசியலுக்கு வரப்போவதாக எல்லோரும் பேசிக் கொள்கிறார்கள். பத்திரிகைகளில் செய்தி போடுகிறார்கள். விரைவில் வரவிருக்கும் 'வள்ளி' படத்தில் ஒரு கதாப்பாத்திரம் மூலமாக அரசியல் பற்றி என்னுடைய கருத்தைச் சொல்லியிருக்கிறேன். அதன் பிறகு நான் அரசியலுக்கு வருவேனா இல்லையா என்பதை எல்லோரும் புரிந்து கொள்வார்கள்." இவ்வாறு ரஜனிகாந்த் கூறினார்.

இதே வேளையில் 'செக்ஸ் சாமியார்' என்றழைக்கப்பட்டு இந்தியாவில் இருந்து வெளியேற்றப்பட்ட 'ரஜனீஸ்' எழுதிய நூல்களின் கண்காட்சியிலும் ரஜனி கலந்து கொண்டார்.

சென்னையில் நடைபெற்ற அக்கண்காட்சியில் கலந்து கொண்ட ரஜனிகாந்த் மறைந்த 'ரஜனீஸ்' மீது தனக்கு ஈடுபாடு இருப்பதாக தெரிவித்தார். ரஜனிகாந்த் இவ்வாறு பேசியது பலருக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. ரஜனிகாந்த் எதையும் வெளிப்படையாகப் பேசுகின்றவர் என்பதால் 'ரஜனீஸ்' சாமி குறித்து அவர் வெளியிட்ட கருத்து சர்ச்சைகளை உருவாக்கியுள்ளது. எனினும் ரஜனிகாந்த் அவ்வாறான சர்ச்சைகளை பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

## 'தினமுரசு' செய்திக்கு கைமேல் பலன்! புதிய கட்டிடத்தில் நிந்தவூர் தபாலகம்!!

(நிந்தவூர் நிருபர்)



பல்லாண்டு காலமாக பழைய கட்டிடம் ஒன்றில், இயங்கிவந்த நிந்தவூர் பிரதம தபாலகம், "தினமுரசு" படத்துடன் வெளியிட்ட செய்தியின் பயனாக இம்மாதம் முதல் புதிய கட்டிடம் ஒன்றுக்கு மாற்றப்பட்டு இயங்கி வருகின்றது.

"தினமுரசு" கடந்த 18-24.7.1993 இதழில் "தபாலகத்தின் பரிதாபகரம்" எனும் தலைப்பில் இந்த தபாலகம் இயங்கிய பழைய கட்டிடத்தின் படத்துடன் வெளியிட்ட செய்தியின் பயன் இது என்று நிந்தவூர் மக்கள் பாராட்டுத் தெரிவிக்கின்றனர்.

ஒட்டை, உடைசல்களுடன் என்று இடிந்துவிழுமோ என்ற நிலையிலிருந்த தபாலகத்தின் பழைய கட்டிடத்தை மிகத் துல்லியமாகக் காட்டியது தினமுரசு.

தற்பொழுது நிந்தவூர் பிரதான வீதியில் அமைந்திருக்கும் தனியார் ஒருவருக்குச் சொந்தமான புதிய கட்டிடம் ஒன்றுக்கு மேற்படி தபாலகம் இடமாற்றப்பட்டு இயங்கி வருகின்றது.

புதிய கட்டிடத்தில் தபாலகம் இயங்குவதைப் படத்தில் காண்க.

## ஒருநாள் போட்டித் தொடரில் வெற்றி! நடுவர்களின் போக்கில் அவநம்பிக்கை!!

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே நடந்து முடிந்த கிரிக்கெட் போட்டிகளில், இந்தியா டெஸ்ட் பந்தயத் தொடரில் வெற்றியீட்டியிருந்தது. இலங்கை ஒரு நாள் சர்வதேச பந்தயத் தொடரில் இருபந்தயங்களில் வென்றதன் மூலம் இந்த ஒரு நாள் சர்வதேச தொடரில் தனது வெற்றியை நிலை நாட்டிக் கொண்டது.

இந்தியா, மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் பந்தயத் தொடரில் ஒரு போட்டியில் ஒரு ஓட்டத்தினால் தனது வெற்றியை ஈட்டியிருந்தது.

கிரிக்கெட் பந்தயங்களில் ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளே விறு விறுப்பானவையும், ஆரம்பமுதல் முடிவு வரை ரசிகர்களை சலிப்படையாது இருக்கவும் செய்கின்றன.

இந்தியாவுக்கும், இலங்கைக்குமிடையிலான ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இரு நாடுகளுமே குறிப்பிடத்தக்க வகையில் ஆடியிருந்தன. இருந்த போதிலும் இலங்கை அணி இரு போட்டிகளில் தனது வெற்றியைச் சம்பாதித்திருந்தது.

கெத்தாராம விளையாட்டரங்கில் இடம் பெற்ற இரண்டு ஒருநாள் சர்வதேச பகல்-இரவு போட்டி மிக விறுவிறுப்பானதாக அமைந்திருந்தது. இப்போட்டியில் இலங்கை முதலில் துடுப்பெடுத்தாடி 206 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

தொடர்ந்து ஆடிய இந்திய அணி வெற்றி இலக்கை எட்டும் வகையில் திறமாக ஆடியிருந்தது. இந்தியாவின் முன்னணித் துடுப்பாட்ட வீரர்களான நவஜோத் சித்து, விநோத் கம்ப்ளி ஆகியோர் விரைவில் ஆட்டமிழந்திருந்தனர்.

ஆயினும் மனோஜ் பிரபாகர், மற்றும் இந்திய அணித்தலைவர் மொஹமட் அஸாருத்தீன் ஆகியோர் அபாரமாக விளையாடி தமது அணியை ஆபத்தான சூழ்நிலையிலிருந்தும் காப்பாற்றியிருந்தனர்.

இருந்தபோதிலும் இவர்களின் சோடி ஆட்டத்தில் முறிவு ஏற்பட்டதையடுத்து இந்திய அணி ஆபத்தை எதிர்நோக்கலாயிற்று. தொடர்ந்து வந்த இந்திய துடுப்பாட்ட வீரர்கள் உறுதியாக ஆடுவார்கள் என்று எதிர்பார்த்த போதிலும், அவர்கள் ஒருவர் பின் ஒருவராக அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

இதனையடுத்து வெற்றி இலக்கை அடைவதற்கு எட்டு ஓட்டங்கள் மட்டுமே இருக்கையில் 196 ஓட்டங்களை மட்டுமே பெற்று இந்தியா தோல்வியைத் தழுவியிருந்தது. இலங்கை 204 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இந்திய அணியின் சார்பில் ஒரு நாள் சர்வதேச பந்தயங்களில் மனோஜ் பிரபாகரும், காப்டன் அஸாருதீனுமே சிறந்த வகையில் ஆடியிருந்தனர். மனோஜ் பிரபாகர் பந்து வீச்சிலும், துடுப்பாட்டத்திலும் தனது திறமையை வெளிக்காட்டியமை இந்திய ரசிகர்களை மட்டுமல்லாது இலங்கை ரசிகர்களையும் வெகுவாகக் கவர்ந்திருந்தது.



இதைவிட பந்து வீச்சாளர் அனில் கும்ப்ளேயும் தனது பங்களிப்பை குறிப்பிடத்தக்க வகையில் செய்திருந்தார். இவரது சுழல்பந்து வீச்சு குறிப்பிடத்தக்க வகையில் அமைந்திருந்தது.

காப்டன் மொஹமட் அஸாருதீன் இந்தியாவின் மூன்று ஒரு நாள் சர்வதேச பந்தயங்களிலும் 50 ஓட்டங்களுக்கு மேல் பெற்றிருந்தமை அவரது பொறுப்பான ஆட்டத்தை வெளிக்காட்டுவதாக இருந்தது.

அத்துடன் அஸாருதீன் அவ்வப்போது ஆறு ஓட்டங்கள் சிலவற்றையும் அடித்து கிரிக்கெட் அரங்கை களை கட்டச் செய்திருந்தார்.

இலங்கை அணியைப் பொறுத்தவரை இலங்கை வீரர்களின் ஆட்டமும் குறிப்பிடத்தக்கதாகவே இருந்தது. இலங்கை வீரர்களில் ரொஷான் மஹாநாம, அர்ஜுன ரணதுங்க, பந்துவீச்சாளர் பிரமோதயவிக்கிரமசிங்க ஆகியோர் திறமாக ஆடியிருந்தனர்.

சுழல் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் ஒரு நாள் சர்வதேச பந்தயங்களில் விக்கட்டுகளை எதிர்பார்த்தளவு கைப்பற்றாவிடினும், ஓட்டங்களைக் கட்டுப்படுத்துவதில் முனைப்பாக இருந்தார். இவரது சாதுர்யமான பந்து வீச்சு பல சமயங்களில் இந்திய துடுப்பாட்ட வீரர்களை திக்குமுக்காடச் செய்திருந்தது.

இது தவிர இலங்கையர்களின் பந்து தடுத்தலும் (Fielding) குறிப்பிடத்தக்கதாக இருந்தது. இந்தியர்களும் இலங்கையர்களுக்குச் சளைக்காதவர்களாகவே இருந்தனர். ஆயினும் இலங்கை அணியினர் லாவகமாக பாய்ந்து பந்துகளைத் தடுப்பதில் அசாதாரண திறமையை வெளிப்படுத்தியிருந்தனர்.

மொரட்டுவ டிரோன் பெர்னாண்டோ விளாயாட்டரங்கில் இடம் பெற்ற மூன்றாவது ஒரு நாள் சர்வதேச விளையாட்டுப் போட்டியில் இந்தியாவை இலங்கை தோற்கடித்திருந்தது. இந்த போட்டியில் இலங்கையின் துடுப்பாட்ட வீரர் ரொஷான் மஹாநாம 92 ஆட்டங்களைப் பெற்று அபாரமாக ஆடினார். அவர் 100 ஓட்டங்களை எட்டுவார் என்று அனைவரும் எதிர்பார்த்த வேளை காலில் சதைப்பகுதியில் கொளுவிக்கொண்ட வேளை 92 ஓட்டங்களுடன் அவர் ஆட்டத்தை இடை நிறுத்திக் கொண்டார்.

ஆயினும் இலங்கை அணி இப்பந்தயத்தில் 231 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது. முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 227 ஓட்டங்களை மட்டுமே பெற்றிருந்தது.

இலங்கை, இந்திய அணிகளுக்கிடையிலான போட்டிகளில் நடுவர்களின் பங்களிப்பே மிகவும் கவலையளிப்பதாக இருந்தது. குறிப்பாக எல்.பி.டபிள்யு (LBW) குறித்த தீர்ப்புகளை வழங்கும்போது ஒரு தெளிவற்ற - மற்றும் சந்தேகத்துக்கிடமான வகையிலேயே அவர்கள் நடந்து கொண்டிருந்தனர். இத்தகைய போக்கு அவர்கள் மீது சந்தேகத்தைத் தோன்றச் செய்வதாகவே அமைந்திருந்தது. இவ்வாறு அவர்கள் தொடர்ந்து நடந்து கொள்வார்களேயானால் சர்வதேச ரீதியான அபிமானத்தை இழக்க நேரிடலாம் எனக் குறிப்பிடலாம்.

## வடக்கே குண்டுவீச்சுக்கள்! புலிகளுக்கு இழப்பில்லை!

கடந்தவாரத்தில் வடபகுதியில் பரவலான விமானக் குண்டுவீச்சுக்கள் இடம்பெற்றதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

எழுதுமட்டுவாள் பகுதியில் நடைபெற்ற விமானக் குண்டுவீச்சில் இரு வீடுகள் முற்றாகச் சேதமடைந்ததாக தெரிகிறது.

சமீபத்திய விமானக் குண்டுவீச்சுக்களால் புலிகள் அமைப்பிற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. குடியிருப்புகளே சேதமடைந்துள்ளன என்று கூறுப்படுகிறது.

காரைநகரில் உள்ள இராணுவக் காவலரண்கள் மீது புலிகள் மேற்கொண்ட ஷெல் தாக்குதலையடுத்து இராணுவத்தினரும் பதில் தாக்குதல் நடத்தினார்கள். காரைநகரில் இருந்து ஏவப்பட்ட ஷெல்கள் பொன்னாலைப் பகுதியில் வந்து விழுந்தன.

மன்னார் பகுதியிலும் புக்காரா விமானங்களின் குண்டுவீச்சுக்கள் இடம் பெற்றுள்ளன.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

(சிறு விளம்பரப் பகுதி)

# லிங்கவான்
## (ஆண்மை சக்தி மாத்திரைகள்)

இளமையில் சுய இன்பத்தினாலும் அளவுக்கதிகமாக பெண்களுடன் உறவு வைத்துக் கொண்டதாலும் வயதுக்கு கூடுதலான பெண்களுடன் தொடர்பு கொண்டதாலும் உண்டாகும் பலவீனத்தால் இல்லற வாழ்வில் பூரண திருப்தியின்றி ஏமாற்றமடையும் ஆண்களின் பலவீனங்கள், நரம்புத்தளர்ச்சி, சோர்வு, சொப்பன ஸ்கலிதம், துரித ஸ்கலிதம், இச்சையை பூர்த்தி செய்ய முடியாமை, வீரிய குறைவு ஆகியவற்றை குணப்படுத்தி இழந்துபோன சக்தியையும் வீரியத்தையும் ஆண்மையையும் இளமைத் துடிப்பையும் மீட்டுந்தந்து வாழ்வில் இன்பத்தையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்தும் அதி சக்தி வாய்ந்த மாத்திரைகள்.

**விலை ரூபா 60/-**

**Luxmi Stores, 75, Sri Kathiresan St., Col-13.**

(காலை 7.00 மணியிலிருந்து இரவு 10.00 மணிவரை திறந்திருக்கும்)

**Shanthi Book Shop, 235, Olcott Mawatha, Colombo-11.**

**CHOICE PALACE, 67, Main Street, Kalmunai.**

## ஒளி வீசிய தேங்காய் திருமலையில் அதிசயம்

(திருகோணமலை நிருபர்)

இரவுச் சமையலுக்குத் தேங்காய் உடைத்த போது அது ஒளிவிசத் தொடங்கியது. அதைத் துருவ ஆரம்பித்ததும் ஒவ்வொரு தனிப் பூவும் ஒளி வீசி மின்னத் தொடங்கின.

இச்சம்பவம் திருகோணமலை அரசடிப் பகுதியிலுள்ள வீடொன்றில் நடந்தது. அக்கம் பக்கத்தில் இச் செய்தி பரவியதைத் தொடர்ந்து திருவிழாபோல் பெருந்தொகையான மக்கள் குழுமத் தொடங்கி விட்டனர். கூட்டத்தைக் கண்ட பொலிசாரும் அவ்விடத்துக்கு வந்தபோது இந்த அதிசயத்தைக் கண்டு வியந்தனர்.

இருட்டில் இதன் உதவி கொண்டு அருகிலுள்ள பொருட்களைக் கூடத் தெளிவாகப் பார்க்க முடிந்தது. இரண்டு நாட்கள் இவ்வொளி நீடித்தது.

## வேண்டும் புதியதொரு பாடநிலையம் குருநாகல் பட்டதாரிகள் சங்கம் விண்ணப்பம்

(ஏ.எல்.ஏ. ஸலாம்)

இவ்வருடம் மகரகம தேசிய கல்வி நிறுவனம் நடாத்துகின்ற கல்வி பட்டப்படிப்பிற்கான டிப்ளோமா பயிற்சிக்கென குருநாகல் மாவட்டத்தில் இருந்து அதிகமான பட்டதாரிகள் தோற்றியிருப்பதால் குருநாகல் நகரில் ஒரு பாடநிலையமொன்றை அமைத்துத் தரவேண்டுமென குருநாகல் மாவட்ட பட்டதாரிகள் சங்கம் அவசர வேண்டுகோள் ஒன்றை மகரகம தேசிய கல்வி நிறுவனத்துக்கு விடுத்துள்ளது.

குருநாகல் வாழ் பட்டதாரிகள் கண்டி அல்லது கொழும்பு பாடநிலையங்களுக்குச் செல்வது மிகவும் சிரமம் ஆதலால் குருநாகலில் புதியதொரு பாடநிலையம் அவசியம் என சுட்டிக்காட்டியுள்ளனர். தங்களது கோரிக்கைகளை கையொப்பமிட்ட மகஜர் ஒன்றின் மூலம் தேசிய கல்வி நிலைய பணிப்பாளருக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல—12

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | ■ | 2 |
| | ■ | 3 | | | ■ | |
| | | 4 | ■ | 5 | | |
| ■ | 6 | | | | ■ | |
| 7 | ■ | | ■ | ■ | 8 | ■ |
| | 9 | | | | | |
| | 10 | ■ | | | | 11 |

### இடமிருந்து வலம்

1. இதழைச் சிவக்க வைக்கும்.
3. சரிக்கு எதிரானது.
4. வணக்க ஸ்தலங்களில் ஒன்று. (வலமிருந்து இடமாக உள்ளது)
5. குறித்து வைத்துப் புரட்டிப் பார்த்தால் பழைய கதை சொல்லும். (குழம்பி இருக்கிறது)
6. போலித்தனமான ஒன்று.
9. ஹிட்லரை இப்படியும் அழைப்பதுண்டு.
10. இது வந்தால் சிலருக்கு கண்ணில் நீர் வரும்.(வலமிருந்து இடமாக உள்ளது)
11. கொட்டமடித்தலை இப்படியும் சொல்லலாம்.(மாறியுள்ளது)

### மேலிருந்து கீழ்

1. குளத்திற்கு இதுவும் அழகு.
2. இது மகளிரின் கரத்திற்கு அழகு.
3. நிதி இவர் கையில் இருக்கும்.
7. இது சொல்வதைக் கேட்டுப் பலன் பார்ப்பவர்களும் உண்டு.
8. தினமுரசின் பக்கமொன்றில் இதற்கென்று ஒரு பகுதியே இருக்கிறது.

**இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டை ஒன்றில் வெட்டி ஒட்டி 28.8.93 இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்ப வேண்டிய முகவரி:**

**குறுக்கெழுத்துப் போட்டி இல.-12**
**தினமுரசு வாரமலர்**
**88/14, சோமாதேவி பிளேஸ்,**
**கிருலப்பனை**
**கொழும்பு-05.**

சரியான விடையை எழுதி அனுப்பும் பத்து அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-10க்கான சரியான விடைகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 ச | ங் | 2 கு | ■ | 3 வா | ரி | 4 சு |
| 5 ப | ண் | டி | கை | ■ | 6 ப | ரு |
| த | 7 ஆ | கா | ர | ம் | ■ | ட் |
| ம் | ■ | ர | தா | 8 லா | ட் | டு |
| ■ | 9 க | ன் | னி | ■ | 10 நா | ■ |
| 11 பா | சி | ■ | 12 த | ர | க | ர் |
| 13 தி | ரா | ட் | சை | ■ | ம் | ■ |

### குறுக்கெழுத்துப் போட்டி இல.10ல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்

1. செல்வி. ரோகிணி சண்முகநாதன் கல்முனை.
2. கே. சுத்தானந்தன் குருநாகல.
3. எம்.ஐ.எஸ்.ஃபரீனா அக்குறணை.
4. எஸ். நிருபராஜ் இரத்தினபுரி.
5. பி. அபிராமி பொகவந்தலாவை.
6. கே. பத்மா இறம்பொடை.
7. எஸ்.என். சாஹிர் கண்டி.
8. ஆர். பஸ்மிலா பொலநறுவை.
9. எஸ். கலைவாணி திருமலை.
10. எம். இஸாருதீன் நீர்கொழும்பு.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/- வழங்கப்படும்.

## கற்பனையான காதல் கனவுகள்! தற்கொலையான இளைஞர் யுவதிகள்

(குருநாகல் நிருபர்)

காதல் விவகாரங்களினால் குளியாப்பிட்டிய தொகுதியில் கடந்த இரண்டு மாத காலத்துக்குள் 22க்கு மேற்பட்ட இளைஞர், யுவதிகள் அலரிக்காய் சாப்பிட்டும், கிருமிநாசினி அருந்தியும் தற்கொலை செய்து கொண்டுள்ளனர் என ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## புதிய தமிழ் புகட்டும் பாலம்




குருநாகல் - கொழும்பு வீதியில் 'நாங்கல்ல' என்னும் இடத்தில் உள்ள குறுகிய ஒரு பாலம் பழுதடைந்துள்ளது. முன்னால் குறுகிய பாலம் "முள்லை குநகய பாலம் உணரு" என எழுதியிருப்பதைக் காண்கிறீர்கள். இது புதிதாகத் தமிழ் கற்போருக்கு புதிய தமிழாக அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

(படம் - கல்முனை நிருபர்)

## கல்லூரி மாணவர்களின் கலை - இலக்கிய முயற்சி

(மாத்தறை நிருபர்)

காலி கிந்தோட்டை ஸாஹிரா கல்லூரி, அல்-ஹிரா என்ற பெயரில் காலாண்டு சஞ்சிகையொன்றை வெளியிட்டுள்ளது. இது இந்த வித்தியாலயத்தின் முதலாவது கலை, இலக்கிய வெளியீடாகும் என்று சஞ்சிகையின் ஆசிரியர் ஜனாப் எம்.எஸ்.எம். ஹிசாம் (பிரதி அதிபர்) தெரிவித்தார்.

கடந்த இரண்டாந் திகதி (2.8.93) பாடசாலை அதிபர் ஜனாப் ஏ.எம்.எம். ஆரிப் அவர்களின் தலைமையில் நடைபெற்ற வெளியீட்டு விழாவில் மாத்தறை மாவட்ட நீதிபதி ஜனாப் ஏடபிள்யூ. அப்துல் ஸலாம் பிரதம அதிதியாகவும் காலி வலய கல்விப் பணிப்பாளர் திரு ஸி. ஜயசிங்க அவர்களும் தென் மாகாண தமிழ் மொழிப் பாடசாலைகளின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஜனாப் ஏ.ஆர்.எம். ஹுஸைன் அவர்களும் விஷேச அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

அன்று, கவிஞர் ஏ.இக்பால் அவர்களின் தலைமையில் "அறிவை அதிகம் அருள்வாயே" என்ற தலைப்பில் நடைபெற்ற கவியரங்கில் கவிஞர்களான எம்.எச்.எம். ஷம்ஸ், எம்.எம். ஸப்வான், மொயீன் ஸமீம், நஸீரா ஹாமீம் ஆகியோர் கலந்து கொண்டு கவிதை பொழிந்தனர்.

மலர் விமர்சன உரையை காதிபுல் ஹக் எஸ்.ஐ. நாகூர் கனியும், பதிலுரையை சஞ்சிகை ஆசிரியர் ஜனாப் எம்.எஸ்.எம். ஹிசாம் அவர்களும் நிகழ்த்தினர்.

பாடசாலை உதவி அதிபர் ஏ.எம்.எம். ஸெய்ன் அல்-ஹிரா வாழ்த்துக் கவிதையை பாடினார்.

மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இவ்விழாவில் இடம்பெற்றன.

## எங்களையும் கவனியுங்கள்

நுவரெலியா மாவட்டத்தில் நாவலப்பிட்டிக்கு அருகாமையில் அமைந்துள்ள எமது கிராமம் பொல்வதுர. பாதையில் குழிகளும், கிடங்குகளும் நடந்து செல்லவே கஷ்டமாக இருக்கிறது. அதுமட்டுமல்ல வசதி வாய்ப்பு என்று சொல்ல எதுவுமே இல்லை. போக்குவரத்துக்கு ஒரு பஸ் வண்டியாவது இல்லாமல் வெளியில் வேலை பார்ப்பவர்கள் படும் இன்னல்கள் சொல்லில் அடங்கா. தண்ணீர், தபால் என்று சொல்லிக் கொண்டே போகலாம்.

ஏன் இந்த நிலை. சம்பந்தப்பட்டவர்கள் இதன் பிறகாவது எம்மை கவனிப்பார்களா.....?

சித்தி வஸீலா சலாகுடீன்
பொல்வதுர.

**உரிய முகவரி மற்றும் சொந்த பெயர் இட்டு வரும் புகார் கடிதங்கள் மட்டுமே ஏற்கப்படும். (ஆ-ர்)**

## தொலைபேசி ஃபிளீஸ்

கொத்தாந்தீவு உப-அஞ்சல் அலுவலகத்திற்கு தொலைபேசி 3 வருடங்களுக்கு முன்பாக இருந்து வந்தது. பிறகு அதை நிறுத்தி விட்டனர்.

இன்று வரை தொலைபேசி தொடர்பு இல்லை. இது இல்லாமல் இப்பகுதியில் வாழும் மக்கள் கஷ்டப்படுகின்றனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இனிமேலாவது தொலைபேசியை கொத்தாந்தீவு உப-அஞ்சல் அலுவலகத்திற்கு வழங்குவார்களா?

எம்.ஏ.ஏ. ஜுனூத்
கொத்தாந்தீவு.

## தமிழ்-கேடு, சீர்திருத்தமா?

மஹரகம பொலிஸ் நிலையப் பெயர் பலகையில் (மணநகம பொலிஸ் நிலயம்) எனப் பிழையாக எழுத்து பொறிக்கப்பட்டுள்ளது. இதுப் போன்ற தமிழ் எழுத்துக்களின் சீர்கேடான துயரத்தை போக்க சம்மந்தப்பட்ட அதிகாரிகள் முன்வருவார்களா?

ம. ஶ்ரீகாந்தன்
இங்கிரிய.

**புகார் பெட்டி**

## தூங்கும் விளக்குகள்!

மூதூர் பகுதியில் பாலநகர் எனும் கிராமத்தில் நான் வசிக்கின்றேன். இந்தக் கிராமத்தில் 1980யில் மின்கம்பங்கள் நடப்பட்டு வீதிகளுக்கு ஒளிவிளக்குகளும் போடப்பட்டன. அதன் பிறகு ஒளி விளக்குகள் பழுதடைந்து இன்று எமதூர் இருள் சூழ்கின்றது. எனவே, எமதூருக்கு ஒளிவிளக்குகள் போட்டு ஒளிமயமாக்கவும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கைகள் எடுக்கவும் தாங்கள் இதைப் பிரசுரிக்குமாறு மிகத் தாழ்வாக கேட்டுக்கொள்கிறேன்.

ஏ.எஸ்.எம். பாயிஸ்
மூதூர்.

## பாதையின் பரிதாபம் பாரீர்

கண்டி மாவட்டத்தில் உடுநுவரை தேர்தல் தொகுதியில் றகுபத்த கிராமம் அமைந்துள்ளது. தெல்லங்கையில் இருந்து றகுபத்த கிராமத்தினூடாக பெதியாகொட செல்லும் பாதை படு மோசமான நிலையில் உடைந்து கிடக்கின்றது. முற்றிலுமே ஏழைகள் வாழும் இக்கிராமத்துக்கு போவதற்கு இந்தப்பாதை ஒன்று மட்டுமே இருக்கின்றது. இந்தப் பாதையில் முதலில் சாதாரண வாகனங்கள் போய்க் கொண்டிருந்தன. ஆனால் தற்போது ஒரு வருடத்துக்கும் மேலாக (மழைகாரணமாக) இப்பாதை உடைந்த நிலையிலுள்ளது. கவனிப்பார் யாருமில்லை. தற்போது இப்பாதையால் (மூன்று சில்லு) ஆடடோவண்டிகூட போகமுடியாது. சம்பூரணமாக எந்த வண்டியுமே போக முடியாமல் பாதை சீர்குலைந்த நிலையிலுள்ளது.

இப்பாதையை சீர்ப்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்குமாறு றகுபத்த கிராம மக்கள் சார்பாக வேண்டுகிறேன்.

**ஏ.எஸ். ஹஸன் - கெலிஓய.**

## ஒரு புறம் மட்டுமே தாக்குவது முறையோ?

என்னைக் கவர்ந்த தினமுரசே! உனது நடுநிலை தவறாத தன்மை கண்டு வாழ்த்துகிறேன்.

ஆனால் வானொலியில் இடம் பெறும் மக்களின் குரல் புலிகளின் குறையை- தவறை மட்டுமே சுட்டிக்காட்டுகிறது. இவைகளை மட்டும்தான் மக்கள் வெறுக்கிறார்களா? ஏன் இராணுவத்தினதும் பொலீஸ் வீரர்களினதும் தவறுகள் எவ்வளவு மக்களுக்கு எதிராக உள்ளன. இவற்றை ஏன் மக்களின் குரல் கண்டும் காணாமல் இருக்கிறது.

முக்கியமாக நான் மக்களின் குரலை எதிர்க்கவில்லை. ஆனால் இரண்டு தரப்பினதும் குறைகளை, தவறுகளை சுட்டிக்காட்டும் போதுதான் தங்கள் பிழையை உணர்வார்கள். எனவே இதற்கு ஆவன செய்யுமாறு தினமுரசு வாயிலாக கேட்டுக் கொள்கிறேன்.

எஸ்.ராஜகுமார் - கல்முனை-02.

## மின்சாரம் கிடைக்குமா?

ஹப்புத்தளை தேர்தற் தொகுதியில் பண்டாரஎலியா எனும் தோட்டத்திற்கு இன்னும் மின்சார வசதியில்லாமல் அங்குள்ள ஒவ்வொரு வீடும் தொடர்ந்தும் இருளில் மூழ்கியபடியே இருக்கிறது.

கடந்த மாகாண சபையில் இருந்தவர்கள் "செய்து தருகிறோம்" என்று சொன்னார்களே தவிர தமது காலம் முடியுமட்டும் செய்து தரவேயில்லை. ஆனால் இம்முறை மாகாண சபைக்கு தெரிவாகியுள்ளவர்கள் இதனை கருத்திற் கொண்டு முன்னவர்களைப் போலில்லாமல் பண்டார எலியாவிற்கு மின்சாரத்தைப் பெற்றுத் தந்து, இருளில் மூழ்கி வாழும் மக்களை வெளிச்சத்திற்கு கொண்டு வர வேண்டுமென்று வேண்டுகிறேன்.

அப்புத்தளையூர் எப். லெனாட்குமார்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# எக்ஸ்ரே ரிப்போர்ட்

—நாரதர்—

கனடாவிலிருந்து என் நண்பர் ஒருவர் அங்கிருந்து நம்மவர்களால் வெளியிடப்படும் பத்திரிகைகள் சிலவற்றை அனுப்பிவைத்திருந்தார்.

தாயகம், உலகத்தமிழர், செந்தாமரை, கனடா ஈழநாடு. நல்ல தரத்தோடு வரும் பத்திரிகைகளை பார்க்க ஆசையாக இருந்தது.

வேறு சிலவும் உண்டு. அவை பத்திரிகைகள் ஆவதற்கு முயற்சி செய்து கொண்டிருப்பவை.

தவிர சிறு சஞ்சிகைகளும் வெளிவருகின்றன. 'தேடல்' என்னும் சஞ்சிகை விசய கனம் கொண்டிருக்கிறது. ஒழுங்காக வருகிறதா என்று தெரியவில்லை.

உலகத்தமிழர் பத்திரிகை விடுதலைப் புலிகள் அமைப்பினரால் மறைமுகமாக ஆனால் பகிரங்க புலி ஆதரவுப் பத்திரிகையாக வெளிவருகிறது.

கனடாவில் உலகத் தமிழர் இயக்கம் என்ற பெயரில் புலிகள் அமைப்பினர் செயல்பட்டு வருகின்றனர்.

உலகத்தமிழர் இயக்கத்தின் இலட்சினையில் புலி இல்லையே தவிர, புலிகள் இயக்க இலட்சினை போலே வடிவமைக்கப்பட்டுள்ளது. பத்திரிகையிலும் அந்தச் சின்னம் காணப்படுகிறது.

தாயகம் பத்திரிகை யாரால் நடத்தப்படுகின்றது என்பதை ஆராய்வதை விடுத்து அதன் கருத்துக்களில் கவனம் செலுத்தினேன். பக்கச் சார்பின்மை தெரிந்தது. பாராட்டக்கூடிய விசயம்.

செந்தாமரை முன்னர் புலிகளுக்கு சார்பான கருத்துக்களை வெளியிட்டதாக சொன்னார்கள். இப்போது பார்த்தபோது முழுமையாக அப்படிச் சொல்லிவிட முடியாது என்றே படுகிறது.

இலங்கையில் பிரபல பத்திரிகையாளராக இருந்த திரு.டி.பி. ஜெயராஜ் செந்தாமரைக்கு ஆசிரியராக இருக்கிறார்.

இந்த முதுபெரும் பத்திரிகையாளர் கனடாவில் இனம் தெரியாதோரால் தாக்கப்பட்டதும் கவலைக்குரிய விசயம். தாக்கியவர்கள் கலப்படமற்ற இலங்கைத் தமிழர்கள்.

கிளாலிக் கடலேரியில் புலிகளின் ஆதிக்கம் மேலோங்கியிருக்கிறது. திட்டமிடப்பட்ட படகுச் சேவை நடக்கிறது என்று அச் செய்தி தெரிவிக்கிறது.

அச் செய்தி வெளியாகி சரியாக இரு வாரங்களின் பின்னர் (29.07.93) கிளாலிக் கடலேரியில் கடற்படையினர் தாக்கினார்கள். சாதாரண பயணிகள் பலியானார்கள்.

இலங்கைக் கடற்படையினரின் நவீனரக போர்படகுகளோடு நேரடியான மோதல் ஒன்றில் வெற்றி பெறுவது புலிகளுக்கு கடினமான காரியம்தான்.

கடற்படையினருக்கு விமானப் படையினரின் உதவியும் விரைந்து கிடைப்பதால் கடற்புலிகளால் தாக்குப்பிடிக்க முடியாது.

எனினும் கடற்படையினர் எதிர்பாராத தருணங்களில் குறைந்தளவு வசதிகளோடு

பொதுமக்கள் சோதனையிடப்படுவார்கள். பயமின்றி பயணம் செய்ய முடியாது என்று வெளிக்கு காரணங்கள் கூறப்பட்டன.

ஆனால் யாழ் குடாநாட்டின் மீதான தரைவழி முற்றுகையின் ஒரு பகுதியை உடைப்பதே புலிகளின் எண்ணமாக இருந்தது.

அக் கோரிக்கை எவராலும் ஏற்றுக் கொள்ளப்பட முடியாத ஒன்றாகப் போனதால் பின்னர் அக்கோரிக்கையை புலிகள் மெல்லக் கைவிட்டனர்.

தற்போதுள்ளதைப் போல கிளாலிக் கடலேரி மூலமாகவே போக்குவரத்து நடக்கட்டும் என்றும் புலிகளால் ஒரு ஆலோசனை முன்வைக்கப்பட்டது.

தமது கடல் போக்குவரத்தை சீராக்கிக் கொள்வதே அக்கோரிக்கையின் மறைபொருளாக விளங்கியது.

பொதுமக்களின் பய உணர்வு பற்றிப் புலிகள் குறிப்பிடுவதும், அதை ஒரு சாட்டாகச் சொல்லி பூநகரிப் பாதை திறப்பு விவகாரத்தை இழுத்தடிப்பதும் தவறான அணுகுமுறைகளாகும்.

பூநகரிப்பாதையில் இராணுவம் சோதனையிடாமல் பயணிகளை விடுவதாக ஒப்புக் கொண்டால் கூட அதன் பின்னர் வேறு தடை முகாம்களில் சோதனையிடப் படுவது நடைபெறவே செய்யும்.

இராணுவப் பயத்தில் போக்குவரத்து செய்ய மக்கள் அஞ்சுவார்கள் என்றால் போக்குவரத்துப் கருத்தாகிவிடுகிறது.

இராணுவரீதியில் மட்டுமே புலிகளின் சிந்தனைப் போக்குகள் அமைந்துவிடுவதால் அவர்கள் முன்வைக்கும் கோரிக்கைகளும் அவ்வாறே அமைந்து விடுகின்றன.

இராணுவத்தின் முற்றுகையில் இருந்து தப்பிக் கொள்வது, கடல் மார்க்கத்தில் தமது பலத்தை விரிவாக்கிக் கொள்வது என்பதுதான் புலிகளின் போக்குவரத்து பிரச்சனை பற்றிய கண்ணோட்டங்களில் பிரதிபலிக்கிறது.

யுத்தத்தில் ஈடுபட்டுள்ள ஒரு அமைப்பு என்ற வகையில் தமது பாதுகாப்பு மற்றும் தமது பலம் சார்ந்த விடயங்களில் புலிகள் அக்கறையோடிருப்பது இயல்பானதே.

அதே வேளையில் பொதுமக்களின் கஷ்டங்கள் குறித்தும் அக்கறை கொள்ள வேண்டியது முக்கியமாகும்.

கடந்த பத்தாம் திகதி கூட இரு படகுகள் கடும் காற்றில் சிக்கியதால் விபத்தில் வீழ்ந்தன. 17 பேர் வரை மாண்டு போனார்கள்.

தலையைச் சுற்றி மூக்கைத் தொடுவது போல சுலபமான பாதை இருக்கக் கூடியதாக கிளாலிக் கடலேரியில் அவலமான பயணம் ஏன்?

கடற்படை ஒரு புறமும், கொடும் காற்று மறுபுறமும் பயமுறுத்த கரை சேர்ந்த பின்தான் உயிர் திரும்பும் பயணம் எதற்காக?

இராணுவம் பூநகரிப் பாதையில் சோதனை யிட்டால் பொதுமக்களுக்கு விரயங்கள் ஏற்படும் என்று புலிகள் சொல்கிறார்கள்.

பொதுமக்களின் மீது புலிகளுக்கு உள்ள அக்கறை பற்றிய சந்தேகங்களை நாம் எழுப்பவில்லை.

ஆனால் சோதனை யிடப்படுவது சிரமம் என்றால் கிளாலிக் கடலேரியில் பயணம் நடத்துவது அதைவிடவும் மாபெரும் சோதனை யல்லவோ. ஆயினும் பயணம் நடக்கத்தானே செய்கிறது.

இராணுவம் நின்றால் பொதுமக்கள் பயணம் செய்ய அஞ்சுவார்கள் என்று புலிகள்



கடற்புலிப் பொறுப்பாளர் சூசை

நீளமும் உள்ள கிளாலிக் கடலேரியில் புலிகளின் அதிவேக விசைப்படகுகள் கடற்படையினரிடம் தப்பிச் செல்ல முடியும். தப்பிச் சென்றும் இருக்கிறார்கள்.

ஆனால் பயணிகளின் படகுகள் ஆடி அசைந்து செல்லும், இடையிலே இயந்திரக் கோளாறு ஏற்பட்டால் உள்ள கடவுளையெல்லாம் துணைக்கழைத்து பயணிகள் நடுக்கடலில் பரிதவிப்பார்கள்.

தூரத்திலே கடற்படைப் படகு வருவதாக தெரிந்தால் படகோட்டிகள் கறுப்புத் தெரிகிறது என்று சொல்லிவிட்டு கடலில் பாய்ந்து விடுவார்கள். பயணிகள் கைகளை மேலே உயர்த்தி மரணத்தின் வாசலுக்குள் போய்வரவேண்டியதுதான்.

ஆக, உல்லாசப் பயணத்திற்கோ, யாழ் குடாநாட்டில் பொழுது போகவில்லையே என்பதற்கோ மக்கள் போக்குவரத்தில் ஈடுபடவில்லை.

எப்படியும் போயே ஆகவேண்டும் என்ற அத்தியாவசியத் தேவைகள் அவலமான நிலையிலும், போக்குவரத்தில் ஈடுபடக் காரணமாக இருக்கின்றன.

புலிகளோ பொருந்தாத காரணங்களைச் சொல்லி பூநகரிப்பாதை திறப்புக்கு குறுக்கே நிற்கிறார்கள்.

யூ.என்.எச்.சி.ஆர் ஒரு சர்வதேச தொண்டர் அமைப்பு. அது புலிகளுக்கோ அல்லது அரசுக்கோ விரோதமான அமைப்பல்ல.

அவர்களே புலிகள்தான் இழுத்தடிக்கிறார்கள் என்று சொல்லாமல் சொல்லுகிறார்கள்.





# கடற்புலிகளை பலப்படுத்த புலிகள் வகுக்கும் திட்டங்கள்

## கிளாலிக் கடலேரியில் பயணிகளின் அவலங்கள்

கனடா ஈழநாடு பாரிசில் இருந்து வெளிவரும் பாரிஸ் ஈழநாட்டின் மறுபதிப்பாக காணப்படுகிறது. மேலதிகமாக கனடாச் செய்திகள் சிலவும் தொட்டுக் கொள்ளப்படுகின்றன.

பாரிஸ் ஈழநாட்டுக்கு ஆசிரியராக இருப்பவர் குகநாதன். முன்னர் யாழ் ஈழநாட்டில் கற்றுக் கொண்ட அனுபவம் விரயமாகாமல் பயன்படுத்தப்படுகிறது. புலிகள் அமைப்பினரின் தவறுகளை மறந்துகூட சுட்டிக்காட்டுவதில்லை என்றாலும் குகநாதன் ஒரு பண்பட்ட பத்திரிகையாளர்.

இங்கு இயக்கங்களில் இருந்து வெளியேறி வெளிநாடு சென்றவர்களில் இன்னமும் இங்குள்ள மக்களை மறந்துவிடாதவர்கள் இருக்கிறார்கள்.

மேலைய நாகரிகத்தில் விழுந்தும், நுனிநாக்கில் ஆங்கிலமும் பேசிக்கொண்டும் எல்லாவற்றையும் கெட்ட கனவாக மறந்துவிட அவர்களால் முடியாது.

தாமே ஹீரோக்கள் ஏனையோர் அனைவரும் சீரோக்கள் என்று இயக்கங்களுக்குள் ஏற்பட்ட தலைமைத்துவ தவறுகளால் வெறுப் பேறி வெளியேறியவர்கள் மக்களை வெறுக்கவில்லை. மண்ணை மறக்கவில்லை.

கனடாவிலும் அப்படியான நம்மவர்கள் இருக்கிறார்கள்.

அவர்களால் வெளியிடப்படும் சஞ்சிகைகளில் ஒன்றாகவே 'தேடல்' காணப்படுகிறது.

புலிகள் மீதுமட்டுமல்ல ஏனைய தமிழ் அமைப்புக்கள் மீதும் அவர்கள் அதிருப்திகளோடு இருக்கிறார்கள். எழுதுகிறார்கள். ■

உலகத் தமிழர் பத்திரிகையில் (17.07.93) ஒரு செய்தி கண்ணில் பட்டது.

கடற்புலிகள் மேற்கொண்ட சில தாக்குதல்கள் வெற்றியளித்துள்ளன.

கிளாலி மோதல்களில் இரு போர் படகுகளை கைப்பற்றியதாகவும், ஒரு பாரிய ரோந்து விசைப் படகை அழித்ததாகவும் புலிகள் உரிமை கோரியிருந்தனர்.

அதே வேளையில் கடற்புலிகளின் முக்கிய தலைவர்களில் ஒருவரான சாஜகான் உட்பட எட்டுப் புலிகள் இது வரைகால கிளாலி மோதல்களில் பலியாகியுமிருக்கின்றனர்.

கடற்புலிகளை மேலும் விரிவாக்குவதிலும், போர் அனுபவங்களை ஏற்படுத்துவதிலும் பிரபாகரன் தனிக்கவனம் கொண்டுள்ளதை அறியமுடிகிறது.

சமீபகாலத்தில் கடற்புலிகள் அமைப்புக்கு புலிகளின் பிரச்சாரச் சாதனங்களில் கூடுதல் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது.

தரைமூலமாக யாழ் குடாநாட்டை இராணுவ முற்றுகை இறுக்குமானால் கடல் மார்க்கமாக உடைத்துச் செல்லும் தந்திரோபாயத்தை புலிகள் பிரயோகிக்க நினைப்பதாகத் தெரிகிறது.

பூநகரியிலும் இராணுவம் நிலை கொண்டுள்ளது. பூநகரி முகாமை தாக்குவதற்கு புலிகள் பாரிய தாக்குதல் ஒன்றை நடத்திய போதும் வெற்றிபெற முடியவில்லை. அந்த மோதலில் தமது மன்னார் தளபதியை புலிகள் இழக்க வேண்டி ஏற்பட்டது.

போக்குவரத்து பிரச்சனை விடயத்தில் யூ.என்.எச்.சி.ஆர் தலையிட்ட போது முதலில் புலிகள் முன்வைத்த கோரிக்கை பூநகரியில் இருந்து இராணுவம் விலகிக் கொள்ள வேண்டும் என்பதுதான்.

பிரச்சனைக்கே இடமில்லை.

ஏனெனில் யாழ் குடாநாட்டில் இருந்து வெளியே வந்தால் இராணுவம், பொலிஸ் உள்ள பகுதிகளுக்குத் தான் பொதுமக்கள் செல்லுகிறார்கள்.



அச்சம் இருக்குமானால் எவரும் யாழ் குடாநாட்டை விட்டு வெளியே வரமாட்டார்கள். பின்னர் போக்குவரத்துப் பிரச்சனைக்கே இடமில்லையே.

புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளை விட அரச கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில்தான் தற்போது தமிழர்கள் பெருந்தொகையாக உள்ளனர். புலிகளின் ஆதரவாளர்கள் கூட அரச கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் இருக்கின்றனர்.

அதனால் இராணுவம் பாதையில் நின்றால் பொதுமக்கள் சுதந்திரமாக போக்குவரத்து செய்யமாட்டார்கள் என்கின்ற கருத்து வலுவிழந்த

இயக்கத்தினர் சொல்கின்றனர்.

அப்படியானால் கடற்படையினர் பயணிகள் படகை தாக்கியபின்பும், அந்த படகில் இரத்தம் காய்வதற்கும் இடையில் கடலேரியைக் கடக்கிறார்களே பயணிகள். அதற்கு என்ன

சொல்லப் போகிறார்கள்.

கொடுங்காற்றில் இரண்டு படகுகள் கவிழ்ந்து போயின. கரை நோக்கி பிணங்கள் வருகின்றன.

ஆனாலும் அடுத்த படகுச் சேவை எப்போது என்று கேட்டு கிளாலி கடல் ஏரியின் இரு புறமும் தமிழர்கள் காத்துக்கிடக்கிறார்களே.

இதற்கெல்லாம் என்ன காரணம் சொல்வது?

புலிகளின் இயந்திரப் படகுகள் தன்னியக்க ஆயுதங்களோடு பாதுகாப்பு கொடுக்கின்றன என்கின்ற துணிச்சலில் யாரும் பயணம் செய்யவில்லை.

5 கடல் மைல் அகலமும் 5 கடல் மைல்

பந்து புலிகளின் தரப்பில்தான் என்று திட்டவட்டமாக அறிவிக்கிறார்கள்.

புலிகள் தமது கடற்புலிகளை பலமாக்கிக் கொள்ளட்டும். கடல் புறாவைப் போல இன்னும் பத்து கடல்புறாக்களை உருவாக்கட்டும். அது வேறு விவகாரம்.

ஆனால் சாதாரண மக்களின் அநியாய உயிரிழப்புக்களையும், அவலங்களையும் கணக்கில் எடுக்காவிட்டால் கடலில் புறாக்களுக்கு பதிலாக பிணம் தின்னும் கழுகுகளே பறந்து திரியும். பிறகு புறாக்கள் எதற்கு?

அதே சமயம் அரசும் பயணிகள் விடயத்தில் கடும் போக்கை கடைப்பிடிக்க வேண்டாம் என்று கடற்படையினருக்கு கூறவேண்டும்.

தடை என்று அறிவித்தும் வருகிறார்களே என்று கோபப்படுவதை விட, தடை செய்தும் கூட ஏன் வருகிறார்கள் என்று யோசித்துப் பார்க்க வேண்டும்.


விட்டுக்கொடுப்புக்களும், நெளிவு சுழிவுகளுமே யுத்தத்தின் அசுர வெறியைத் தணிக்க முடியும்.

துன்பக் கடலில் தவிக்கும் வாழ்க்கையோடு ஒட்டைப் படகில் பயணம் செய்யும் அப்பாவிகள் யாருக்கும் எதிரிகளல்ல.

அவர்களது குற்றமற்ற குருதியால் கடல் அன்னையின் மடியை சிவக்க வைக்க வேண்டாம்.

புலிகளும்-அரசும், போரில் சம்பந்தப்பட்ட சகல தரப்புக்களும் பொதுமக்களை சதுரங்க காய்களாக நகர்த்த முயலக்கூடாது.

அப்படி முயன்றால் இந்த யுத்தத்தில் எவரும் வெல்லவும் முடியாது. ■



## அதிரடி அய்யாத்துரை

புதுசா ஒரு விளையாட்டு வந்திருக்கு. ஏதோ யோ.யோ வாம். (Yo Yo) அதென்ன இழவோ, ஆறிலிருந்து அறுபதுவரை கையிலை வைச்சுக்கொண்டு திரியினம். அவேன்ர கை, அவேன்ர காசு, அவேன்ர விருப்பம் வைச்சிருக்கட்டும். ஆனாலும் பாருங்கோ சில பொடித்தரவளியள் யோ.யோ வோட பொம்பிளைப் பிள்ளையளுக்கு பின்னாலை போய் அடிக்கிற விசயம்தான் உதைக்குது. பொம்பிளைப் பிள்ளையல் இதால தெருவில இறங்கவும் பயப்படுதுகள். கொழும்பில யோ.யோ வால சேட்டை விட்ட ஆக்களுக்கு தரும அடியும் விழுந்திருக்குது. வக்கிர ஆசை. வாங்கிக் கட்டத்தான் வேணும். நல்லாக் குடுங்கோடா.

விளையாட்டு நட்புறவுக்கு பாலமாக இருக்க வேணும். இலங்கை-இந்திய கிரிக்கட் விளையாட்டை ரி.வியில் பார்க்கிற ஒரு சான்ஸ் கிடைச்சுது. இரண்டு அணிக்காரரும் எதிரி நாட்டுக்காரர் மாதிரி நடந்து கொண்டது மனவருத்தமான விசயம். போதாக்குறைக்கு அம்பயர்ஸ் செய்த குறும்புகளும் எரிச்சலான சமாச்சாரம். தேசபக்தி இருக்கத்தான் வேணும். அதுக்காக ஏற்றுக் கொண்ட கடமையை மறக்கலாமோ?

சிங்கள மக்களுக்கு தாங்கள் சிறுபான்மையாகிப் போவமோ என்று பயமாக்கிடக்காம். உது நல்ல பகிடி. அவையே அப்படி யோசிக்கேக்க நாங்கள் கட்டெறும்பா தேய்ந்து போவமோ எண்டு தமிழ் பேசும் சனம் பயப்பிடுறதில என்ன பிழை எண்டு கேட்கிறன்.

முன்னாள் மாவலி அமைச்சரை உள்ளே எடுக்கும் விவகாரத்தில பவர் கட்சியிலும் பலதரப்பட்ட அபிப்பிராயங்கள். பிரிந்தவர் தரப்பிலும் பல்வேறு முரண்பாடுகள். அதுதான் தன்னோடு முரண்படும் ஆட்களை திருப்தி செய்யத்தான் மறைந்தவரை கண்டிச்சுப் பேசினாராம் முன்னாள் அமைச்சர்.


தொலைக்காட்சியில் இளம் தலைவருக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறதாம். சிங்களப் பத்திரிகை ஒன்று எக்கச்சக்கமாய் கோபப்பட்டிருக்குதாம். ஏன் கோபமோ? எவர் மீது நேசமோ? யார் கண்டது?

கிழக்கில ஒரு பற்றுதலைக் காட்டத்தான் இரண்டெழுத்து இயக்கத்தில் புதிய பதவி ஒன்று உருவாக்கப்பட்டிருக்கிறதாம். அரசியல் துணைப் பொறுப்பாளர் எண்டு கரும் காலரைப் போட்டிருக்கினம். பிரதேச ரீதியாவும், சாதிபார்த்தும் பிரதிநிதித்துவம் குடுக்கிறது. பிறகு அதைச் சொல்லிக்காட்டிப் பேசறது எண்ட விசயம் கூட்டணிக்காரர் மூலமாக எங்கட தம்பிமார் படிச்சுக் கொண்டதாக்கும். எப்படியோ கிழக்கை பாதிக்கவிடாமல் பாதுகாத்தா சந்தோசம்தான்.

நல்லைக் கந்தன் திருவிழாவில இந்தமுறையும் ஒரே கல.கலவென்று கூட்டமாம். இரண்டெழுத்துக் காரர்தான் காவல் வேலை. அப்பிடியிருந்தும் சங்கிலி அறுப்புகளுக்கு ஒரு குறைவும் இல்லை. அறுத்துப் பழகின கை ஆயுதம் கண்டு பயப்படுமோ?

நகர ரவுண்டப்
-ஒற்றன்-

# சிக்னல் போடும் காரும் ஆடம்பரக் கார்களில் அழகிகள்!



நேரம்-இரவு 7 மணி 35 நிமிடம். இடம்-அழகான கொழும்பு மாநகரில் - பம்பலப்பிட்டி.

நேரம் ஆனபோதும் மினிபஸ்சில் கூட்டம் குறையவில்லை.

மீன் ரின்னுக்குள் மீன்களை அடைப்பது போல சனத்தை வானுக்குள் இறுக்கமாய் அடைத்துக் கொண்டு டீசல் புகையால் கொழும்பை 'சுத்தமாக' சுவாசிக்க வைத்துக் கொண்டு மினி பஸ்கள் போயும் வந்தும் கொண்டிருந்தன.

மினி பஸ்காரரில் பலருக்கு ஆசை அதிகம். உள்ளே நெரிசலில் மூச்சைத் தொலைத்துவிட்டு நாங்கள் தேடிக்கொண்டிருப்போம். நடத்துநர்களோ வெளியே இன்னும் ஆட்கள் தேடிக் கொண்டிருப்பார்கள்.

வெளியே இருந்து உள்ளே ஏறும் வரை உங்கள் சொந்த பஸ் மாதிரித்தான், "வாருங்கள்" என்ற தொனியில் அழைப்பார்கள். ஏறாவிட்டால் கையைப்பிடித்து இழுக்காத குறைதான்.

உள்ளே ஏறிவிட்டால் நீ யாரோ நான் யாரோ. "பின்னாலே போ- போக முடியாதா? இறங்கு." அவ்வளவு மரியாதை. எப்படி இறங்குவது? காசைத் திருப்பிக் கேட்டால் உதைக்க வருவார்கள்.

காற்றோட்டமான பஸ் போனாலும் கவனிக்காதது போல் நெரிசலான பஸ்சுக்குள் சிலர் ஏறிக்கொள்வார்கள். ஏன் என்று ஊகிக்கும் சக்தி உங்களுக்கில்லையா என்ன?

நாம் நடந்து கொண்டிருந்த போது எதிரே சற்றுத் தூரத்தில் ஒரு கார் வந்து நின்றது. கார் நிற்பதில் என்ன ஆச்சரியம்? ஒன்றுமில்லைத்தான். ஆனால் நின்ற காரின் ஹெட்லைட்டுக்கள் அணைந்து எரிந்து அணைந்து... ஏதோ வித்தியாசமாய் மூளையில் பட்டது. சட்டென்று ஒதுங்கி நின்று கவனியாதது போல் கவனித்தோம்.

தெருவைக் குறுக்காகக் கடந்து நவநாகரிக இளம் பெண் ஒருவர் அந்தக் காரை நோக்கி வேகமாக சென்றார். செல்லும் போது சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டு சென்றதையும் அவதானிக்க முடிந்தது. 'சம்திங் றோங்'. கூர்ந்து கவனிக்கத் தோடங்கினோம்.

நாம் நிற்கும் இடத்தில் இருந்து கார் நின்ற இடத்தை கவனிப்பதை விட கொஞ்சம் அருகில் சென்றால் என்ன? யோசித்த போது கார் நின்ற இடத்திற்கு சற்றுத் தள்ளியிருந்த சின்னக் கடை ஒன்று வா என்று கூப்பிட்டது.

வேகமாய் நடந்து கடையின் முன்பு ஆஜரானோம்.

நவநாகரிக பெண்மணி காரின் சாரதி ஆசனத்தில் அமர்ந்திருந்தவரோடு குழைந்து கொண்டிருந்தார். ஆசனத்தில் அமர்ந்திருந்தவரைப் பார்த்த போது ஆச்சரியம் வந்து எமக்குள் ஒட்டிக்கொண்டது. அந்தப் பெண்ணின் தந்தை வயதிருக்கும் அவருக்கு. சே......ஒருவேளை தந்தையே தானோ? அதுக்கேன் நடுவீதிச் சிக்னல். குழைவும், அவரது முகத்தில் தெரிந்த வழியலும் இதில் எதோ விவகாரம் உண்டு என்பதை உறுதிப்படுத்தியது.

அவர்கள் பேசிக்கொண்டது காதில் விழவில்லை. சில நொடிகளில் காரின் முன்பாக சுற்றிச் சென்று முன்சீற்றில் பெண் அமர்ந்து கொள்ள கார் புறப்பட்டது.

எமக்குப் புரிந்துவிட்டது. என் நண்பர் ஒருவர் சொன்னது ஞாபகம் வருகிறது.

"விபச்சாரம் ஒரு வழமையான தொழில். தொல்பொருள் கால உற்பத்தி. எங்குதான் விபச்சாரம் இல்லை?"

உண்மைதான். சோசலிசம் பேசிய சோவியத்யூனியனில் கூட விபச்சாரம் திரைமறைவில் நடக்கத்தான் செய்தது.

இந்தியாவில் யாரோ ஒரு குடும்பத்தலைவி விபச்சாரிகள் பற்றி இப்படிச் சொல்லியிருந்தார். "எமது குடும்பப் பெண்கள் பாழாக்கப் படாமல் இருக்கக் காரணமே விபச்சாரப் பெண்கள்தான்."

இல்லாவிட்டால் வக்கிரங்களுக்கு வடிகால் இல்லாமல் போய்விடுமாம்.

ஒய்வு பெற்ற பொலிஸ் அதிகாரி ஒருவர் எம்மோடு பேசியபோது சொன்னார்!

விபச்சாரப் பெண்களை பிடித்து வரும் பொலிசாரை அவர் கண்டிப் பாராம்.

"ஒரு பெண் தன் உடலை விற்க முன்வருகிறாள் என்றால் எவ்வளவு கஷ்டம் இருக்க வேண்டும். உனக்கு விருப்பமில்லையா போய்விடு. விருப்பமிருந்து அவளிடம் போனால் கூலியைக் கொடுத்துவிடு. அவளை ஏன் பிடித்து வந்து கோட்டில் நிறுத்தி, தண்டம் அறவிட்டு...... இதனால் விபச்சாரம் ஒழிந்து விடுமா என்ன?" என்று கேட்பாராம்.

இவ்வாறான கருத்துக்களிலும் உண்மை இல்லாமல் இல்லை.

யோசித்துக் கொண்டே வழக்கம் போல் கடையில் இரு சிகரெட் ஒரு பெட்டிக்குள் போட்டுக் கேட்டோம். கடைக்காரர் எம்மைக் கவனித் திருப்பார் போல் இருக்கிறது.

தமிழ் என்பதையும் அறிந்து கொண்டு தமிழில் பேசினார். முகத்தை வைத்தே எந்த மொழிக் காரன் என்று ஊகிக்கும் சக்தி எப்படித்தான் சிலருக்கு வருகிறதோ தெரியவில்லை. கொழும்பில் இருக்கும் பலருக்கு இந்த அனுபவம் ஏற்பட்டிருக்கலாம். சில சந்தர்ப்பங்களில் நாம் சிங்களத்தில் பேசினாலும் நமது உச்சரிப்பு, தோற்றம் என்பனவற்றை வைத்தே தமிழ்தான் என்று கண்டுபிடித்து விடுவார்கள்.

"இதெல்லாம் இங்கு சகஜம் தம்பி. காரில் வருகிறார்கள். எந்தக் கார் வந்தால் யார் போவது என்று ஒரு ஒழுங்கு முறையே இருக்கிறது" என்றார்.

"அதென்ன கார் லைட்டில் சிக்னல் போடுகிறார்களே?" என்று ஒருகேள்வியை தூக்கிப் போட்டபடி அவர் தந்த சிகரெட் பெட்டியை வாங்கி வைத்துக் கொண்டோம்.

"சில கார்களில் வருவோர் இதற்கென்று ஒரு பிரத்தியேக சிக்னல் ஒன்று வைத்திருக்கிறார்கள். அது இருதரப்புக்கும் தெரிந்த சிக்னல். இப்போது பெண் தேடி கார்களில் வரும் பலருக்கு மத்தியில் அந்த சிக்னல் பரவியிருக்கிறது" என்று சொல்லியபடியே மீதிப் பணத்தை நீட்டினார்.

சுவாரசியத்திலும் மறந்துவிடாமல் மீதிச் சில்லறையை எண்ணி பொக்கற்றுக்குள் போட்டபடி அடுத்த கேள்வியை தொடுத்தோம்.

"எத்தனை பெண்கள் இப்படி எல்லாம் இங்கு வருகிறார்கள்?"

"இப்போது தொகை கூடி வருகிறது. அலுவலகத்திற்கு செல்வது போல் நன்றாக அலங்கரித்துக் கொண்டு வருகிறார்கள். பஸ் நிலையத்தில் நிற்கிறார்கள்."

என்று சொல்லியபடி இடையே ஒருவர் வந்து சிகரெட் ஐந்து கேட்க அதைக் கொடுத்து பணம் வாங்கி உள்ளே போட்டபடி விட்ட இடத்தில் இருந்து தொடர்ந்தார்.

"முதலில் உங்களை உற்றுப் பார்ப்பார்கள். நீங்களும் பார்த்தால் அடுத்த கட்ட தாக்குதலாய் புன்னகை ஒன்றை வெடிபோல வீசுவார்கள். நீங்கள் கொஞ்சம் நாணமுள்ள ஆணாக இருந்தால், அதை முகத்தில் படித்துக் கொண்டு அருகில் வந்து அவர்களாகவே பேசுவார்கள். பேரம் படிந்தால் ஒட்டோ ரெடி. எங்கு வேண்டுமானாலும் வரும். அது சரி தம்பி, நீர் என்ன பேப்பர் ஆளோ?"

திடீரென்று கேட்க வழக்கத்திற்கு மாறாக "ஆம்" என்று உண்மையை சொன்னோம். சொல்லிவிட்டு ஏன் சொன்னோம் என்று நாக்கைக் கடிக்கையில் அவர் முகத்தில் ஏக உற்சாகம்.

"இதை முதலில் சொல்லி யிருந்தால் குட் நியூஸ் எல்லாம் இருக்கல்லோ தம்பி. சொல்லுறேன் கேட்டுக்கொள்ளும். ஒரு கண்டிஷன்"

"சொல்லுங்கோ" என்றபடி தகவல் திரட்டும் சந்தோசத்தில் திளைத்தோம்.

"என் பெயர் வரக் கூடாது. தேவையில்லாத கஜால்"

"வராது சொல்லுங்கோ" உத்தரவாதம் கொடுத்தோம்.

"ஆண்கள் மட்டும்தான் பெண்களை தேடி காரில் வருவதாக நினைக்க வேண்டாம்" சொல்லிவிட்டு ஒரு சஸ்பென்ஸ் சிரிப்பை உதிர்த்தார்.

தொடர்ந்து அவர் சொன்னதைக் கேட்டு அதிர்ந்து போனோம்.

கூடவே அதில் சுவாரசியமும் இருந்தது. அடுத்தவாரம் வரை காத்திருங்கள். இத்தோடு போதும். இட நெருக்கடி என்கிறாரே ஆசிரியர். நாம் என்ன செய்வதாம்?

(மறுவாரம் மீதி)

ஒற்றனுக்கு நாமும் தகவல் அனுப்பினால் கவனிப்பாரா என்று பல வாசக நெஞ்சங்கள் மடல்மூலம் வினா தொடுத்துள்ளீர்கள். சுவாரசியமான தகவல்கள் இருந்தால் அனுப்புங்கள்.

நகர ரவுண்டப்
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கிருலப்பனை,
கொழும்பு-5

# சுறா சுருட்டி விழுங்கிய படகு கடலின் மடியில் நிகழ்ந்த விபரீதம்



அமெரிக்காவின் புளோரிடா கடற்கரையில் இருந்து ஒரு மைல் தூரத்தில் அந்த விசைப்படகு கடலைக் கிழித்தபடி சென்று கொண்டிருந்தது.

படகின் நீளம் 45 அடி. அதில் ஆறுபேர் இருந்தனர்.

நேரவிருக்கும் பயங்கரம் தெரியாமல் நீலக் கடலின் மடியில் ஜாலியான அரட்டையோடு பயணம் நடந்தது.

திடீரென்று கடலின் மடியிலிருந்து ஒரு பெரிய தலை உயர்ந்தது. அதிர்ச்சியோடு பார்த்தவர்கள் உசாராவதற்கு இடையில் ஒரு பழைய இரயில் எஞ்சினைப் போல அந்தப் பயங்கரப் பிராணி படகை நோக்கி வந்து வாயைப் பிளந்தது.

படகின் ஓட்டிக்கு திருப்பித் தப்பும் அவகாசமே இல்லை. கண்மூடித் திறப்பதற்கு இடையில் அந்த பயங்கரப் பிராணி படகை வாயில் கவ்வி விழுங்கியது. படகோடு சேர்த்து உள்ளே இருந்த ஆறுபேரும் சுறாவின் வயிற்றுக்குள் தீனியாக உள்ளே போயினர்.

140 அடி நீளமான அந்தப் பயங்கரப் பிராணியான சுறா அந்த படகையும் அதிலிருந்த ஆறு பேரையும் விழுங்குவதை இன்னொரு மீன் பிடிப்படகில் இருந்தவர்கள் திகிலோடு பார்த்தபடி இருந்தார்கள்.

சுறாவின் வயிற்றுக்குள் படகு சென்றதும் சுறா வாயை மூடிய சப்தம் பயங்கரமாக இருந்தது என்று அவர்கள் கூறுகின்றனர்.

அந்த பயங்கரச் சுறா தண்ணீருக் குள் மீண்டும் தாவிச் சென்று, மூழ்கிய போது தங்கள் மீன் பிடிப்படகும் நீருக்குள் கவிழ்ந்து விடுமோ என்று அவர்கள் அஞ்சினார்களாம்.

அந்த திகில் நிறைந்த சமயத்திலும் அவர்கள் எடுத்த புகைப்படம்தான் அந்த பிராணி சுறா தான் என்று அடையாளம் காண உதவியிருக்கிறது.

அது ஒரு 'மீன் பேய்' என்று மூன்றாவது மீனவர் பேட் சாண்டோ வர்ணிக்கிறார். இந்தப் பிராணியின் வால் மட்டும் சுமார் 30 அடி உயரம் இருக்கும் என்று அவர்கள் கூறுகின்றனர்.

கடற்கரைக் காவலர்கள் இதனை ஒரு திமிங்கிலம் என்றே கருதுகின்றனர். அவர்களுக்குக் கிடைத்த பிந்தியத் தகவல்களின் படி 45 அடி நீளமான இயந்திரப்படகு ஒன்று கடலில் காணாமற் போய் விட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளமை தெரிய வந்தது.

கடல் வாழ் உயிரினங்களை ஆராய்ச்சி செய்யும் இயான் பிராலைன் என்பவர், 140 அடி நீளமான சுறா பற்றி தான் இது வரை கேள்விப்பட்டதே இல்லை என்கிறார். இதே வேளை இப்பிராந்தியத்தில் 5 தலை முறையாக மீன்பிடித்தொழில் புரிந்து வரும் குடும்பத்தைச் சேர்ந்த அல் ஹட்சன் என்பவர், தனது கணிப்பை உடனடியாகக் கூறமுடியாது என்கிறார். இது ஒரு சுறா வகை மீனாகவே இருக்கலாம் என்ற சந்தேகம் இவருக்குண்டு.

மீன்பிடிப் படகில் இருந்த மூன்று மீனவர்களும் தாங்கள் பார்த்தது சுறா மீனே என்று உறுதியாகக் கூறுகின்றனர்.

# உலக ரவுண்டப்

## "பெனாசிர் வேண்டாம் என்று தடுத்தார் நவாஸ் ஷெரீப் அனுமதி கொடுத்தார்."

பாகிஸ்தான் அணுகுண்டு சோதனை நடத்தவில்லை. இனி மேல்தான் செய்யப் போகிறது என்று கூறுவது உண்மையல்ல.

1987ம் ஆண்டில் அது அணுகுண்டு சோதனை செய்துவிட்டது. இவ்வாறு கூறியிருக்கிறார் பாகிஸ்தான் முன்னாள் தளபதி மிர்ஸா அஸ்லம் பெக்.

1988இல் இருந்து 1990 வரை பெனாசீர் பிரதமராக இருந்த போது அணுசக்தி திட்டங்களை இராணுவத்துக்கு பயன் படுத்துவதை தடுத்தார். பின்னர் 90 நவாஸ் ஷெரிப் பதவிக்கு வந்தபின் நிலமை சீரானது.

இவ்வாறு கூறியுள்ள திரு பெக் பாகிஸ்தானின் 45 வருடகால வரலாற்றில் 24 ஆண்டுகள் தலைமைத் தளபதியாக இருந்தவர்.

# அதிரடியான ஒரு போட்டி

★ சுப்பர் ஸ்டார் ரஜினியை நேரில் காண விரும்புகிறீர்களா?
★ தமிழகச் சுற்றுலாவுக்கு நீங்கள் தயாரா?

நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்:

★ போட்டி முடிவடைந்தவுடன் அனைத்துக் கூப்பன்களையும் எமக்கு அனுப்பி வைக்கலாம்.
★ போட்டி சம்மந்தமான எந்த விடயத்திலும் ஆசிரியரின் முடிவே இறுதியானது.
★ போட்டியில் பங்குகொண்டு சரியான விடை எழுதுவோரில் ஒருவர் அதிஷ்டசாலியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்.
★ ஏனைய ஐம்பது அதிஷ்டசாலிகளுக்கு சுப்பர் ஸ்டார் ரஜினிகாந்தின் பெரிய அளவிலான வண்ணப்படங்கள் வந்து சேரும்.



## போட்டிக்குத் தயாரா நீங்கள்?

மேலேயுள்ள படத்தைப் பாருங்கள். பார்த்து விட்டீர்களா? நல்லது. பக்கத்திலுள்ள கூப்பனை நிரப்பி பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள்.

இலக்கம்-04
சுப்பர் ஸ்டார் சந்திப்பு
காட்சி இடம்பெற்ற படத்தின் பெயர்:-..............................
படத்தின் இயக்குநர் பெயர்:-..............................
ரஜினியின் ஜோடி/ஜோடிகள் யார்:-..............................
இப்படம் வெளியான ஆண்டு:-..............................

பி.கு: இலக்க வரிசைப்படி 20 கூப்பன்களையும் நிரப்பி அனுப்புவோர் மட்டுமே போட்டியில் பங்குகொள்ள முடியும்.

# ஜெர்மனியில் அகதிகள் வருகை வீழ்ச்சி!

ஜெர்மனியில் வெளிநாட்டு அகதிகளைக் கட்டுப்படுத்தும் வகையில் புதிய சட்டவிதிகள் அமுலுக்கு வந்துள்ளதையடுத்து வெளிநாட்டு அகதிகள் வருகை வெகுவாகக் குறைந்துள்ளது.

முன்னர் நாளாந்தம் 200 அகதிகள் பிராங்பேர்ட் விமான நிலையத்தில் வந்திறங்கினர். தற்போது 30 பேருக்கு குறைவாகவே வருகின்றனர் என்று கூறப்படுகிறது.

இப்போது விமான நிலையத்தில் வைத்தே அகதிகள் மீது விசாரணை நடத்தப் படுகிறது. விண்ணப்பங்கள் நிராகரிக்கப் படுவோர் திருப்பி அனுப்பப்படுகின்றனர்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## அலசுவது – இராஜதந்திரி

# ஐக்கிய நாடுகள் ஸ்தாபன உதவியை உதாசீனம் செய்வது புத்திசாலித்தனமல்ல!

இலங்கை இனப்பிரச்னைக்குத் தீர்வு காணும் பொருட்டு ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் உதவியை நாடும் நடவடிக்கைகள் குறித்து ப் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளன.


வெளிநாடுகளில் உள்ள சில இலங்கைத் தமிழ் பிரமுகர்களின் உந்துதலின் பேரிலேயே ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தை அணுகும் முயற்சிகள் முடுக்கிவிடப்பட்டிருந்தன.

இந்த முயற்சியின் முதல் கட்டமாக நோபல் சமாதானப் பரிசைப் பெற்ற நான்கு சர்வதேச முக்கியஸ்தர்கள் இலங்கை ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க, பிரதம மந்திரி திரு.ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு ஓர் ஆரம்ப சமாதானத் திட்டமொன்றையும் அனுப்பிவைத்துள்ளனர்.

இலங்கை இனப்பிரச்னையைத் தீர்க்கும் வகையில் இலங்கை அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் செயலாளர் நாயகத்தின் உதவியை நாட வேண்டும். அத்துடன் ஐ.நா.ஸ்தாபனத்தின் விசேட பிரதிநிதியொருவரை சமரசப் பேச்சுக்களை மேற்கொள்வதற்கென அனுப்பி வைக்கும்படி ஐ.நா. செயலாளர் நாயகத்திடம் இலங்கை அரசும், தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கமும் கோரிக்கை ஒன்றை விடுக்கவேண்டும் எனவும் நோபல் பரிசு பெற்ற முக்கியஸ்தர்களின் சமாதானத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் போர் நிறுத்தம், வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் பாதுகாப்பு வலயங்களை ஏற்படுத்துதல், ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் கண்காணிப்புடன் தேர்தல்களை நடத்துவதுடன், வடக்கு-கிழக்கு பிரச்னைக்கு சமஷ்டி அமைப்பு முறையுடன் தீர்வொன்றைக் காணுதல் போன்ற விடயங்களும் நோபல் பரிசு பெற்ற முக்கியஸ்தர்களின் சமாதானத் திட்டத்தில் முக்கிய ஆலோசனைகளாகத் தெரிவிக்கப்பட்டுள்ளன.

**தேவையற்ற பேச்சுக்கள், பயனற்ற யோசனைகள், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் தந்திரப் பேச்சுக்கள் நிச்சயம் நிராகரிக்கப்பட வேண்டியவையே!**



இலங்கை இனப்பிரச்னையை எடுத்துக் கொள்ளும் பட்சத்தில் கடந்த பல தசாப்தங்களாக பல்வேறு முயற்சிகளும் இப் பிரச்னையைத் தீர்க்கும் வகையில் முன்வைக்கப்பட்டிருந்த போதிலும், அவை அனைத்தும் தோல்வியிலேயே முடிவடைந்துள்ளதை நன்கு அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

இலங்கைத் தமிழ் அரசியல் தலைவர்கள் பலரும், இலங்கையில் காலத்துக்குக் காலம் ஆட்சியைக் கைப்பற்றிய முக்கிய அரசியல் கட்சிகளின் தலைவர்களுடன் பல்வேறு உடன்பாடுகளையும், பேச்சுவார்த்தைகளையும் சாத்வீக ரீதியாக மேற்கொள்ள முன்வந்திருந்த போதிலும், இனப்பிரச்னையைத் தீர்ப்பதில் தோல்வியையே தழுவியிருந்தனர்.

இறுதியாக இலங்கைத் தமிழர் பிரச்னையை தீர்ப்பதற்கான நடைமுறையில் இராணுவ ரீதியிலான அணுகு முறைகளை இலங்கை அரசு பிரயோகிக்க ஆரம்பித்ததையடுத்தே, இன்று இலங்கையின் இனப்பிரச்னை ஒரு முக்கிய விடயமாக சர்வதேச கவனத்தையும் பெற்றதாகக் காணப்படுகின்றது.

1983ம் ஆண்டில் இலங்கையில் இடம் பெற்ற இனக்கலவரம், அரசியல் ரீதியிலான தீர்வு முயற்சிகளில் நம்பிக்கை இழக்கும் ஒரு சூழ்நிலையை உருவாக்கிவிட்டிருந்தது. கூடவே அரசியல் அரங்கில் தொடர்ந்து இடம் பெற்ற மாற்றங்கள், தமிழ்த் தலைவர்களின் ஜனநாயக ரீதியிலான அணுகுமுறைகளுக்கு கால்கட்டுப் போடுவதாகவும் அமைந்திருந்தன.

1983ம் ஆண்டு இனக்கலவரத்தையடுத்து தோன்றிய நிலைமைகள், ஜனநாயக ரீதியாக நியாயங்களை முன்வைத்த தமிழ்த் தலைவர்களையும், தலை மறைவாகச் செல்லத்தூண்டும் சூழ்நிலைகளை உருவாக்கியிருந்தன.

இந்நிலையிலேயே, இலங்கையில் இனக்கலவரம் மற்றும் யுத்த நிலவரங்களினால் அபலைகளாக்கப்பட்ட தமிழ் பொது மக்கள், தமிழ் அரசியல் தலைவர்கள் ஆகியோருக்கு தஞ்சமளிக்க இந்திய அரசு முன்வந்திருந்ததுடன், இலங்கைத் தமிழர் பிரச்னையில் இந்திய அரசு தலையிடும் சூழ்நிலையும் உருவாகியிருந்தது.

இது தவிர இலங்கையிலிருந்து மேற்கு நாடுகளுக்கும் 1983ம் ஆண்டின் பின்னர் ஆயிரக்கணக்கான தமிழர்கள் அகதிகளாகத் தஞ்சம் புகுந்திருந்தனர். இதனால் மேற்கு நாடுகளிலும் இலங்கைத் தமிழர் பிரச்னை பிரபலமடைந்திருந்தது. பல மேற்கு நாடுகளின் அரசாங்கங்கள் இலங்கைத் தமிழர்களை அகதிகள் என்ற அந்தஸ்த்தில் வைத்துப் பராமரிக்க முன்வந்திருந்தன.

இவ்வாறு இலங்கை இனப்பிரச்னை சர்வதேச ரீதியாக முக்கியம் பெற்றுள்ள இத்தருணத்தில், இம்முக்கியத்துவத்தை மேலும் அதிகரிப்பதாகவே ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் தலையீட்டைக் கோரும் நடவடிக்கை காணப்படுகின்றது.

அரசியல் பிரச்னைகளுக்குரிய ஓர் அரங்காக மட்டும் இருக்காமல், பல்வேறு சமூக, பொருளாதார, விடயங்களிலும் விரிவான பங்களிப்பைச் செய்யும் ஒரு சர்வதேச ஸ்தாபனமாகவே இன்று ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் விளங்கி நிற்கின்றது.

உலக அரங்கில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் பங்களிப்பு இன்று பலதரப்பட்டதாகவும் காணப்படுகின்றது.

அரசியல் ரீதியாக சர்ச்சைக்குள்ளாகியுள்ள நாடுகளில் வெறுமனே அரசியல் நடவடிக்கைகளில் மட்டும் ஆர்வங்காட்டாமல், அந்நாடுகளில் இராணுவ ரீதியாகவும் தலையீடுகளை ஐ.நா.ஸ்தாபனம் மேற்கொண்டுள்ளது.

சோமாலியா, பொஸ்னியா மற்றும் கம்பூச்சியா ஆகிய நாடுகளில் ஐ.நா.ஸ்தாபனத்தின் அமைதி காக்கும் படையினர் நிலை கொண்டுள்ளதுடன் இந்நாடுகளிலுள்ள கிளர்ச்சியாளர்களுடனும் அவ்வப்போது கடும் மோதல்களிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் இலங்கை இனப்பிரச்சனையைத் தீர்த்து வைப்பதற்கும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் உதவி கோரப்பட வேண்டுமென்ற யோசனை, சிந்தனைக்குரிய தொன்றாகவே விளங்குகின்றது.

இலங்கை இனப்பிரச்சனையில் இந்திய அரசு ஆர்வங்காட்டியிருந்த வேளை, மறைந்த இந்தியப் பிரதமர்களான திருமதி. இந்திரா காந்தி, அவரது புதல்வர் திரு. ராஜீவ்காந்தி, மற்றும் இன்றைய இந்திய பிரதமரும் அன்றைய வெளிநாட்டமைச்சருமான நரசிம்ம ராவ் ஆகியோர் இலங்கைத் தமிழர் பிரச்சனையை தீர்ப்பதற்கான வழி முறைகளில் மிகுந்த ஆர்வங்காட்டியிருந்தனர்.

இவர்கள் தவிர முன்னாள் தமிழக முதலமைச்சர்களான அமரர் திரு. எம்.ஜி.இராமச்சந்திரன், திரு.மு. கருணாநிதி ஆகியோரும் இலங்கைத் தமிழர் விவகாரத்தில் மிகுந்த அக்கறை கொண்டிருந்தனர்.

மேலும் இந்தியாவின் முன்னணி இராஜதந்திரிகளில் ஒருவரான திரு.ஜி. பார்த்தசாரதி உட்பட, இந்திய இராஜதந்திர சேவையைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் பலரும் இலங்கைத் தமிழர் பிரச்னைக்கான தீர்வை எட்டுவதில் மிகுந்த கவனஞ் செலுத்தியிருந்தனர்.



இலங்கையில் 1983ம் ஆண்டு இனக்கலவரம் வெடித்திருந்த போது நிலைமையை நேரில் அறிந்து வர அன்றைய இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி இந்தியப் பிரதிநிதியாக திரு.பி.வி. நரசிம்மராவை கொழும்புக்கு அனுப்பிவைத்திருந்தார். இன்று இந்தியப் பிரதமராக இருக்கும் திரு.நரசிம்மராவ், அன்று இந்திய வெளிவிவகார அமைச்சராகக் கடமையாற்றியிருந்தார்.

இதனையடுத்து இலங்கையின் தமிழ் அரசியல் தலைவர்களும் இந்தியாவின் ஆதரவையும், ஒத்துழைப்பையும் நாடியதையடுத்து 1986ம் ஆண்டில் பூட்டான் தேசத்தின் தலைநகரான திம்புவில் இலங்கை இனப்பிரச்சனை குறித்து இந்தியா ஒரு மாநாடொன்றைக் கூட்டியிருந்தது.

இம் மாநாட்டிலேயே இலங்கையில் புதிதாகத் தோற்றம் பெற்றிருந்த ஆயுதமேந்திய தமிழ் அரசியல் குழுக்களும், மற்றும் மிதவாத அரசியல் கட்சிகளும், கூடவே இலங்கை அரசின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

எனவே திம்பு மகாநாடே இலங்கை இனப்பிரச்னைத் தீர்வு தொடர்பாக வெளிநாடொன்றில் மேற்கொள்ளப்பட்ட முதலாவது நடவடிக்கையாக விளங்கியிருந்தது.

இதுதவிர தமிழகத்தில் இலங்கைத் தமிழ் அகதிகள் வந்து குவிந்திருந்த வேளை, இலங்கைத் தமிழர்களின் நிலையை உலகுக்கு எடுத்துக் கூறும் வகையில் மறைந்த இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி, தமிழக அரசியல் வாதியான திரு.பண்ருட்டி இராமச்சந்திரனை 1984ம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் இலங்கைத் தமிழர் பிரச்னை தொடர்பாக உரை ஒன்றை ஆற்றச் செய்திருந்தார்.

எனவே இலங்கைத் தமிழர் பிரச்னை நீண்ட காலத்துக்கு முன்னரே இந்தியாவின் அனுசரணையுடன் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

ஆனால் திருமதி இந்திரா காந்தி, இலங்கை இனப்பிரச்னை தொடர்பாக விரிவான நடவடிக்கைகளை மேற்கொள்ளு முன்னர் அவரது நாட்டின் சீக்கிய தீவிரவாதப் பிரச்னை அவரைக் கோரமான முறையில் பலியெடுத்திருந்தது.

இதனையடுத்து இந்தியாவில் பதவிக்கு வந்த திருமதி. இந்திரா காந்தியின் புதல்வர் திரு. ராஜீவ்காந்தி, இலங்கை இனப்பிரச்னை தொடர்பாக இலங்கையின் அரசாங்கத்தலைவர்கள் மற்றும் தமிழ் அரசியல் தலைவர்களுடன் பேச்சுக்களை நடத்தி இலங்கை இனப்பிரச்னைக்குத் தீர்வு ஒன்றைக் கொண்டு வரும் வகையில் இலங்கை-இந்திய சமாதான ஒப்பந்தத்தை ஏற்படுத்தியிருந்தார்.

இலங்கையில், சர்ச்சைக்குரிய வடக்கு-கிழக்கு மாகாணங்களை ஒன்றிணைக்க இலங்கை இந்திய ஒப்பந்தம் வழிவகுத்திருந்தது. கூடவே ஏனைய மாகாணங்களிலும், மாகாண சபை நிர்வாக முறையை தோற்றுவித்து இலங்கையில் ஒரு நிர்வாகப் பரவலாக்கத்துக்கு வழியமைப்பதாகவும் இந்திய-இலங்கை ஒப்பந்தம் விளங்கியிருந்தது.

ஆயினும் இலங்கையின் பிரதான தமிழ்த் தீவிரவாத இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட மாகாண சபை ஆட்சிமுறையை ஏற்கமறுத்திருந்ததுடன், அந்த நிர்வாகமுறை வடக்கு-கிழக்கில் இடம்பெறுவதையும் தனது ஆயுதப் போராட்டம் மூலம் நிராகரித்திருந்தது.

இந்நிலையிலேயே இந்திய-இலங்கை ஒப்பந்தத்தையடுத்து இலங்கை வந்திருந்த இந்திய அமைதிப் படையினர், தமிழீழ விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை முறியடிக்கும் வகையிலும், வடக்கு-கிழக்கில் ஜனநாயக நடைமுறைகளை ஏற்படுத்தும் வகையிலும் 1987ம் ஆண்டு முதல் 1989ம் ஆண்டு வரை ஒரு முழு அளவினை

**நோபல் சமாதானப் பரிசு பெற்றவர்களின் யோசனைகளை எடுத்த எடுப்பிலேயே நிராகரிப்பது நல்ல ஜனநாயக பண்பாக அமைய முடியாது.**

இராணுவ நடவடிக்கைகளைத் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினருக்கெதிராக மேற்கொண்டிருந்தனர்.

இந்திய அமைதிப்படையினர் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கெதிராக யுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தபோதிலும், அவர்களது வல்லரசுத் தன்மையைப் பறைசாற்றும் போர்த்தளபாடங்கள் வடக்கு-கிழக்கில், குறிப்பாக வடக்கில் பாரிய சேதங்களை ஏற்படுத்தியிருந்தன.

வடக்கு-கிழக்கின் தமிழ் பேசும் மக்கள் இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கைகளுக்கு அஞ்சியே இந்தியாவில் தஞ்சம் புகுந்து, தமது அரசியல் தீர்வு தொடர்பாக இந்தியாவின் உதவியை நாடியிருந்தனர்.

ஆனால் அமைதி பேணும் நடவடிக்கை என்ற ரீதியில் இந்திய இராணுவம் மேற்கொண்ட யுத்த செயற்பாடுகள் வடக்கு-கிழக்குப் பகுதியின் நிலைமையை மேலும் மோசமாக்கிவிட்டிருந்ததுடன், ஒரு தீர்வை எதிர்பார்த்திருந்த மக்களுக்கு பலத்த ஏமாற்றத்தையும் தருவதாக அமைந்திருந்தது.

இதேவேளை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் இந்தியப் படையினருடன் நடத்திய மோதல்கள், அவர்கள் ஓர் இராணுவ சக்தியாக வளர்ச்சியடைந்துள்ளனர் என்பதனையே வெளிக்காட்டியிருந்தன. அத்துடன், அவர்களைத் திருப்திப்படுத்தாத எந்தவொரு தீர்வையும் வடக்கு-கிழக்கில் ஏற்படுத்த முடியாதெனவும் நிரூபித்திருந்தனர்.

எனவே இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் வடக்கு-கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்களுக்கு அரசியல் தீர்வொன்றை ஏற்படுத்தும் முயற்சிகள் தோல்வியையே தழுவியிருந்தன.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் வடக்கு-கிழக்குப் பிரச்னைக்குத் தீர்வொன்றைக் காணுவதற்கான முயற்சிகள் தோல்விகண்டதையடுத்து, இன்று வரை அப்பிரச்னை எதுவித தீர்வையும் அடைய முடியாததாகவே காணப்படுகின்றது.

இந்நிலையிலேயே ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் உதவியுடன் இலங்கை இனப்பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்கான யோசனைகளை நோபல் பரிசு பெற்ற முக்கியஸ்தர்கள் முன்வைத்துள்ளனர்.

ஆனால் இவர்களது யோசனைகளுக்குப் பதிலளித்துள்ள இலங்கைப் பிரதமர் திரு.ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் தலையீடு இலங்கை இனப்பிரச்னை விடயத்தில் இடம் பெறுவதை ஏற்க முடியாதென அறிவித்துள்ளார்.

அத்துடன் இலங்கையின் இனப்பிரச்னையை இலங்கையினாலேயே தீர்த்துக் கொள்ள முடியும் என்றும் திரு.ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார். ஆனால் கடந்த பல வருடங்களாக கொளுந்து விட்டெரிந்து கொண்டிருக்கும் இனப்பிரச்னையைத் தீர்ப்பதில் இலங்கை அரசு எடுத்த முயற்சிகள் எத்தகையவை என்பதை அனைவரும் நன்கறிவர்.

இனப்பிரச்னையைத் தீர்ப்பதற்கென ஒரு தகுந்த சமரசத்திட்டத்தை தன்னால் ஆரம்பிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழுவிடம் கூட சமர்ப்பிக்க முடியாத நிலையில் இலங்கை அரசு காணப்படுகின்றது.

இதேவேளை ஐ.நா.வின் தலையீட்டையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நிராகரித்துள்ளார்.

தேவையற்ற தலையீடுகள், பயனற்ற யோசனைகள், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் தந்திரமான பேச்சுக்கள் என்பன நிச்சயம் நிராகரிக்கப்பட வேண்டியவையே.

ஆனால் சமாதானத்துக்காக நோபல் பரிசு பெற்றவர்கள் கூறும் யோசனைகளை எடுத்த எடுப்பிலேயே தட்டிக் கழிப்பது, ஒரு நல்ல ஜனநாயகப் பண்பாக அமைய முடியாது.

இன்று ஒரு விரைவான அமைதித் தீர்வே நாட்டுக்குத் தேவைப்படுகின்றது.

எனவே ஐ.நா.வின் தலையீட்டை ஏற்காவிடினும், அதனை ஓர் அரங்காகவெனினும் பாவித்து இலங்கையின் இனப்பிரச்னைக்குத் தீர்வு காண முயலுவதே ஓர் ஆரோக்கியமான நடவடிக்கையாக அமைய முடியுமெனக் கருதலாம். ■

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# மனித முகத்திலொரு குதிரை தப்பாமல் பிறந்தது அதற்கொரு குட்டி!

அப்பனுக்கு பிள்ளை தப்பாமல் பிறந்துள்ளான் என்று சொல்வதுண்டு.

மனித முகம் கொண்ட குதிரைக்கும் குட்டி அப்படித்தான் பிறந்துள்ளது.

அமெரிக்காவில் கெண்டக்கி மாநிலத்தில் உள்ள ஒரு பண்ணையில் கடந்த ஜுன் மாதம் 23ம் திகதி அந்த குதிரைக் குழந்தை பிறந்துள்ளது.

அதன் விபரம் அறிய ஆவலாக இருப்பீர்கள். இதோ விபரம்:

**மனிதன் பாதி மிருகம் பாதி உருவமானதடா?**



ஒல்லாந்து நாட்டைச் சேர்ந்த உயிரியல் ஆய்வாளரான டாக்டர் பீட்டர் டி விறீஸ் இந்த விஞ்ஞான விந்தையின் சூத்திரதாரி. டாக்டர் பீட்டரும் மற்றும் பன்னாட்டு விஞ்ஞானிகளும் உயிரணுக்களை இனமாற்றம் செய்வதன் மூலம் கிடைக்கும் பெறுபேறுகளையிட்டு ஆராய்ச்சி நடத்தத் தீர்மானித்தனர். இதன்படி ஒரு பெண்குதிரையின் கர்ப்பப்பையில் மனிதனின் பரிசோதனைக் குழாய் சினையை வைத்தனர். ஆய்வு பலன்தந்தது. மனித முகத்துடன் ஆண் 'குதிரைக் குழந்தை' ஒன்று பிறந்தது. தகவல் எதுவும் வெளியே தெரியாமல் இரகசியமாகவே இக்குதிரை வளர்க்கப்பட்டது. கண், மூக்கு, வாய் அத்தனையும் மனிதனின் உறுப்புகளுடன் காணப்பட்டன. இதனைப் பக்குவமாக வளர்த்தனர். மண்ணி என்று பெயரிட்டனர். ஆராய்ச்சிகளை இத்துடன் நிறுத்திவிடவில்லை.

மண்ணிக்கு 3 வயதான காயா என்ற பெண்குதிரை சோடியாகச் சேர்க்கப்பட்டது. இந்தக் காயாவுக்குத்தான் ஜுன் 23ம் திகதி, தகப்பனைப் போல முகம் கொண்ட குழந்தை பிறந்திருக்கிறது.

"குழந்தை தகப்பனை அப்படியே உரித்து வைத்திருக்கிறது. மனிதனைப் போன்ற தலை, நெற்றி, கண், மூக்கு, வாய் ஆகிய அத்தனை அம்சங்களையும் குதிரைக் குழந்தை பெற்றிருக்கிறது. காதுகள் மட்டும் சற்றுப் பெரிதாகவும் முகம் முழுவதும் முடியாகவுமுள்ளதே வித்தியாசம்" என்று டாக்டர் பீட்டர் கூறுகிறார்.

மண்ணி 1991 ஏப்ரல் மாதம் பிறந்தது. எவருக்கும் தெரியாமல் ஒரு பண்ணையில் வைக்கப்பட்டு அதன் நடவடிக்கைகளை விஞ்ஞானிகள் ஆராய்ந்தனர். மண்ணியின் வளர்ச்சி வேகம் சற்று அதிகமாகவே இருந்தது.

ஆகவே இதற்கு விரைவிலேயே சோடி சேர்க்க வேண்டியிருந்தது. காயா என்ற சாதாரண பெண்குதிரை மண்ணியின் 'மனைவி' யானதும் விஞ்ஞானிகள் எதிர்பார்த்ததைப் போலவே தகப்பனைப் போல பிள்ளை பிறந்தது.

ஆராய்ச்சியாளர்களுக்கு இதனால் பல புதிய கண்டுபிடிப்புகளைக் கண்டறிய புதிய உத்வேகம் ஏற்பட்டிருக்கிறது.

மண்ணி தன்னுடைய குழந்தையை மிகவும் கவனமாகப் பேணி வருகிறது. ஏனைய 'குதிரைக்குணங்கள்' மண்ணியிடம் காணப்படாமல் அமைதியான போக்குடையதாகவே காணப்படுவதாக விஞ்ஞானிகள் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளனர்.

தகப்பனும் மகனும் விரைவில் மனிதர்களைப் போல உரையாடும் வாய்ப்பு இருப்பதாகவும் தெரிகிறது.

## தகவல் பெட்டி

# மனிதன் பாதி- வௌவால் பாதி வியப்பூட்டும் வௌவால் பையன்!



வௌவால் பையனை கராச்சினுள் போட்டுப் பூட்டுகிறார் வர்த்தகர்.

Dr. டிலான்

கடந்த வருடம் "வௌவால் பையனை"ப் பற்றிய தகவல்களை உயிரியல் நிபுணரான டாக்டர் நொண் டிலான் வெளியிட்டபோது அதனை ஒரு கட்டுக்கதை என்றே பலரும் நினைத்தனர். கைகொட்டி நகைத்தனர்.

அண்மையில் அமெரிக்காவின் நெவோடா மாநிலத்தில் ஒரு வர்த்தகரால் 'வௌவால் பையன்' மடக்கிப் பிடிக்கப்பட்ட போது நகைத்தவர்கள் ஆச்சரியத்தால் வாய் பிளந்து நின்றனர்.

தன்னுடைய வீட்டின் முன்புறத்திலுள்ள நீச்சல் தடாகத்தில் கூர்மையான பற்களையும், மிகப் பெரிய கண்களையும் கொண்ட ஒரு பிராணி நீச்சலடிப்பதை வர்த்தகர் கண்டவுடன் முதலில் திகைத்துப் போனார். அதன் காதுகளும் பெரிதாக இருந்தன.

உடனடியாக தனது நண்பர் ஒருவரது துணை யோடு அந்த அதிசயப் பிராணியைப் பிடித்து தனது கராஜில் அடைத்துவிட்டார்.

பாதி மனித உருவமும் பாதி வௌவால் உரு வமும் கொண்ட அந்தப் பிராணியை டாக்டர் டிலான் கடந்த வருடம் ஒரு மலைக்குகையில் கண்டுள்ளார். பிடிக்க முற்பட்டபோது தப்பியோடி விட்டது.

அவர் தான் கண்டதைச் சொன்ன போது பலர் கட்டுக் கதை என்றே கூறினார்கள்.

இப்போது உண்மை வெளியாகி விட்டது. வௌவால் பையன் மாட்டிக் கொண்டான்.

வௌவால் பையனின் எடை 19 இறாத்தல். நல்ல பலசாலி. பெரிய காதுகளால் கூர்மையாகக் கேட்கும் சக்தி கொண்டது. சாதாரண வௌவாலை விட இதன் சப்தம் 100 மடங்கு அதிகமாக இருக்கும். ஆனால் நாய் குரைக்கும் சப்தம் கேட்டால் பயந்து அமைதியாகி விடுகிறது.

டாக்டர் டிலான் குழுவினர் வௌவால் பையனை ஆராயப்போகின்றனர்.

## மினிக்கதை ① தருவது— அஸ்வதி

### "விசரன்"

எனக்கு ஒரு கார் இருக்கிறது.
காரை விட அதில் ஒட்டப்படும் 'ஸ்டிக்கர்' (Sticker)களில் தான்
எனக்குப் பிரியம் அதிகம். அத்தோடு
செய்கின்ற காரியத்தைப் பிரயோசனமாகச் செய்ய வேண்டும்
என்பது தொட்டிற் பழக்கம்.
நண்பன் மூலமாக இரண்டு 'ஸ்டிக்கர்கள்' கிடைத்தன.
'ரீட் குரான்'-குரானைப் படியுங்கள்.
'ஜீஸஸ் இஸ் கமிங்'-இயேசு வருகிறார்.
இந்துவான எனக்கு மற்ற மதங்களையும் மதிப்பதற்கு ஒரு நல்ல
சந்தர்ப்பம்.
காரின் பின் கண்ணாடியை இரண்டும் அலங்கரித்தன.
ராமருக்கு அணில் செய்த உதவிபோல எனது காரியமும் பரஸ்பர
புரிந்துணர்வுக்கு ஓரளவு உதவும் எனப் பெருமிதம் அடைந்திருந்தேன்.
ஒரு நாள்,
கோயிலில் காரை நிறுத்திவிட்டு காலைக்கழுவிக் கொண்டிருந்தேன்.
இரண்டு பெரியவர்கள் பேசிக்கொண்டார்கள்.
"என்னவென்று அர்த்தம் புரியாமல் ஒரு 'விசரன்' வாகனத்தை அழகு
படுத்த ஒட்டியிருக்கிறான்"

## "நிஜம்" - இதுவும் அஸ்வதி - மினிக்கதை ②

பல வருடங்களாகப் படுக்கையிலிருந்த அயல் வீட்டு ஆசிரியர்
இறந்து இருபது நாட்களாகிவிட்டன.
அவருடைய அந்தியேட்டியன்று 'நினைவுமலர்' ஒன்று வெளியிட
வேண்டியது மரபு.
யார் இறந்தாலும் அவரைப்பற்றி எழுதித் தரும்படி என்னிடம்தான்
ஓடி வருவார்கள்.
இதற்கும் அப்படித்தான். எழுத உட்கார்ந்தேன்.
"ஓ என் இனிய ஆசிரியனே!
ஆசிரியத்தொழிலுக்குப் பெருமையா?
உன்னால் அத்தொழிலுக்குப் பெருமையா?



நீ உனது குடும்பத்திற்கு மட்டும் தானா தலைவன்
உன்னைத் தலைவனாய் ஏற்றுக்கொண்ட எமது கிராமம்
உனது கொள்கைகளைத்தானே சுவாசித்தது.
நீ மூச்சு விட மறுத்தபோது
இந்த ஊரும் அல்லவா மரணித்து விட்டது......"
அதிகமானோருக்கு இதே 'ஸ்டைலில்' எழுதியதால் ஒருவருக்கு
எழுதியது போல் இன்னொருவருக்கும் வந்துவிடுமோ என்றபயத்தில்
எனது பேனா நத்தையுடன் போட்டி போடுகிறது.
நீண்ட நேரமாக யோசித்து யோசித்து எழுதிக்கொண்டிருக்கிறேன்.
"நீங்கள் மகளைக் கூட்டிவரப் பள்ளிக்கூடம் போகவில்லையா?"
உள்ளிருந்து மனைவி.
"அட, இந்தப் 'போக்கிரி ராஸ்கலாலை' எல்லாம் மறந்து போச்சு."

அட்வைஸ்

# அலுவலகப் பெண்களின் அழுத்தங்கள் தீர வழி!



கடுமையான யோசனை, கவலை, கடுமையான உழைப்பு (உடலுழைப்பு மட்டுமல்ல-மூளைக்கு வேலை அதிகரிப்பதையும் சேர்த்துத்தான்) ஆகியவற்றால் உடலுக்கும் உள்ளத்துக்கும் தாக்கம் அதிகரித்து அழுத்தம் ஏற்படலாம். இதனால் தலைவலி, சோர்வு, தடுமாற்றம், வெறுப்பு, கோபம் ஆகிய நிலைகள் ஏற்பட இடமுண்டு. இதனால் இரத்த அழுத்தமும் இருதய நோய்களும் ஏற்பட இடமுண்டு. ஆகவே அழுத்தம் நம்மைத் தாக்காமல் பார்த்துக் கொள்வதற்கு சில முன் ஏற்பாடுகளுண்டு. குறிப்பாக அலுவலகங்களில் உயர் பதவியிலிருக்கும் பெண்களுக்கும், பெரிய அலுவலகங்களில் செயலாளர்களாக இருக்கும் பெண்களுக்கும் நாம் தரும் சில குறிப்புகள் பயன்படும். சாதாரணமாக அலுவலகங்களில் பணியாற்றும் நங்கையருக்கும் கூட இவை பயன்படலாம்.

உங்களுடைய அன்றாட வாழ்க்கை முறைகளை - நடவடிக்கைகளை முன் கூட்டியே திட்டமிடுதல் அவசியம். அடுத்த நாள் எத்தகைய பணிகள் உங்களுக்கு இருக்கும் என்பதை உத்தேசமாகக் கணக்கிட்டு முதல் நாள் இரவே ஒரு சிறு குறிப்புப் புத்தகத்தில் குறித்துக் கொள்ளுங்கள். எல்லாவற்றையும் நினைவில் வைத்திருக்க எல்லாராலும் முடியாது. ஆகவே குறித்துக் கொள்ளுவது அவசியமாகிறது.

யார் யாருடன் தொடர்பு கொள்ள வேண்டும்- அவர்களுடைய முழுப் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் ஆகியவற்றை குறித்து வைத்துக் கொள்ளுங்கள்.

உங்கள் அலுவலகத்தில் உங்கள் மேசை லாச்சிகளின் சாவிகளை முன்னதாகவே எடுத்து உங்களுடைய கைப்பையுள் வைத்துக் கொள்ளுங்கள். அடுத்த நாள் உங்களுடைய செலவுகளுக்குத் தேவையான பணத்தையும் முதல் நாளிரவே பைக்குள் வைத்துக் கொள்ளுங்கள். (மேலதிகமாக கொஞ்சப்பணத்தை வைத்திருப்பது தவறில்லை)

முக்கியமாக எதையும் தாங்கும் மனஉறுதி உங்களிடம் இருக்க வேண்டும். அதிர்ச்சி ஏற்பட்டாலும் அதில் மனதை ஆழமாகப் பதியவைத்து 'அதிர்ந்து' போய்விடலாகாது.

அலுவலகத்தில் அதிக நேரம் இருக்கையில் இருந்து பணிபுரிபவரானால் காலையிலும் மாலையிலும் குறிப்பிட்ட தூரம் நடப்பது நல்லது.

# அழகுக் குறிப்புகள்
## மேனி எழிலுக்கு மேலும் செழிப்பூட்ட!

வெய்யிலில் சென்றால் முகம் கறுப்பது என்பது தவிர்க்க முடியாதது. இதற்கு காலையில் குளித்தவுடன், உடலுக்கு வியர்க்குரு நீங்கும் பவுடரை உபயோகிக்கலாம். (எண்ணெய் பசையுள்ள கிறீம்கள் முகத்தில் வெய்யிலின் பாதிப்பால் கருமையை உருவாக்கும்) மேலும் குளிர் கண்ணாடியும், குடையும் உபயோகிப்பது சிறந்தது. வெய்யிலில் சென்று வந்த சில நிமிடங்களின் பின் குளிர்ந்த நீரால் முகம் கழுவுவது புத்துணர்ச்சியை அளிக்கும்.

■



ஒலிவ் எண்ணெயைச் சற்றுச் சூடாக்கி, இரவில் படுக்கச் செல்வதற்கு முன்பாக தலையில் நன்றாகத் தேய்த்து வந்தால், கூந்தலின் நிறம் நல்ல கருமையாகவும், பளபளப்பாகவும் இருப்பதோடு, முடி மிக மென்மையாகவும் இருக்கும்.

■


பெண்களின் உடல் நிறம் பிரகாசமாகத் தோன்ற தக்காளிப் பழங்களை அன்றாடம் சாப்பிட வேண்டும். தோல் மினுமினுப்பாகத் தோன்றுவதுடன் சுருக்கங்களும் இல்லாமல் இருக்க தக்காளிப்பழம் மிகவும் நல்லது.


■

எலுமிச்சம் பழச் சாற்றுடன் துளசி இலைச் சாற்றைக் கலந்து தேமல் உள்ள இடத்தில் தடவி வந்தால் தேமல் மறையும்.

# லேடீஸ் ஸ்பெசல்

# நீங்களும் தைக்கலாம்




*பெண்களுக்கான இரவு உடை*
*(NIGHT DRESS)*

**தேவையான அளவுகள்:**
நீளம் 40"
அகலம்-உங்கள் நெஞ்சுச்சுற்றளவோடு 2 1/2" கூட்டி 4 ஆல் பிரித்து வரும் அளவு.

**முன்பக்கம் வரையும் முறை:**

உங்கள் சாறி பிளவுசின் மாதிரி உருவை வரைந்து கொள்ளவும். டாட்ஸ் வரையத் தேவையில்லை. சாறி பிளவுசின் கைவளைவின் முடிவுப்புள்ளியான K யில் இருந்து வெளிநோக்கி 1/2" அளந்து L எனப் பெயரிடவும். L இல் இருந்தும் கீழ் நோக்கி 1/2" அளந்து M எனப் புள்ளியிடவும். Mஐ கை வளைவுடன் இணைத்துக் கையைப் பெரிதாக்கிக் கொள்ளவும். C இல் இருந்தும் வெளிநோக்கி 1/2" அளந்து N எனப் பெயரிட்டு M,N புள்ளிகளை நேர் கோட்டினால் இணைக்கவும். N இல் இருந்தும் வெளி நோக்கி 2" ம் அளந்து O எனப் பெயரிட்டு O வில் இருந்து மேல் நோக்கி 1/2 அளந்து P எனப் பெயரிட்டு NMP யினை வளைவாக இணைக்கவும். தோள்ச் சரிவுப்புள்ளி Hஇல் இருந்து வெளிநோக்கி 1" அளந்து ஜோக்கினுக்காக பெரிதாக்கிக் கொள்ளவும். இப்புள்ளிக்கு Qஎனப் பெயரிடவும். E, Q புள்ளிகளின் நீளத்தினை அளந்து இவ்வளவினை F இல் இருந்து கீழ் நோக்கி எடுத்து R எனப் பெயரிடவும். Q,R புள்ளிகளை வளைவான கோட்டினால் ஒரே அளவுகளுடன் இணைத்து ஜோக்கினைக் கீறவும். கழுத்தகலப் புள்ளி E இல் இருந்து Qஐ நோக்கி 1" அளந்து T எனப் பெயரிட்டு S,T புள்ளிகளை வளைவான கோட்டினால் இணைத்து கழுத்தினைப் பெரிதாக்கிக் கொள்ளவும்.


உமா மனோகரன்
(பாரிஸ் ஈழ்நாடு)

ஜோக்கின் வளை கோடும் கையின் வளை கோடும் சந்திக்கும் புள்ளியிலிருந்து Rஐ நோக்கி 1 1/2 அளந்து U எனப் பெயரிடவும். Uவில் இருந்து Nபுள்ளியைச் சந்திக்கும்படி நேர்கோடு வரைந்து V எனப் பெயரிடவும். U விற்கும் R ற்கும் இடையேயுள்ள தூரத்தைச் சம அளவாகப் பிரித்து Wஎனப் பெயரிடவும். அதைப் போன்றே கீழ்ப்பகுதியான D,N ஆகிய புள்ளிகளின் அளவையும் சமஅளவாகப் பிரித்து X எனப் புள்ளியிட்டு W,X புள்ளிகளை நேர்கோட்டினால் இணைத்துக் கீறவும். இவ் இணைப்புக்கள் வரைபடத்தில் வெட்டிப் பெரிதாக்கி ஒட்டுவதற்கு உதவுவதால் கீழ்ப்பகுதியைப் பெரிதாக்கி கொள்வதற்கு உதவுகிறது. ஜோக்கினைத் தனியாக வெட்டி எடுத்து மடிப்பைத் தவிர்ந்த ஏனைய பகுதிகளுக்கு 1/2" விடு வெளி விட்டுக் கொள்ளவும். ஜோக்கிற்குக் கீழ்ப்பகுதியைக் கோடு வரைந்து காட்டப்பட்டதின் படி வெட்டி எடுத்து வேறோர் பேப்பரில் ஒவ்வொரு துண்டு களையும் அதே அளவு இன்னுமொரு துண்டுகளாக பெரிதாக்கி ஒட்டி கீழ்ப் பகுதியை விரிவாக்கிக் கொள்ளவும். கீழ்ப்பகுதியை சுருக்கியோ அல்லது சுமோக்கிங் செய்தோ ஜோக்குடன் இணைத்துக் கொள்ளலாம்.

**பின்பக்கம்:**

பின்பக்க சாறி பிளவுசின் மாதிரி உருவை வரைந்து முன்பக்க இரவு உடை வரைந்தது போன்றே பின் பக்கத்தையும் வரைக.

## வீட்டுக் குறிப்புகள்



வெவ்வேறு விதமான கண் அலங்காரங்களைச் செய்து பார்க்க விரும்புகிறீர்களா? முதலில் ஒரு அலங்காரத்தைச் செய்து முடித்ததும் கலைத்து விடுங்கள். உடனடியாக அடுத்த மேக்-அப்பைப் போட வேண்டாம். சிறிது நேரம் கண்ணுக்கு ஓய்வு கொடுங்கள். குளிர்ந்த நீரால் கண்களைக் கழுவுங்கள். ஐஸ் கட்டியைச் சிறிது நேரம் கண்களின் மீது வைத்திருங்கள். அதன் பிறகே அடுத்த மேக்-அப்பைப் போட வேண்டும். இப்படிச் செய்வதால் கண்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது.



வீட்டில் வரவேற்பறையிலோ, அல்லது சாப்பிடும் அறையிலோ மேல் கூரையில் கார்ட்போட்டினால் கூரை அமைத்து அதன் இடையே டியூப் லைட்டையோ அல்லது சாதாரண பல்ப்பையோ பொருத்தி விடுங்கள். சினிமா தியெட்டரில் இருப்பது போல.... உங்களுக்குப் பிடித்த நிற பல்ப் எதுவானாலும் பொருத்திக் கொள்ளலாம். அறையே புதுப் பொலிவுடன் மாறிவிடும்.



குழந்தைகள் பச்சைக் கரட் சாப்பிட மறுக்கிறார்களா? கரட்டை வேகவைக்கும் போது, ஒரு தேக்கரண்டி சீனி சேர்த்துக் கொள்ளுங்கள். வேக வைக்கப்பட்ட கரட்டை வெறுமனே குழந்தைகளுக்குச் சாப்பிடக் கொடுங்கள். விரும்பிச் சாப்பிடுவார்கள். உடலுக்கும் நல்லது. இதனால் கரட்டிலுள்ள சத்து எந்த விதத்திலும் குறையாது.



ஃபிளவர் வாசில் வைக்கப் பூக்களை வாங்கும் போது, தண்டுப் பகுதியைச் சிறிதளவு வெட்டி விட்டு வாசினுள் ஒரு சிறு கிண்ணத்தில் தண்ணீர் வைத்து அதில் பூக்களை வையுங்கள். இதனால் பூக்கள் வாடிவிடாமல் நீண்ட நேரத்திற்கு ஃபிரெஷ்ஷாக இருக்கும்.

■

மாடி கைபிடிச்சுவர், ஜன்னல் ஓரம் என்று எல்லா இடத்திலும் உங்களுக்குப் பிடித்தமான செடி வகைகளை வளர்க்க ஆரம்பியுங்கள். தூசிகள் வீட்டினுள் படிவதை இது தவிர்க்கும். தூய்மையான காற்றும் கிடைக்கும்.

## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

முதற்பரிசு - பட்டுச்சேலை
ஆறுபேருக்கு இல்ல உபயோகப் பொருட்கள்
ஆறுதல் பரிசுகளாக காத்திருக்கின்றன.

மகளிர் மட்டுமே பங்குகொள்ளும் இப்போட்டியில் பங்கு கொள்வதும் சுலபம். பரிசுகளை பெறுவதும் மகா சுலபம்.

முரசு 9 முதல் வரப்போகும் 27வது வரை (15 முரசுகள்) லேடீஸ் ஸ்பெசல் தரும் விடயங்களை அவதானமாய் படித்துவாருங்கள்.

பின்னர் உங்களை நோக்கி கேள்விகள் தரப்படும். ஆக பதினைந்து கேள்விகள் மட்டும்.

சரியான விடை எழுதுவோரில் ஏழு பேரை பிரபல பிரமுகர் ஒருவர் தெரிவு செய்வார்.

# சமைப்போம் சுவைப்போம்

## இறைச்சிக்குருமா (வெள்ளைக்குழம்பு)

| | |
|---|---|
| ஆட்டிறைச்சி | அரைக்கிலோ |
| பெரிய வெங்காயம் (வெட்டியது) | 2 |
| ரம்பை இலை | சிறிதளவு |
| மஞ்சள் தூள் | சிறிதளவு |
| கறிவேப்பிலை | சிறிதளவு |
| தேங்காய்ப்பால் | 3/4கப் |
| சிறிய வெங்காயம் (வெட்டியது) | சிறிதளவு |
| மிளகுத்தூள் | சிறிதளவு |
| வினிகர் | சுவைக்கேற்ப |
| உப்பு | சுவைக்கேற்ப |
| நெய் அல்லது எண்ணெய் | 2 மேசைக்கரண்டி |
| நீர் | 2 கப் |

**செய்முறை:**

ஆட்டிறைச்சியை ஓரளவு நடுத்தரமான துண்டங்களாக வெட்டிக் கழுவிக் கொள்ளவும். இறைச்சித் துண்டங்களின் நடுப்பகுதியில் கூரான கத்தியினால் சற்று ஆழமாகக் கீறி விடவும். ஒரு பாத்திரத்தினுள் இறைச்சியைக் கொட்டி அதனுடன் அரிந்த பெரிய வெங்காயம், ரம்பை இலை, மஞ்சள் தூள், கறிவேப்பிலை, மிளகுத்தூள், வினிகர், உப்பு ஆகியவற்றை இட்டு நீர் விட்டுக் கொதிக்க விடவும். இறைச்சி நன்றாக வேகி வாசனை வந்ததும் தேங்காய்ப்பாலை விட்டு மேலும் சில நிமிடங்களுக்குக் கொதிக்க விடவும். வேறொரு பாத்திரத்தில் நெய்யை விட்டு நன்றாகச் சூடானதும் நறுக்கிய சிறிய வெங்காயத்தைக் கொட்டி பொன்னிறமாகும் வரை பொரிய விடவும். இதனுள் இறைச்சியைக் கொட்டி, குழம்பு சற்று இறுகும் வரைகுறைந்த வெப்பத்தில் சூடாக்கி இறக்கி வைக்கவும்.

## சீனிச்சம்பல்

| | |
|---|---|
| பெரிய வெங்காயம் (வெட்டியது) | 1/2கிலோ |
| மிளகாய் (தூளாக்கியது) | 20 |
| மாசிக்கருவாடு | 4 மேசைக்கரண்டி |
| பச்சை மிளகாய் (நீளமாக வெட்டியது) | 3 |
| கறிவேப்பிலை | சிறிதளவு |
| ரம்பை இலை | சிறிதளவு |
| ஏலக்காய் | 3 |
| கறுவாப்பட்டை | 2 சிறிய துண்டு |
| எண்ணெய் | தேவையான அளவு |
| நீரில் கரைத்த புளி | சுவைக்கேற்ப |
| உப்பு | சுவைக்கேற்ப |
| சீனி | 1 மேசைக்கரண்டி |

செய்முறை:

போதியளவு எண்ணெய்யை ஒரு பாத்திரத்தில் இட்டு நன்றாகக் கொதித்ததும், ஏலக்காய், கறுவாப்பட்டை, பச்சை மிளகாய், வெங்காயம், கறிவேப்பிலை, ரம்பை இலை ஆகியவற்றைக் கொட்டி நன்றாக வேக விடவும். வெங்காயம் பொன்னிறமானதும், மிளகாய்த்தூள், மாசிக்கருவாட்டுத்தூள் ஆகியவற்றையும் கொட்டி, மேலும் வேகவிட்டு கரைத்த புளியையும் அதனுடன் சேர்த்து 15 நிமிடங்களுக்குக் கிளறிக்கொண்டே நீர்ப்பற்று வற்றும் வரை வேகவிடவும். சீனிச்சம்பல் கருமை கலந்து சிவப்பு நிறமாகக் கெட்டியானதும் சுவைக்கேற்ப உப்பிட்டு அதனுடன் சீனியையும் சேர்த்து சில நிமிடங்களுக்குக் கிளறிக் கொண்டே இறக்கி வைக்கவும்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



மாதுரி டிக்சித்

அதர்மம் படத்தில் முரளி

சிம்பொனி இசைத்துவிட்டு திரும்பி வந்தது அன்னக்கிளி!

ணி

சி

சாதாரண சாதனையல்ல அது. அகில உலக இசை மேதைகள் அண்ணாந்து பார்த்து பிரமித்துப்போன சாதனை.

ஆசியாவின் மொஸார்ட்டை, தமிழ் பேசுவோரின் மொஸார்ட்டை இசையுலகின் உயரத்தில் அமர்த்திவிட்டு இளையராஜா திரும்பி வந்துவிட்டார்.

எண்பது முதல் நூற்றிஇருபது மேற்கத்திய இசைக்கருவிகளைக் கொண்டு ஒரே நேரத்தில் இயக்கி இசைக்கும் சிம்பொனி இசையை ஆசியாக்காரன் நினைத்துக் கூட பார்க்க முடியாது என்று சொன்னார்கள்.

நினைப்பது என்ன நினைப்பது. இசைத்தே காட்டுகிறேன் என்று சாதனை படைத்துவிட்டு இலண்டனிலிருந்து மீண்டும் திரும்பி வந்துள்ளார்.

27.07.93 அன்று இலண்டனில் இருந்து திரும்பிவந்த இளையராஜாவை தமிழ் திரையுலகமே விமான நிலையத்திற்கு திரண்டு போய் வரவேற்றது.

எனினும் இந்திய தொலைக்காட்சி மற்றும் தொடர்பு சாதனங்கள் ராஜாவுக்கு உரிய மரியாதை கொடுக்கவில்லை என்று தமிழக சஞ்சிகைகள் சில குமுறியுள்ளன.

'நோபல் பிலோமோனிக் இசைக்குழு' ராஜாவுக்கு 'இசைமேதை' என்று பட்டம் வழங்கிவிட்டது.

அன்னக்கிளி இன்னும் சிறகடித்து மேலே உயரும் போது தமிழ் பேசும் மக்களின் பெருமையும் கூடவே உயரும் அல்லவா? வாழ்த்துவோம் இளையராஜாவை! சாதனைக்கு ஏது எல்லை?

## கல்லூரிப் படிப்பிருந்தும் காலத்தை இழுத்தடிப்பு

திரைப்படக் கல்லூரி மாணவர்களின் படங்களுக்கு இனிமேல் நடிப்பதில்லை என்று விஜயகாந்த் முடிவெடுத்துள்ளதாக ஒரு பேச்சு அடிபடுகிறது.

சில படங்களை அவர்கள் வெற்றி சமயம் எடுத்து முடிக்கும்போதும் இப்போது இழுத்தடித்து காலத்தையும், பணத்தையும் விரயமாக்கி வருகிறார்கள் என்று விஜயகாந்த் கூட்டாளம் பேசுகிறது.

விஜயகாந்தைக் கேட்டால் திரைப்படக் கல்லூரி மாணவர்களின் படத்தில் நடிக்க எப்போதும் ரெடி என்கிறார்.

## பிசாசுமாதிரி ஆடுவேன்!

"நான் தினமும் வீட்டில் பிசாசு மாதிரி ஆடுவேன். போதும் நிறுத்திக்கோ என்று வீட்டார் சொல்லும் வரை ஆட்டம் தொடரும்" இப்படிச் சொல்லி இருப்பவர் வண்ண வண்ணப்பூக்கள் புகழ் மௌனிகா. நடனப் பயிற்சியில் தனக்குள்ள ஈடுபாட்டைத்தான் அப்படிச் சொல்லியிருக்கிறார். வேறு ஒன்றும் இல்லை. பயந்துவிடாதீர்கள்.

## முரளிக்கு கிடைத்த முதல் அனுபவங்கள்

அதர்மத்தை அதர்மத்தால் தான் அழிக்க வேண்டும் எனப் புறப்படும் ஒரு இளைஞனின் கதைதான் அதர்மம். கதாநாயகனாக நடிக்கும் முரளிக்கு முதல் சினிமாஸ்கோப், மற்றும் திரைப்படக்கல்லூரி மாணவர்கள் படம் என்று இரு முதல் அனுபவங்கள்.

முரளி ரஞ்சிதா ஜோடியுடன் நாசர், வடிவேலு, ஆர்.பி.விஸ்வம், அஜய் ரத்தினம், தலைவாசல் விஜய் ஆகியோர் நடிக்கிறார்கள். இளையராஜா இசையமைக்க, திரைப்படக்கல்லூரியில் சிறந்த இயக்குநருக்கான தங்கப்பதக்கம் பெற்ற ரமேஷ் கிருஷ்ணன் இப்படத்தை இயக்குகிறார்.

## காதோடு ...

★ இந்தியாவை வல் பண்ணும் ... கொட்டத்தைப் பற்றி ஒரே ... சிலம்பம் செய்தாராம். அவர் ... "இனி உனக்கு என் படத்தில் ... அழைப்புக் கொடுத்தாராம். ... நாயகியை வைத்தே ஒரு மாதி... மட்டும் உறுமென்று வைத்துக்கொ...

★ தன்னைத் தேடி யாரும் இ... ஒருரகமான பெயரைக் கொண்ட... நடிக்கும் நடிகை கவலை ... எல்லோருமே துணி நவிர்த்துவரு... இல்லை.

★ பிரிய நடிகையை சத்யமான உ... கோபத்தில் குதிக்கிறார். ... பிரித்துவிட்டதாக பொருமுகிறா... எடுக்கும் இடம் மாறிவிட்டாரே ...

★ பா.தீபன் தனக்கு சான்ஸ் ... ஒருவர் புகார் செய்து ... இஷ்டம் போல் எல்லாம் நீட்டு... தொலைக்க வேண்டுமாக்கும்.

★ இந்திப்பக்கம் பார்க்கப்போன ... ஓடி வருகிறார்களாம். போதை... செய்யும் தொல்லை தாங்க மு...

★ அவிழ்த்து போடுவதில் ஏற்ப... அவிழ்ப்பது என்ற பிரச்ச... கொண்டிருக்கிறாராம் ஐஸ் நடி... வாய்ப்பு தராமல் விட்டது ... சொல்லி அறுக்கிறாராம்.

★ பூ நடிகை பா.ராஜாவை தேடி... கையைச் சுட்டுக்கொண்ட அனு... என்று தலை தெறிக்க ஓடுகிற...

## போடுராமா சின்னமீனை!

ஆர்.கே. செல்வமணியின் இயக்கத்தில் பெரும் பொருட்செலவில் உருவாகிய கண்மணி பாதியிலே நின்று விட்டது. படத்தின் தயாரிப்பாளரான சேதுராமன் தற்போது ஆர்.கே. விஸ்வநாதனின் இயக்கத்தில் பாண்டியராஜன், அம்பிகா ஜோடியாக நடிக்கும் 'பொறந்தாலும் ஆம்பளையா பொறக்கக்கூடாது' என்ற பெயரில் குறைந்த பட்ஜெட் படத்தை உருவாக்கி வருகிறார்.

தயாரிப்பாளரிடம், கண்மணி கைவிடப்பட்டு புதிய படம் தொடங்கிய காரணத்தைக் கேட்டார் ஒருவர். அதற்குத் தயாரிப்பாளர், "புதிய படத்தில் வரும் இலாபத்தை வைத்துக் கண்மணியைத் தொடர்வேன்" என்றாராம். சேதுராமன் சின்ன மீனைப் போட்டு பெரிய மீனுக்கு டிரை பண்ணுகிறார்.



மன்சூர் அலிகான்


## தூக்கிலேறியும் பெயர்!

மன்சூர் அலிகான் மிக நீ...ண்ட பெயரை படத்திற்கு வைத்ததுடன் பெயரை சொல்லக் கஷ்டப்பட்டவர்கள் பலர். சொல்லச் சரியாகச் சொல்லி முடிக்கும் பெயரைச் சரியாகச் சொல்லி முடிக்கும் போட்டியும் ஆங்காங்கே நடத்தினாம். இப்போது படமும் வந்து ஓடுகிறது.

அடுத்து மன்சூர் அலிகான் தயாரிக்கப் போகும் படத்தின் பெயர் அதைவிட மிக நீ.....ட்டதாக இருக்கும் என்று நினைக்கிறீர்களா? அதுதான் இல்லை. படத்தின் பெயர்: 'ஆ' மிக சி...ன்னதான பெயர்தான். இதுவும் 'கின்னஸ்'க்கு போக வேண்டும் என்று மன்சூர் அடம்பிடிப்பாரோ தெரியவில்லை.

மேலும் மன்சூர் அலிகான் தன் படங்களுக்கு வைக்க யோசித்துள்ள பெயர்கள்- இராவணன், குசப்தமன், இவற்றோடு இன்னொரு பெயர் துரியோதனன். தூக்கிலேறிய வசதியான பெயர்தான்.





இவர்தான் பெரிய கண் கலைவுடைய கள்ளம் கபடமற்ற சிறுமியாக நடிக்கப் போகிறார். யார் இவர்? அட கடவுளே நீது மாதவி. ரஜனி-கமல் எல்லோருடனும் ஆடிப்பாடிவிட்டு இந்திப்பக்கம் போனவர் அல்லவோ இவர். இவரா சிறுமி? நல்ல கதைதான்.

## காதலியான கிளி

அவனோ கிராமத்து அப்பாவி வாலிபன். கள்ளம் கபடமற்ற வெள்ளை உள்ளம். அந்தக் கிராமத்துக்கு வருகிறது ஒரு பட்டிணத்துக் கிளி. அந்தக் கிளிக்கு வெள்ளை உள்ள வாலிபன் மீது ஒரு பிடிப்பு. இடையில் ஒரு தடை, விரிசல். பிறகெப்படி காதலர்கள் கரம் சேர்த்துக்கொள்கிறார்கள்? அதை வெள்ளித் திரையில் அல்லது நம்மூர் வீடியோத் திரையில் காண்க. படம் 'தாலாட்டு'. நாயகன் அரவிந்த் சாமி. நாயகி சுகன்யா. கதை, திரைக்கதை, வசனம் மற்றும் இயக்கம் டி.கே.ராஜேந்திரன். இசை: இளையராஜா.

## மினி சினி

★ டடி என்னும் மலையாளப் படமொன்றில் நடித்த அர்விந்த் ஸ்வாமி, பிரபல மலையாள இயக்குநர் ஜோஷியின் இயக்கத்தில் மீண்டும் மலையாளப் படம் ஒன்றில் நடிக்கவுள்ளார்.

★ பாலம், புதியகாற்று போன்ற படங்களை இயக்கிய கார்வண்ணன், அடுத்ததாக ஆயதபூஜை என்னும் படத்தினை இயக்கவுள்ளார்.

★ மறுபடியும் படத்தினை அடுத்து பாலுமகேந்திரா அன்னம் என்னும் படத்தினை இயக்கவிருக்கிறார். இதில் ரேவதி கதாநாயகியாக நடிக்கிறார்.

★ வில்லனாக இருந்து கதாநாயக அந்தஸ்துக்கு உயர்ந்த நாசர், விரைவில் ஒரு படத்தினை இயக்கப் போகிறார்.

★ கமல் முதன் முதலாக இயக்கும் மருதநாயகம் படத்தில் நடிப்பதற்கு சில ஹொலிவூட் நடிகர்களை அணுகியுள்ளார். படத்தின் தயாரிப்புச் செலவு 10 கோடியைத் தாண்டும் என்கிறார் கமலஹாசன்.

★ அரண்மனைக்கிளி படத்திற்கு ஒரு வருட காலமாகக் கதாநாயகியைத் தேடிய ராஜ்கிரன். இப்போது தனது அடுத்த படத்திற்கு கதாநாயகி தேடும் படலத்தை ஆரம்பித்துள்ளார்.

★ மிஸ்டர் கார்த்திக், கண்சிமிட்டும் நேரம் போன்ற படங்களைத் தயாரித்த சரத்குமார், மிஸ்டர் சரத் என்னும் படத்தின் பெயரை தனது பினாமி மூலம் பதிவு செய்து வைத்துள்ளார்.

★ சபாஷ்பாபு முடிவடைந்தவுடன் மாஸ்டர் குமாரவேல் என்னும் திரைப்படத்தில் டி.ராஜேந்தரின் மகன் சிலம்பரசன் நடிக்கப் போகிறார்.

★ தாமரை என்னும் படத்தில் கதாநாயகனாக நடிக்கும் நெப்போலியனுக்கு விரைவில் டும்டும். அதுதான் திருமணம் நடக்கப் போகிறது.

★ சரவணன் கதாநாயகனாக நடிக்கும் அக்கரைச் சீமையிலே படத்தில் திரைப்படக் கல்லூரியில் படித்த பீட்டர்ராஜ் என்னும் புதிய வில்லன் அறிமுகமாகிறார்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்





ஷர்மிலாவின் இதயராகத்தில் - இங்கே - சசி, டிலானி



இலங்கையின் சின்னத்திரையில் உங்கள் உள்ளம் கவர நம்மூர் கலைஞர்கள் உருவாக்கி வருகிறார்கள் 'சந்தர்ப்பம்' தொலைக்காட்சி நாடகம்! அதில் இது ஒரு கட்டம். என். ராஜா, ஸ்ரீதர் பிச்சையப்பா, நிலாமதி பிச்சையப்பா, புனிதா.



## அட..... இது - நம்ம படம்!

நம் நாட்டில் தமிழ்ப்படத் தயாரிப்பு முயற்சியொரு காலகட்டத்தில் குட்டிப் பிடித்திருந்தது. வாடைக்காற்று போன்ற பல சிறந்த திரைப்படங்களை நம் கலைஞர்கள் உருவாக்கியிருந்தார்கள் என்பது ஆச்சரியமாக இருந்தது.

பின்னர் நீண்ட இடைவெளி - 12 வருசம். இப்போது மீண்டும் ஒரு முயற்சி.

போராதனை எ.எ.ஜுனைதீன் தயாரித்து இணை இயக்குநராக இருந்து வழங்கப்போகும் நம்நாட்டு திரைக்காவியம் "ஷர்மிலாவின் இதயராகம்".

இளைய பேதும் விலைக்ச் சிங்கள, தமிழ், முஸ்லிம் கலைஞர்களுக்கும் வாய்ப்பளிக்கப்பட்டிருப்பது பாராட்டத்தக்க முயற்சி.

இன்னொரு சந்தோசம். 12 ஆண்டுகளுக்குப் பின் உருவாகும் படத்தை கறுப்பு வெள்ளையில் எடுத்தால் சரிவருமோ? ஆகாது. அதனால் முழுமையாக வண்ணத்தில் தயாரிக்கிறார்கள்.

## ...சொல்லுகிறோம்

...படத்தின் இயக்குநர் ஊட்டியில் அடுத்த ...வருகிறார். இளம் நாயகியை வலையில் போட ...ருக்கவே இரவுப் பட்டினிக் கோரத்தில் ...ட்டவில்லை" என்று புதிய நடிகைகளுக்கு ...அதுவும் சரிவராமல் போகவே அந்த இளம் ...டிப்பை முடித்தாராம். முகத்தை ...கொண்டிருந்தாராம். பட்டினிக் கொடுமைதான்.

...இப்போ வருவதில்லையென்று துணியில் ...ஆனால் துண்டுத் துணி மட்டும் மாட்டி ...க் கொண்டுள்ளாராம். இப்போது ...வருவதால் பாவம் அவருக்கு வயசு முன்புபோல்

...துவர் சுட்டி விட்டதால் பிரியமானவர் ...னவர்தான் அவரை வித்தை செய்து ...றாராம். அவருக்காக சொந்தத்தில் படம் ...ரோ என்ற வருத்தம். மகா வருத்தம்.

...தாகக் கூறி ஏமாற்றிவிட்டதாக புது நடிகை ...சா... தருவதாகக் கூறியதால் அவர் ...கொண்டாராம். அதை வேறு சொல்லித்

...சில நடிகைகள் அலறியடித்துக் கொண்டு ...மருந்தில் பிரியமான சில இ.நடிகர்கள் ...யவில்லையாம்.

...டுள்ள கடும் போட்டியால் இனி எதை ...சனையில் தலை முடியைப் பிய்த்துக் ...நடிகை. பா.தீபன் தனது அடுத்த படத்தில் ...பெரிய துரோகம் என்று எல்லோரிடமும்

...போய் சான்ஸ் கேட்டாராம். ஏற்கனவே ...ருந்ததால் பா இயக்குநர் ஆளைவிடு தாயே ...றாராம்.

இந்தித் திரையுலகின் இன்றைய கனவு நாயகிகளுக்கு வயது ஏறிக்கொண்டிருக்கிறது. ஸ்ரீதேவிக்கு எத்தனை வயதென்கிறீர்கள? 33. மாதுரி டிக்சித்துக்கு 28 வயது. இப்போதும் மார்க்கட் நிலவரம் நன்றாகத்தான் இருக்கிறது.

இவர்களைப் பற்றிய கிசுகிசுக்களுக்கு குறைவில்லை. அவர்களும் கவலைப்பட்டவர்களில்லை. எவ்வளவுதான் காதல், கிசுகிசு விவகாரங்களில் மாட்டினாலும் அவர்கள் திரையுலகை நேசிக்கிறார்கள். 35 வயதுக்குப் பின்னரே திருமணம் என்று முடிவோடு இருக்கிறார்கள். வங்கியில் நிறையப் பணம் போட்டு வைத்திருக்கிறார்கள். அதை அனுபவிக்க வரப்போகும் ராஜகுமாரர்கள் யாராக இருக்கும்? அதுதான் பலரின் எதிர்பார்ப்பு.

இந்தித் திரையுலகில் மற்றொரு முன்னணி நடிகை ஜூஹி. அடுத்த வருடம் முழுவதும் வரை காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரை ஷூட்டிங். படு பிசி. அவருக்கு வயது 26. இப்போதைக்கு திருமணம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்கிறார். அப்படியானால் காதல்? அது இல்லாமலா? ஆனால் மெயின் விசயம் திரையுலகம்தானாம்.

## ரஜினிக்கும் பொருந்தும் விதி

யாராவது நடிகர் ஒருவரின் படம் தமிழ் நாட்டில் நன்றாக ஓடினால் அவர் ஏற்கெனவே பிற மொழிகளில் நடித்த படங்கள் தூசு தட்டப்பட்டு தமிழுக்கு மொழி மாற்றப்படும். இதில் ரஜினிகாந்தும் விதிவிலக்கல்ல.

உழைப்பாளி வசூலில் சக்கை போடு போட்டுக் கொண்டிருப்பதால் அடுத்து ரஜினியின் மொழிமாற்றுப் படமொன்று தமிழுக்கு வரவுள்ளது.

ரஜினி ஹிந்தியில் நடித்த தமாச்சா என்றபடத்தை தமிழில் ஏழைத் தோழன் என்று பெயர் மாற்றி மொழிமாற்றி தரப்போகிறார்கள். இப்படத்தில் ரஜினியுடன் ஜித்தேந்திரா, பானுப்பிரியா, அம்ரிதா சிங் ஆகியோர் நடித்துள்ளனர்.

அமெரிக்காவில் வாழும் இந்தியரான ஷமனுக்கு ஒரு ஆசை. படமொன்று எடுக்க வேண்டும். அதுவும் இந்தியாவில் எடுக்க வேண்டும். அந்தப்படத்தில் நடிகர்களோடு கார்ட்டூனும் நடிக்க வேண்டும் என்பதே ஆசை.

மனதிலே ஆசை. பையிலே பணம். ஜெனரல் புரொடக்ஷன் உதவியோடு கதை, திரைக்கதை பொறுப்பை ஏற்று எடுத்துக் கொண்டார்.

தொழில்நுட்ப இயந்திரங்கள், வர்ணங்கள், அந்த வர்ணங்கள் தீட்ட அமெரிக்காவில் பிரபலம் அனைத்தும் சேர்ந்தன. ஆனால் இருந்து வந்து இந்தியக் கலைஞர்கள்தான். இயக்குவது இந்தியக் கலைஞர்கள்தான். படத்தின் பெயர் 'ஓ பாப்பா!' படத்தின் நாயகனின் பெயர் ராக்கி. அமெரிக்காவில் வளர்ந்தவர். தயாரிப்பாளர் ஷமனின் மகனே அவர்.

'ஓ பாப்பா' படத்தில் பாப்பா வேடத்தில் நடிப்பது யார் தெரியுமோ? கார்ட்டூனே தான். கார்ட்டூன் சாகசங்கள் பல செய்து கதாநாயகனை காப்பாற்றுகிறது. ஆடியும் காட்டுவதும் வைத்துத்தான் உருவாக்கப்பட்டிருக்கிறது.

இசை - தான்சன். பாடல்கள் வைரமுத்து. இயக்குநர் - ஸ்ரீகுட்டன். ஆகஸ்ட் 27ம் திகதி இந்தியாவில் திரைக்கு வருகிறது. பின் இங்கு சின்னத் திரைகளுக்கு வரும்!

## பாடும்போது பற்றிக்கொள்ளும் நெருப்பு!

பிரபல பாடகி மடோனா இளம் உள்ளங்களை கவர்ந்திழுக்கும் கவர்ச்சித் தேவதை.

இந்தத் தேவதை ஹொலிவூட் திரையுலகிலும் அவ்வப்போது தோன்றுவது வழக்கம்.

ஹொலிவூட்டில் இப்போது கவர்ச்சி யாதும் அதனை ஒட்டிய ஏனைய சமாச்சாரங்களாலும் தூள்கிளப்பிவரும் படம் 'பொடி ஒவ் எவிடன்ஸ்'.

நாயகி மடோனாதான். வயதான ஒருவரை அவரது சொத்துக்காக இளம் பெண் ஒருவர் மடக்கி தன் வலையில் போடுவதுதான் கதை. கையோடு ஒரு கொலை, பின் விசாரணை, சட்டத்தரணியை மயக்குதல், படுக்கையில் வீழ்த்துதல் என்று ஒரே த்ரில்தான். கவர்ச்சித் தேவதை ஏமாற்றவில்லை. பாடும் போதே தேவையில் ஆடைகளை நெகிழ்த்துபவர் திரையில் என்றால் கேட்கவா வேண்டும்.

என்றாலும் மடோனாவுக்கு தனிப்பட்ட கவலை ஒன்று உண்டு. அது குழந்தை இல்லாக்குறை. அந்தக் குறையை தீர்க்க தந்தையொன்றை தேடி உலகெங்கும் ஆட்களை அனுப்பியிருக்கிறாராம்.



ஜூஹி சாவ்லா



காட்டூன் பாப்பா!



மாதவி

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# பாப்பா முரசு

## பசு விற்ற பணம்

மனிதருக்கு கஷ்டம் அல்லது நோய் வரும் பொழுது தன் கஷ்டம் நீங்கினால், நோய் தீர்ந்தால் சுவாமிக்கு அது செய்கிறேன், இது செய்கிறேன் என்று வேண்டிக் கொள்வார்கள். கஷ்டமும், நோயும் நீங்கிய பிறகு சுவாமியிடம் வேண்டிக் கொண்டதையே மறந்து விடுவார்கள். எவராவது கேட்டால் "தெய்வக் கடன் நூறாண்டு" என்று சாமர்த்தியமாகச் சொல்லி நழுவி விடுவார்கள். சிலர் வெகுநாள் கழித்து தெய்வகுற்றம் ஏதாவது ஆகிவிட்டால் என்ன செய்வதென்று பயந்து வேண்டுதலை நிறைவேற்றிவிடுவார்கள். தன் மனைவியின் வேண்டுதலை ஒரு மகா கஞ்சன் எவ்வளவு சமார்த்தியமாக நிறைவேற்றினான் என்பதுதான் இக்கதை.

பழனூர் என்ற ஊரில் கோவிந்தன் என்று ஒருவன் இருந்தான். அவனிடம் ஒரு பசு இருந்தது. அதற்கு வைக்கோல், புல், புண்ணாக்கு எதையும் காசு கொடுத்து வாங்கிப் போட மாட்டான் கோவிந்தன். தானே அருகிலுள்ள காட்டிற்கு அதை ஓட்டிக் கொண்டு போய் புல் மேய விடுவான். காட்டில் தான் புல் இயற்கையாகவே செழித்து வளர்ந்திருக்குமே. பசு வயிறு நிறையப் புல் மேயும். அதனால் அது நிறையப் பால் கொடுக்கும்.

பசு கொடுக்கும் பாலை விற்றுத்தான் தன் மனைவி, குழந்தை ஆகியோரைக் காப்பாற்றி வந்தான் கோவிந்தன். நிறைய பால் கொடுக்கும் அந்தப் பசுவை வாங்கப் பலர் போட்டி போட்டார்கள். கோவிந்தன் அதை விற்க மறுத்து விட்டான்.

இப்படி இருக்கையில் கோவிந்தனுக்கு ஒரு நாள் கடும் காய்ச்சல் வந்தது. படுத்த படுக்கையானான். கண்களைத் திறக்கவேயில்லை. பிதற்ற ஆரம்பித்தான். அவன் மனைவி பயந்து விட்டாள். உடனே ஓடிப்போய் வைத்தியரை அழைத்து வந்தாள். அவர் கோவிந்தனின் உடல் நிலையைப் பரிசோதித்து விட்டு மருந்துகள் கொடுத்தார். காய்ச்சல் அப்போதைக்குக் குறைந்ததே தவிர குணமாகவில்லை. எப்பொழுதும் உடம்பு நெருப்பாகச் சுட்டுக் கொண்டிருந்தது.

கோவிந்தனின் மனைவி மிகவும் கவலைக்குள்ளானாள். ஒரு வாரமாகியும் கணவனுக்கு காய்ச்சல் குறையவில்லையே என்று அவள் அழ ஆரம்பித்தாள்.

அப்போது அவள் வீட்டிற்கு அடுத்த வீட்டுக்காரி சின்னத்தாயி வந்தாள். கோவிந்தன் கண் விழிக்காமல் காய்ச்சலில் படுத்திருப்பதையும் அவன் மனைவி அழுதபடி இருப்பதையும் பார்த்தாள்.

"மீனாட்சி.....உன் புருசனுக்கு வந்த காய்ச்சல் குணமாக நீயும் தினம் வைத்தியம் செய்துகிட்டுத்தான் இருக்கிறாய். ஆனாலும் பாவம், காய்ச்சல் போகவே இல்லை. இனிமேல் மருந்தை நம்பிப் பிரயோசனமில்லை. கடவுளைத்தான் நம்பணும். நம்ம ஊர் எல்லையம்மன் இல்ல, அவளை வேண்டிக்க குணமாயிடும்," என்றாள் சின்னத்தாயி.அதுவும் சரிதான் என்று தோன்றியது, கோவிந்தனின் மனைவி மீனாட்சிக்கு.

"என்ன அக்கா வேண்டிக்கிடணும்?" என்று கேட்டாள், மீனாட்சி. "எல்லையம்மன் கோயில் கோபுரத்தை புதுசா கட்டுறாங்க இல்ல, அதுக்கு நிறையப் பணம் வேணுமாம். அதனால கோயில் உண்டியல்லே பணம் போடுறதா வேண்டிக்க" என்றாள் சின்னத்தாயி.

"எங்கிட்ட பணமில்லையே அக்கா?" என்று அழுதபடி கூறினாள் மீனாட்சி.

"பணமில்லாட்டா என்ன மீனாட்சி? பசுமாடு இருக்கில்லே. அதை வித்து பணத்தைக் கோயிலில போடறேன்னு வேண்டிக்க," என்று சொல்லி விட்டுப் போய்விட்டாள் சின்னத்தாயி.

அப்படியே தங்கள் பசுமாட்டை விற்று வரும் பணத்தை உண்டியலில் போடுவதாக எல்லையம்மனை வேண்டிக்கொண்டாள் மீனாட்சி.

கோவிந்தனுக்குக் காய்ச்சல் கொஞ்சமாகக் குறையலாயிற்று. ஒரு சில நாட்களுக்குள்ளாகவே அவன் படிப்படியாகக் குணமாகிப் படுக்கையை விட்டு எழுந்து நடமாடத் தொடங்கி விட்டான். காய்ச்சல் அவனை விட்டுப் போய்விட்டது.

கணவனிடம் தான் எல்லையம்மனிடம் வேண்டிக்கொண்டதை சொன்ன மீனாட்சி உடனே பசுவைச் சந்தைக்கு ஓட்டிச் சென்று விலைக்கு விற்று அந்தப் பணத்தை கோயில் உண்டியலில் சேர்க்கச் சொன்னாள்.

அந்தப் பசு தரும் பாலில் தான் குடும்பமே ஜீவிக்கிறது. அதை விற்றுப் பணத்தைக் கோயில் உண்டியலில் போடச் சொல்கிறாளே மீனாட்சி, எனத் தயங்கினான் கோவிந்தன். தயங்கிய கோவிந்தனை மீனாட்சி நச்சரிக்கலானாள்.

கோவிந்தன் மறுநாள் சந்தைக்குப் பசுவை ஓட்டிச் சென்றான். வழி எல்லாம் இதே யோசனை அவனுக்கு. இப்போது பசுமாட்டை விற்று விட்டால் நாளையிலிருந்து குடும்பத்தை எப்படிக் காப்பாற்றுவது? இதை மீனாட்சி கொஞ்சம் கூட யோசிக்கவில்லையே, நாம் தான் யோசிக்க வேண்டுமென்று தீர்மானித்தான் கோவிந்தன்.

வழியில் கோழிக்கடை வந்தது. அங்கே எக்கச்சக்கமான கோழிகளை விற்கக் கொண்டு வந்திருந்தார்கள். ஒரு கோழியைப் பிடித்துப் புஷ்டியாக இருக்கிறதா? என்று பார்த்தான் கோவிந்தன். கோழி 'கொழு கொழு' என்றிருந்தது. கோழியின் விலை எவ்வளவு என்று கேட்டான். கோழி விற்பவன், ஐந்து ரூபாய் என்றான். ஒரு ரூபாய்க்குக் கேட்டான் கோவிந்தன். காலையிலிருந்து ஒன்றும் விற்பனையாகாததால் பரவாயில்லை என்று ஒரு ரூபாய்க்குக் கோழியைக் கொடுத்து விட்டான் கோழிக்காரன்.

ஒரு கையில் கோழியையும் மறுகையில் பசுமாட்டையும் பிடித்துக் கொண்டு சந்தைக்குள் சென்றான் கோவிந்தன்.

ஜனக்கூட்டம் அதிகமாக இருக்கும் இடமாகப் பார்த்துப் பசுமாட்டுடனும், கோழியுடனும் நின்று கொண்டான் கோவிந்தன். "கோழி வாங்கலையோ கோழி, பசு வாங்கலையோ பசு" என்று கூவினான். கூட்டம் அவனைச் சுற்றிச் சேர்ந்தது. பசுவை அதன் லட்சணப்படி எல்லாம் இருக்கிறதா? வாயில் எவ்வளவு பற்கள் உள்ளன? என்று பார்த்துப் பிறகு பசுவின் விலையைக் கேட்டது கூட்டம்.

"பசுவின் விலைதானே? ஒரு ரூபாய்" என்றான் கோவிந்தன்.

"ஒரு ரூபாயா?" என்று நம்ப முடியாதவனாகக் கேட்டான் வாங்க வந்தவன். இருநூறு ரூபாய் பெறுமதியுடைய மாட்டை ஒரு ரூபாய்க்கு விற்கிறேன் என்கிறானே, உடனே வாங்கிவிட வேண்டும். மடியிலிருந்த முடிச்சை அவிழ்த்து ஒரு ரூபாயை எடுத்துக் கோவிந்தனிடம் கொடுத்தான்.

கோவிந்தன் அந்த ஒரு ரூபாயை வாங்கிக் கொள்ளாமல் "ஒரு ரூபாய்க்கு நான் இந்தப் பசுமாட்டை உனக்கு விற்க வேண்டுமானால் இந்தக் கோழியையும் நீ வாங்கிக் கொள்ள வேண்டும்," என்றான்.

பசுவை வாங்க வந்தவன், பசுவையே ஒரு ரூபாய்க்கு விற்கிறேன் என்கிறவன், கோழிக்குச் சில பைசாதான் விலைசொல்வான் என்றெண்ணி, "கோழி என்ன விலையப்பா?" என்று கேட்டான்.

"இருநூறு ரூபாய் அய்யா" என்றான் கோவிந்தன்.


"பசுவின் விலை ஒரு ரூபாய், கோழியின் விலை இருநூறு ரூபாயா? என்னையா அநியாய விலையா இருக்கே?" என்றான்.

உடனே அருகிலிருந்த ஒருவன் அப்படியானால் என்ன? இரண்டும் சேர்த்து இருநூற்று ஒரு ரூபாய்தானே" என்றான்.

பசுவைவாங்க வந்தவன் இருநூற்று ஒரு ரூபாயைக் கொடுத்து விட்டு பசுவையும், கோழியையும் வாங்கிக் கொண்டு போனான்.

கோவிந்தன் கோழி விற்ற இருநூறுரூபாய்க்கு ஒரு புதுப் பசுவாங்கி, பசு விற்ற ஒரு ரூபாயை எல்லையம்மன் கோயில் உண்டியலில் போட்டுவிட்டான்.

கோவிந்தனின் சாமர்த்தியத்தைப் பார்த்தீர்களா? குழந்தைகளே!





## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம் இல-3

கீழே உள்ள படத்திற்கு அம்சமாக வர்ணம் தீட்டி அனுப்புங்கள். சிறப்பான ஒரு படத்திற்கு ரூபா 25 பரிசாக காத்திருக்கிறது.

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 28/8/93

வர்ணம் தீட்டும் போட்டி இல-03
தினமுரசு வாரமலர்
88/14 சோமாதேவி பிளேஸ்
கொழும்பு-5.



## விஞ்ஞான விளக்கங்கள்

### ஏன்? எப்படி?.

1. மின்கலத்தினால் இயக்கப்படும் வானொலிப் பெட்டியை கூடிய ஒலியுடன் தொழிற்படச் செய்தால் மின்கலங்கள் விரைவில் மின்னிறக்கம் அடைகின்றன. காரணம் - கூடிய ஒலியுடன் தொழிற்படச் செய்யும் போது கூடிய மின் தேவை. இதனால் மின்கலம் விரைவாக மின்னிறக்கம் அடையும்.
2. சினிமாத் தியட்டர்களின் சுவர்கள் நடுப்பகுதியில் காற்றிடைவெளி இருக்குமாறு இரட்டைச் சுவர்களாக அமைக்கப்படுகின்றது. காரணம் - சுவர்களுக்கிடையிலுள்ள வளி ஒரு அரிதிற் கடத்தி. இதனால் சத்தம் வெளியில் கேட்காது.
3. மின்னல் பளீச்சிட்டு தெரிந்து சில வினாடிகளின் பின்னரே இடி ஓசை கேட்கிறது. காரணம் - ஒலியை விட ஒளியின் வேகம் கூட.
4. ஒரு பஸ்சின் தடுப்புக்கள் (பிரேக்) திடீரென பிரயோகிக்கப்படும் போது பஸ்சில் செல்லும் பிரயாணிகளும் முன்னோக்கி வீசப்படக்காரணம்- ஆரம்பத்தில் பஸ்சும் பிரயாணிகளும் ஒரே சமநிலையான வேகத்தில் சென்று கொண்டிருப்பர். தடுப்புப் பிரயோகிக்கப்படும் போது பஸ்சினுடைய வேகம் நிறுத்தப்படும். ஆனால் பிரயாணிகளின் வேகம் நிறுத்தப்படாது. எனவே அவர்கள் முன்னோக்கி வீசப்படுவர்.
5. ஐதரசன் பர ஒட்சைட்டு கறுப்புப் போத்தலில் அடைக்கப்பட்டு குளிரான இடத்தில் வைக்கப் படுகின்றது. காரணம் - வெப்பத்தினால் ஐதரசன் பரஒட்சைட்டு நீராகவும் ஒட்சிசனாகவும் பிரிகையடைவதைத் தடுப்பதற்காகும்.
6. ஒரு பந்தை சுவருக்கு எறியும் போது அது சுவரில் பட்டு மீண்டும் திரும்புகிறது. காரணம் - ஒரு தாக்கத்துக்கு சமனும் எதிரானதுமான மறுதாக்கம் உண்டு.
7. ஒடிக்கலோன் உடலில் படும் போது குளிர்கின்றது. காரணம் - ஒடிக்கலோன் உடலில் இருந்து வெப்பத்தைப் பெற்று ஆவியாவதால் குளிர்கின்றது.
8. தண்டவாளங்களின் கீழ் அகலமான சிலிப்பர் கட்டைகள் பயன்படுத்தப்படுகின்றன. காரணம்- சிலிப்பர் கட்டைகளின் பரப்பளவு கூட இதனால் அமுக்கம் குறைந்து விசை குறையும் எனவே தண்டவாளம் புதையாது.

அழகானந்தம் அரவிந்தன்
கொழும்பு-15.

## விடுகதைகளும் விடைகளும்

1. வெள்ளைக்காரன் பிள்ளைக்குத் தலையில் கறுப்பு தொப்பி.
2. ஒரு காலிலே எட்டுப்பேர் ஊர்வலம்.
3. எல்லையில்லாத வலையிலே எண்ணமுடியாத மீன்கள்.
4. உன்னோடும் வரும் என்னோடும் வரும் ஊருக்கெல்லாம் ஒன்றே ஒன்றுதான்.
5. ஒரு கால் மனிதனுக்கு அரைக் கிலோ தாடி.
6. ஆளில்லா வீட்டுக்கு வாய்பேசாத காவல்காரன்.
7. குளத்திலே விழுந்தாலும் நீர்அலை பாயாது.

விடைகள்
1. தீக்குச்சி
2. குடை.
3. நட்சத்திரங்கள்.
4. சூரியன்.
5. தும்புத்தடி.
6. பூட்டு.
7. சூரியன்.

செல்வி க.இந்திராணி
பின்தெனிய சிங்கள வித்தியாலயம்
பின்தெனிய.

1. உனக்குச் சொந்தமான பொருள. ஆனால் உன்னைவிட அதிகமாய் உபயோகிப்பார் மற்றவர்கள்.
2. அங்குல மாட்டுக்கு அரைமைல் வால்
3. ஆயிரம் பேர் அணிவகுப்பர் ஆனாலும் தூசு கிளம்பாது.
4. பகலெல்லாம் ஊரைச் சுற்றுவான் இரவில் கதவோரம் காத்துக் கிடப்பான்.
5. கறுப்புத் தொப்பி அணிந்த கனவான். அவர் யார்?
6. எப்போதும் வயிறு உப்பியே இருப்பான்.
7. பார்வை இல்லாத மனிதன் பலபேருக்கு வழி சொல்வான்.
8. திறந்து திறந்து மூடினாலும் சிறிதும் ஓசை கேட்காது.

விடைகள்.
1. பெயர்
2. ஊசியும் நூலும்.
3. எறும்புக்கூட்டம்.
4. செருப்பு.
5. தீக்குச்சி.
6. பானை.
7. கைகாட்டி
8. கண் இமை.

எம்.ஏ.ஸீ.எம். ப்ாயிஸ்,
புத்தளம்.

## ஐந்தின் பெருமை

1. பஞ்சதோத்திரம்: தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம்.
2. பஞ்சகந்தம்: இலவங்கம், ஏலம், கருப்பூரம், சாதிக்காய், தக்கோலம்.
3. பஞ்சகௌவியம்: கோமயம், கோசலம், தயிர், நெய், பால்.
4. பஞ்சகாவியம்: சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி.
5. பஞ்சசீலம்: கொல்லாமை, கள்ளுண்ணாமை, பொய்யாமை, களவாமை, காமமின்மை.
6. பஞ்சசக்தி: ஆத்மசக்தி, இலிங்கசக்தி, திரவியசக்தி, பூதசக்தி, மந்திரசக்தி.
7. பஞ்சபட்சி: வல்லூறு, ஆந்தை, காகம், கோழி, மயில்.
8. பஞ்சரத்தினம்: சுகர்தீ, பொன், மரகதம், மாணிக்கம், முத்து
9. பஞ்ச இலக்கணம்: எழுத்து, சொல், பொருள், யாப்பு, 'அணி.
10. பஞ்சலோகம்: இரும்பு, ஈயம், செம்பு,பொன், வெள்ளி.
11. பஞ்ச வண்ணம்: கருமை, செம்மை, பச்சை, மஞ்சள், வெண்மை.
12. பஞ்ச பாண்டவர்: தருமன், வீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன்.
13. பஞ்சபுலன்: சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்.
14. பஞ்சப் பொறி: மெய், வாய், கண், மூக்கு, செவி.
15. பஞ்சாங்கம்: திதி, நட்சத்திரம், வாரம், யோகம், கரணம்.
16. பஞ்சமா பாதகம்: கொலை, கொள்ளை, கள்ளுண்ணல், காமம், பொய்.
17. பஞ்சபூதம்: நிலம், நீர், நெருப்பு, வாயு, ஆகாயம்.

எம். பிரதாப்
நு/மெதடிஸ்த தமிழ் மகா வித்தியாலயம்.
கந்தப்பளை.

## மூன்றின் பெருமை

1. முக்கனி- மா, பலா,வாழை
2. முப்பொருள்-பதி, பசு, பாசம்.
3. முத்தேவை- உணவு, உடை, உறையுள்.
4. மூவிடம்- தன்மை, முன்னிலை, படர்க்கை.
5. முச்சங்கம்-முதல், இடை, கடை.
6. முக்கரணம்-மனம்,வாக்கு, காயம்.
7. மும்மலம்-ஆணவம், கன்மம், மாயை.
8. மூவேந்தர்-சேரர், சோழர், பாண்டியர்.
9. முத்தமிழ்- இயல், இசை, நாடகம்.
10. முக்குணம்- சாத்துவிதம், இராசதம், தாமதம்.
11. மும்மூர்த்திகள்-பிரம்மா, விஷ்ணு, உருத்திரன்.
12. மூன்று சக்திகள்- இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி.
13. மூவுலகம்-சுவர்க்கம், மத்திமம், பாதாளம்.
14. மூவாசை- மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை.
15. முக்காலம்- இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம்.

செல்வன்: எம்.ஏ.ஹஸ்மத் ஹஸன்
தர்கா நகர்.

## இலக்கிய நயம்

# சலவை மொட்டு

**தமிழகக் கவிஞரும் பேராசிரியருமான அப்துல் ரகுமான் ஒரு அற்புதக் கவிஞர். உரை நடையிலும் மன்னர். தாஜ்மஹல் காதல் உள்ளங்களை இன்றும் கொள்ளைகொள்ளும் வெள்ளைமாளிகை. தாஜ்மஹல் அப்துல் ரகுமானின் பார்வையில் சலவை மொட்டாகிவிடுகிறது. இனி அப்துல் ரகுமான் பேசட்டும்.**

தாஜ்மஹலைப் பார்க்கச் சென்றிருந்தபோது நடந்த நிகழ்ச்சி எனக்கு இன்றைக்கும் நினைவிருக்கிறது.

என்னுடன் தமிழ் நாட்டுத் தம்பதிகள் வந்திருந்தனர். கணவனுக்கு இருட்டுவதற்குள் டில்லி போய்ச் சேர வேண்டுமே என்று கவலை. அதனால் அந்தச் சலவைக் கல் சங்கீதத்தை ரசித்துக் கொண்டிருந்த மனைவியை ஓர் இடத்தில் நிற்கவிடாமல் விரட்டிக் கொண்டிருந்தார். என்னால் தாள முடியவில்லை.

"ஒரு கணவன் தன் மனைவிக்கு ஓர் உலக அதிசயத்தையே தந்திருகிறான். நீங்களோ உங்கள் மனைவிக்கு அதைப் பார்ப்பதற்கு நேரம் கூடத் தரமாட்டேன் என்கிறீர்களே" என்றேன். கணவன் வெட்கத்தால் தலை குனிந்தான்; மனைவி புன்னகைத்தாள்.


இப்படித்தான் வாழ்க்கையில் மனம் தோய்ந்து ரசிக்க வேண்டியவற்றை ரசிக்க விடாமல் சிலரைச் சில விஷயங்கள் தடுத்துவிடுகின்றன.

இலக்கிய உலகத்திலும் திரைப்பட உலகத்திலும் அழகான கவிதைகளைத் தந்திருக்கும் சாஹிர் என்ற உருதுக் கவிஞர் தாஜ்மஹலைப் பற்றி எழுதிய புகழ் பெற்ற கவிதை இது:

இந்தப் பச்சைப் புல்வெளி
இந்த அலங்காரச் சுவர்கள்
ஆடம்பர மாடங்கள்
ஒரு மாமன்னன் பணத் திமிரால்
எங்களைப் போன்ற
ஏழைகளின் காதலை இங்கே
ஏளனம் செய்திருக்கிறான்
காதலி! நாம்
இந்த இடத்தில்
சந்திக்க வேண்டாம்.

சாஹிர் இங்கே தாஜ்மஹலைப் பார்க்கவில்லை, அதைக் கட்டியவனைப் பார்க்கிறார். அதிலும் கட்டியவனின் இதயத்தைப் பார்க்கவில்லை; அவன் பையைப் பார்க்கிறார். எல்லாவற்றையும் இப்படிப் பார்க்க ஆரம்பித்தால் கடைசியில் எதுதான் மிஞ்சும்?

தாஜ்மஹல் பணத்தால்தான் கட்டப்பட்டது என்றால் இந்த உலகத்தில் ஒரே ஒரு தாஜ்மஹல் தானா இருந்திருக்கும்? இல்லை. தாஜ்மஹல் பணத்தால் கட்டப்பட்டதல்ல; இப்படியொரு சோக செளந்தரிய சொப்பனத்தைப் பணத்தால் காண முடியாது. கல்லில் கண்ணீர்த் துளியை வடித்து வைக்கக் காசினால் முடியாது.



ஒரு சுவையான செய்தி. இந்தக் கவிதையை எழுதிய போது சாஹிர் தாஜ்மஹலைப் பார்த்திருக்கவில்லை. தாஜ்மஹலைப் பார்த்திருந்தால் அவர் இப்படி எழுதியிருப்பாரா என்பது சந்தேகம்தான்.

புகழ் பெற்ற மற்றொரு கவிஞர் ஷகீல், சாஹிருக்குப் பதில் சொல்வதைப் போலத் திரைப்படத்திலேயே ஒரு கவிதையை எழுதினார்.

அரசன் ஒருவன்
அழகிய தாஜ் மஹலைக்
கட்டியதன் மூலம்
அகில உலகத்திற்கும்
ஒரு காதல் சின்னத்தைத்
தந்திருக்கிறான்
இதன் நிழலில் எப்போதும்
காதல் பேசப்படும்
என்றைக்கும் முடியாத கதையை
அவன் இங்கே எழுதியிருக்கிறான்.
தாஜ் மஹல்-
காதல் ஆலயத்தின்
காந்த தீபம்
அதைச் சுற்றும் விட்டில்களில்
ஏழைகளும் உண்டு.
செல்வர்களும் உண்டு.

ஷகீலாவது பரவாயில்லை. ஹம்ஸ் என்ற கவிஞர் சாஹிரைக் கடுமையாகவே தாக்குகிறார். அவருடைய ஆவேசம் அவரை தாஜ் மஹலின்- காதலின் வக்கீலாகவே ஆக்கி விடுகிறது. ஷாஜஹானுக்காகவும் சேர்த்தே அவர் வாதிடுகிறார்.

அவன் அரசன் இல்லை
ஓர் ஏழைக் கைதி

என்று வரலாற்றை ஆதாரம் காட்டி வாதம் செய்கிறார்.

காதலின் பார்வையல்லவா
இந்தக்
கல்லுக்கு
உயிர் கொடுத்தது
இது காதலின் சாதனை

என்று பணத்தால் கட்டப்பட்டது என்ற வாதத்துக்கு மறுப்புத் தெரிவிக்கிறார்.

மன்னனும் ஒரு
மனிதன் தானே

என்று கேட்கிறார். இறுதியில்,

தாஜை வெறுப்பவன்
மனிதனாக இருக்கமுடியாது

என்று கடுமையாகவே சாடுகிறார்.

காதலின் அற்புதமாக மட்டுமல்ல, மானுடத்தின் மகோன்னதப் படைப்பாகவும் தாஜ்மஹலைக் காண்கிறார் ஷம்ஸ்.

குஜராத்திக் கவிஞர் நானாலாலின் பார்வை வித்தியாசமானது. அவர் தாஜ்மஹலை வெறும் காதலின் நினைவுச் சின்னமாக மட்டும் கருதாமல் மணவாழ்க்கையில் நிறைவு பெற்ற காதலின் அழகிய வெளிப்பாடாகக் காண்கிறார்.

கலைக்க முடியாத
திரு மணத்திற்கான
அழகிய மணப் பந்தலா இது?
.......
கதிரவன் உதிப்பான் மறைவான்
யமுனையில் வெள்ளம்
வரும் வடியும்
ஆனால் தாஜ் மஹல்

காதலின்
குளிர்ந்த இனிய தீப்பிழம்பு
காதல் ஜோதியாய்ச்
சுடர் விடுகிறது
ஒவ்வொரு காதல் நெஞ்சிலும்
ஒளிர்கிறது.

காதலிக்காகக் காதலன் தாஜ்மஹல் என்ன? எதையும் கட்டுவான். ஏனென்றால் அது ஒரு போதை உலகம். ஆனால் ஒரு கணவன் தன் மனைவியின்- அதுவும் பதினான்கு பிள்ளைகளின் தாயின் நினைவாக இப்படியொரு அற்புதத்தைக் கட்டுவது சாதாரணமான செயலல்ல. இந்தப் பார்வையிலும் தாஜ் ஓர் உலக அதிசயம்தான்.

'சரணடையாவிட்டால் தாஜ் மஹலைத் தகர்த்து விடுவேன்' என்று மிரட்டிய மகனுக்கு அஞ்சி அரசைத் துறந்தவன் ஷாஜஹான். காதலிக்காக மகுடத்தைத் துறந்த ஆங்கில நாட்டு அரசனைவிட, இறந்துவிட்ட மனைவியின் நேசத்திற்காக அரசைத் துறந்த ஷாஜஹான் எவ்வளவு உயர்ந்து நிற்கிறான்!

தாகூரும் தாஜ்மஹலைப் பார்த்தார். ஆனால் அது பணத் திமிரின் படைப்பாக அவருக்குத் தோன்றவில்லை. அதற்கு மாறான உணர்வைத் தாஜ்மஹல் அவருக்கு அளித்தது.

முத்து மணி வைரங்களின் பிரகாசம்
வெற்று வானத்தின் பிரமையான
வானவில்லைப்போல் அழிந்துவிடும்
ஆனால் இந்தத் தாஜ் மஹல்
முடிவற்ற காலத்தின் கன்னத்தில்
நிரந்தரமாக நின்று மின்னும்
கண்ணீர்த் துளி

சக்கரவர்த்தி!
வடிவற்ற மரணத்தின் தோளில்
நீ எத்தகைய மாலையைச்
சூட்டியிருக்கிறாய்!
மரணமற்ற ஆடையில்
எப்படி நீ அதை வரவேற்றிருக்கிறாய்!
காலமெல்லாம் அழுவதற்கு
நேரமேது?
அதனால் உன்
முடிவற்ற கண்ணீரை
நிரந்தர மௌனத்தில்
பொதித்து வைத்துவிட்டாய்


அந்தப்புரத்தில்
நிலா இரவில்
எந்தச் செல்லப் பெயரால்
உன் இனியவளை
மென்மையாக அழைத்தாயோ
அந்த ரகசியப் பெயரை
இங்கே நிரந்தரத்தின் மார்பில்
உறங்க வைத்திருக்கிறாய்

உன்னுடைய இந்தப்
பிரகாசமான தூதுவன்
காலக் காவலர்களுக்குத் தப்பி
மௌனமாகப் பயணம் செய்கிறான்
இந்தச் செய்தியோடு:
"நான் உன்னை மறக்கவில்லை
மறக்கவில்லை
என் இனியவளே!
நான் உன்னை மறக்கவில்லை."

தாஜ்மஹல் ஷாஜஹான் என்ற மன்னனால் கட்டப்பட்டதல்ல; காதலால் கட்டப்பட்டது. தாஜ்மஹல் மும்தாஜ் என்ற அரசிக்கான நினைவுச் சின்னம் அல்ல; காதலின் நினைவுச் சின்னம். தாஜ்மஹல் சமாதி அல்ல; காதல் கொலுவிருக்கும் மாளிகை.

ஞாபக நறுமணம் சிதறிவிடாமல் பாதுகாப்பது போல் குவிந்திருக்கும் அந்தச் சலவை மொட்டை, பௌர்ணமி இரவில் பார்க்கும் ஒவ்வொருவனும் மௌனமாக அழுகிறான். அந்தக் கண்ணீர் மனித மலரின் தெய்விகத் தேன்.

## இறக்குமதிச் சிரிப்பு



## இந்த வாரம் உங்கள் பலன்

(22.08.93 முதல் 28.8.93 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | திடீர் பயணம், செலவு மிகுதி. | பி.ப 3 மணி |
| திங்கள்- | காரிய சித்தி, கடின உழைப்பு. | பி.ப் 4 மணி |
| செவ்வாய்- | பலவித பேறு, தல யாத்திரை. | பி.ப 5 மணி |
| புதன்- | உயர்வு, முயற்சி மேன்மை. | காலை 9 மணி |
| வியாழன்- | நற்சிறப்பு, இல்ல மகிழ்ச்சி. | காலை.11 மணி |
| வெள்ளி- | உறவினர் வருகை, உள்ளம் மகிழ்ச்சி. | காலை 10 மணி |
| சனி- | எடுத்தகாரியம் சித்தி, பணத் தட்டுப்பாடு. | காலை 9 மணி |

அதிஷ்டநாள் - திங்கள், அதிஷ்ட இலக்கம்-9

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | அந்நியரால் தொல்லை, அகால போசனம். | பி.ப 2 மணி |
| திங்கள்- | வீண் விரயம், செலவினால் கவலை. | பி.ப 4 மணி |
| செவ்வாய்- | தனதானிய லாபம், கடன் தீரல்.. | காலை 10 மணி |
| புதன்- | காரிய சித்தி, கீர்த்தி. | காலை 9 மணி |
| வியாழன்- | பயம், வீணான கவலை. | காலை 11 மணி |
| வெள்ளி- | பெரியோரால் நன்மை, குடும்ப சுகம். | காலை 10 மணி |
| சனி- | தனவிருத்தி, காரிய சித்தி. | பகல் 2 மணி |

அதிஷ்டநாள் - புதன், அதிஷ்ட இலக்கம்-2

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | சுப கருமம், செலவுகள் மிகுதி. | காலை 8 மணி |
| திங்கள்- | பணப்புழக்கம், உல்லாச வாழ்க்கை. | காலை 11 மணி |
| செவ்வாய்- | தனதானிய விருத்தி, காரியானுகூலம். | பி.ப் 2 மணி |
| புதன்- | முன்னேற்றம், வெளியிடப் பிரயாணம் | பி.ப 3 மணி |
| வியாழன்- | விருந்துபசாரம், மனமகிழ்ச்சி. | காலை 10 மணி |
| வெள்ளி- | அந்நியர் உதவி, புதிய முயறச்சி. | காலை 9 மணி |
| சனி- | பண வரவு, பெரியோர் உதவி. | காலை 11 மணி |

அதிஷ்டநாள் - செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | துயர் அதிகம், பண நெருக்கடி. | பி.ப 3 மணி |
| திங்கள்- | கவலை குறைவு, காரியானுகூலம். | பி.ப 1 மணி |
| செவ்வாய்- | எடுத்த காரியம் வெற்றி, வாழ்க்கை உயர்வு. | காலை 10 மணி |
| புதன்- | தேக சுகம் பாதிப்பு, திடீர் செலவு. | காலை 11 மணி |
| வியாழன்- | பெரியோர் நடபு, அதிகார விருத்தி. | காலை 10 மணி |
| வெள்ளி- | துயர் நீக்கம், தூர இடப்பிரயாணம். | பி.ப 2 மணி |
| சனி- | பகை ஒழியும், பாரிய பொறுப்பு சேரும். | காலை 9 மணி |

அதிஷ்டநாள் - வியாழன், அதிஷ்ட இலக்கம்-7

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தனதானிய நஷ்டம், பயணம். | பகல் 12 மணி |
| திங்கள்- | உத்தியோக உயர்வு, கௌரவம். | காலை 9 மணி |
| செவ்வாய்- | பணவரவு, செலவினால் கவலை. | காலை 11 மணி |
| புதன்- | புதிய முயற்ச்சி, வீண் அலைச்சல். | பி.ப 2 மணி |
| வியாழன்- | நண்பர்களால் உதவி, தொழில் மேன்மை. | பி.ப 3 மணி |
| வெள்ளி- | பெரியோர் உதவி, கல்வி முன்னேற்றம். | பி.ப 4 மணி |
| சனி- | பணவரவு மந்தம், வீணான பிரச்சனை. | காலை 9 மணி |

அதிஷ்டநாள் - திங்கள், அதிஷ்ட இலக்கம்-4

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| சிம்மம் | - சூரியன், புதன் |
| கன்னி | - வியாழன், செவ்வாய் |
| விருட்சிகம் | - இராகு |
| மகரம் | - சனி |
| இடபம் | - கேது |
| மிதுனம் | - வெள்ளி |

துலாம், விருட்சிகம், மற்றும் தனு இராசிகளில் சந்திரன் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூசம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | கூடா நட்பு, மனக்கலக்கம். | பி.ப 1 மணி |
| திங்கள்- | பதவி உயர்வு, முன்னேற்றம். | பி.ப 3 மணி |
| செவ்வாய்- | ஆடம்பரச் செலவு, அதிக மகிழ்ச்சி. | பி.ப் 4 மணி |
| புதன்- | அறிவாளர் சேர்க்கை, அதிக நன்மை. | காலை 11 மணி |
| வியாழன்- | மனமகிழ்ச்சி, உயர்வுத்தன்மையுண்டு. | காலை 10 மணி |
| வெள்ளி- | பணவரவு, காரிய சித்தி. | காலை 9 மணி |
| சனி- | வீண் பிரயாசம், அந்நியர் நட்பு. | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள் - வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | அந்நியர் நட்பு, அதிகாரவிருத்தி. | காலை 11 மணி |
| திங்கள்- | புகழ், தெய்வ அனுகூலம். | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- | தொழில் சிறப்பு, பணவரவு. | பி.ப 4 மணி |
| புதன்- | கீர்த்தி, பணத்தட்டுப்பாடு. | காலை் 10 மணி |
| வியாழன்- | பயணம், அகால போசனம். | காலை 11 மணி |
| வெள்ளி- | பெண்களினால் தொல்லை, வீண் பகை. | காலை 9 மணி |
| சனி- | மனமகிழ்ச்சி, செலவுக்கஷ்டம். | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள் - வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-9

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப்பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | துக்க நிகழ்ச்சி, செலவு. | பகல் 12 மணி |
| திங்கள்- | கௌரவம், கீர்த்தி. | பகல் 1 மணி |
| செவ்வாய்- | தீயோர் நட்பு, அபகீர்த்தி. | காலை 10 மணி |
| புதன்- | துயர் அதிகம், மனக்குழப்பம். | காலை 11 மணி |
| வியாழன்- | நடைக்கஷ்டம், தொல்லை மிகுதி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- | தெய்வ அனுகூலம், புகழ் மேன்மை. | பி.ப 4 மணி |
| சனி- | உயர்வு, மனமகிழ்ச்சி. | காலை 10 மணி |

அதிஷ்டநாள் - திங்கள், அதிஷ்ட இலக்கம்-1

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம் அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | எடுத்த காரியத்தடை, ஏமாற்றம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- | காரியசித்தி, பணத்தட்டுப்பாடு. | பி.ப. 4 மணி |
| செவ்வாய்- | உயர்ச்சி, கௌரவம். | காலை 10 மணி |
| புதன்- | பெரியோர் சகவாசம், பணப்பேறு. | காலை 11 மணி |
| வியாழன்- | தொழில் சிறப்பு, உயர்வான நிலை. | காலை 10 மணி |
| வெள்ளி- | மறைமுக எதிர்ப்பு, காரியத்தடை. | காலை 11 மணி |
| சனி- | உறவினரால் கவலை, செலவு மிகுதி. | பி.ப 3 மணி |

அதிஷ்டநாள் - புதன், அதிஷ்ட இலக்கம்-5

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பிள்ளைகளால் மகிழ்ச்சி, பணச்செலவு. | காலை 9 மணி |
| திங்கள்- | நடைக்கஷ்டம், கவலை. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | பெரியோர் நட்பு, தூரஇடப்பிரயாணம். | காலை 11 மணி |
| புதன்- | பணவரவு, காரியசித்தி. | காலை 8 மணி |
| வியாழன்- | துன்பம் அகலும், காரியம் கைகூடும். | காலை 10 மணி |
| வெள்ளி- | அதிகார விருத்தி, தெய்வ அனுகூலம். | காலை 11 மணி |
| சனி- | எதிர்பாரா செலவு, பணக்கஷ்டம். | பி.ப. 3 மணி |

அதிஷ்டநாள் - திங்கள், அதிஷ்ட இலக்கம்-3

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தனதானிய இலாபம், கௌரவம். | பி.ப 2 மணி |
| திங்கள்- | ஆடம்பரச் செலவு, பொருள்பேறு. | பி.ப 3 மணி |
| செவ்வாய்- | காரியசித்தி, கௌரவம். | பி.ப் 5 மணி |
| புதன்- | மனமகிழ்ச்சி, காரியானுகூலம். | காலை 10 மணி |
| வியாழன்- | பொன்பொருள் வரவு, பூமியால் லாபம். | காலை 11 மணி |
| வெள்ளி- | துயர் நீங்கும், புதியமுயற்ச்சி பலிதம். | பகல் 1 மணி |
| சனி- | காணி பூமி பிரச்சனை, கௌரவம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள் - புதன், அதிஷ்ட இலக்கம்-8

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன்முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | செய்தொழில் விருத்தி, தேக சுகம் பாதிப்பு. | காலை 9 மணி |
| திங்கள்- | புதியோர் நட்பு, முயற்ச்சி மேன்மை. | பி.ப 2 மணி |
| செவ்வாய்- | பயம் மிகுதி, கல்வி உயர்வு. | பி.ப 4 மணி |
| புதன்- | பெரியோர் நட்பு, துன்பம் நீங்கல். | பி.ப 3 மணி |
| வியாழன்- | கவலைகள் ஒழியும், காதல் பிரச்சனையுண்டு. | காலை 11 மணி |
| வெள்ளி- | பணவிருத்தி, செய்தொழில் மந்தம். | காலை 9 மணி |
| சனி- | உயர்வு நிலை. காரியசித்தி. | காலை 11 மணி |


அதிஷ்டநாள் - செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-3

www.padippakam.com


நன்றி - நூலகத்திட்டம்

அறிந்து கொள்ளுங்கள் – ஆரோக்கியம் பெறுங்கள் – ஆனந்தமாய் வாழுங்கள்

# மருத்துவ + விந்தைகள்







## பில் கிளின்ரன் புல் வெளியில் ஓடுகிறார்-

## கிளின்ரனின் உணவுப் பழக்கத்திற்கு தடை! அதனால் குறைந்துவரும் அவரது எடை!

எந்த ஆணின் வெற்றிக்குப் பின்னும் ஒரு பெண் இருக்கிறாள் என்பது பெரும்பாலும் உண்மைதான்.

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரனின் வெற்றியில் அவரது மனைவி ஹில்லரிக்கும் பங்குண்டு. அதை கிளின்ரனே சொல்லியும் இருக்கிறார்.

கிளின்ரனின் கௌரவம் உயரக் காரணமாக இருந்த ஹில்லரி அவரது கனம் குறையவும் காரணமாக இருக்கிறார் என்பது புதிய செய்தி. என்ன கனம்? தலைக்கனமா? இல்லை. எடை ஐயா எடை!

வெள்ளை மாளிகைதான் அமெரிக்க ஜனாதிபதியின் வாசஸ்தலம். அங்கு வலது காலை எடுத்து வைத்த பிடி பிடித்திருக்கிறார். அதனால் அவரது எடை 30 இறாத்தல் கூடியது.

இப்படியே விட்டால் சரிவராது என்று நினைத்த ஹில்லரி வெள்ளை மாளிகைக்குள் புகுந்தவுடன் செய்த முதல்வேலை என்ன தெரியுமோ?

கொழுப்பு வகைகள், வெண்ணை உணவுகள், மாட்டிறைச்சி, கோழி இறைச்சி, உருளைக்கிழங்கு போன்ற வற்றை கிளின்ரனின் கண்களில் படாமல் மறைத்துவிட்டார்.

தன்னை மீறி கிளின்ரன் எந்த உணவையும் உட்கொள்ளாமல் தடுத்தார்.

கிளின்ரனின் மகள் செல்சியா இனிப்பு வகைகளை சாப்பிடும் போது அதில் கைவைக்கவும் கிளின்ரனுக்கு தடை போட்டுவிட்டார்.

வாரத்திற்கு ஒரு இறாத்தல் வீதம் பில் கிளின்ரனின் எடை குறைந்தது. 25 இறாத்தல் இப்போது குறைந் துள்ளது. மேலும் குறைந்து கொண்டே யிருக்கிறது.

வெள்ளை மாளிகையின் புல் வெளிகளில் அமெரிக்காவின் 42வது ஜனாதிபதி ஓடிக்கொண்டிருக்கிறார். சில சமயங்களில் பழுதூக்கும் பயிற்சியும் உண்டு.

ஒருமைல் ஓடினால் 100 கலோரி எரிக்கப்படுகிறது. பில் கிளின்ரன் ஒவ்வொரு வாரமும் ஒரு இறாத்தல் கொழுப்பை ஓடியே எரித்துவிடுகிறார்.

ஆனால் அமெரிக்க ஜனாதிபதி போது பில் கிளின்ரனின் எடை 200 றாத்தல். 47 வயதுக்கு இந்த எடை அதிகம் என்று கருதிய ஹில்லரி கிளின்ரன் கணவருக்கு கடும் கட்டுப் பாடுகளை விதித்தார்.

கிளின்ரன் ஒரு சாப்பாட்டு ராமர். தேர்தல் பிரச்சார காலத்தில் தினமும் 10 தடவைகூட ஒரு பலருக்கு உடல் சீரமைப்பு ஆலோசகராக இருந்த ஜாக் என்ன சொல்கிறார் தெரியுமோ? "கிளின்ரன் தனது விருப்புக்குரிய உணவு வகைகளை விட்டுக் கொடுத்துத்தான் உடலை சீராக வைத்திருக்க வேண்டும் என்பதில்லை. பலவருடங்களாக கொழுப்பு கொண்ட உணவு வகைகளை நானும் மனைவியும் சாப்பிட்டு வருகிறோம்" என்கிறார். ஜாக் ஒரு 77 வயது முதிர் இளைஞன்.

சாப்பாட்டுப் பிரியர்களுக்கு கிளின்ரனை விட ஜாக்கைப் பிடிக்கும். அதற்காக மூக்கு முட்டப் பிடித்து மூச்சிழுக்க வேண்டாம். சொன்னால் கேளுங்கள்.



சுழலும் சக்கரத்தில் கிளின்ரன். மெல்லிய கட்டுடலைப் பெற சைக்கிள் ஓட்டமும் மூச்சிரைக்கும் பயிற்சியிலும். மற்றும் கொழுப்பற்ற உணவை விலக்கலிலும் உறுதி பூண்டுள்ளார்.

## குள்ளமான பிள்ளைகள் உயரமாக வழி உண்டா?

### வளர்கின்றன வாதங்கள்

குள்ளமான பிள்ளைகளை மருத்துவ முறையில் வளர்ச்சியடையச் செய்யலாமா என்பது பற்றிய கருத்து மோதல்களும் வாதப்பிரதிவாதங்களும் அமெரிக்காவில் வளர்ந்து வருகின்றன. தங்கள் பிள்ளைகள் உடலளவில் வளர்ச்சி குன்றி வருவதனால் அவர்களுடைய வருங்காலம் பாதிப்படையலாம் என்று பெற்றார் கவலை கொள்ளுகின்றனர். பள்ளிக் கூடங்களில் மட்டுமல்லாமல் சமூகத்திலும் அவர்களுக்கு ஒரு பின்தள்ளப்பட்ட நிலை ஏற்பட்டு விடுமோ என்று அஞ்சுகின்றனர். இதனால் தங்களுடைய பிள்ளைகளின் உடல் வளர்ச்சியை அதிகரிக்கச் செய்வதற்காக, மனித வளர்ச்சியை அதிகரிக்கும் ஒரு வகை ஹோமோன்களை ஊசி மூலம் பிள்ளைகளுக்கு ஊட்ட முனைகின்றனர். நல் வாழ்வுக்கான அமெரிக்க தேசிய நிறுவனங்கள் இதனைப் பரீட்சார்த்தமாக நடத்துவதற்குத் திட்டமிட்டன. இதன்படி வளர்ச்சி குறைந்த 80 பிள்ளை களுக்கு ஊசி மருந்து மூலம் ஹோமோன்களை ஊட்டுவதற்கான திட்டம் வகுக்கப்பட்டது.



இந்த நிறுவனங்கள் அமெரிக்க சுகாதாரக் கோட்பாடுகளுக்கு முற்றிலும் பாதகமான முறையில் இத்தகைய பரீட்சார்த்த நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன என்று எதிர்ப்புக் குரல்கள் எழுந்தமையினால் இத்திட்டம் ஓராண்டுக்கு முன்னர் நிறுத்தப்பட்டது. எனினும் இதனை மீண்டும் நடைமுறைப் படுத்துவதற்கு இந்நிறுவனங்கள் ஆயத்தமாகி விட்டமையினால் அமெரிக்காவில் நாடளாவிய நிலையில் வாதப்பிரதிவாதங்கள் தோன்றியுள்ளன. இத்தகைய பரீட்சார்த்தத் திட்டங்களுக்கு எதிராக இரு நிறுவனங்கள் சட்ட நடவடிக்கை எடுத்துள்ளன.

இத்தகைய மருந்துகளைப் பயன் படுத்துவதால் ஏற்படும் பின் விளைவு களைப் பற்றிய விபரங்களை அறியாமல் ஏற்கனவே 10,000 இளைஞர்களுக்கு இம்மருந்து கொடுக்கப்பட்டுள்ளது. இதனால் ஏற்படக்கூடிய பின்விளைவு கள் பற்றி பூரணமான பெறுபேறுகள் கிடைக்காத வரை இம்மருந்துகளைப் பயன்படுத்துவது பேரபாயமாகும் என்று மருத்துவ வல்லுநர்கள் கூறுகின்றனர்.

## தும்மல் என்பது என்ன?

தூசி, பூக்களின் மகரந்தத்தூள், பஞ்சுத்துகள், ஒட்டடை போன்றவை மூக்கின் வழியாகப் புகுந்து ,மூக்கிலுள்ள வழு வழுப்பான மியூக்கஸ் மெம்பிறேன் (Mucous membranes) என்னும் தசைச் சுவர்களில் தங்கி விடுகின்றன. இந்தத் தசைச் சுவர்கள் பலப்பல நரம்பிணைப் புக்களுடன் கூடியவை. அவை மூளையின் அடிப் பகுதியிலுள்ள சுவாச மையத்தோடு இணைக்கப் பட்டிருக்கின்றன. தூசு உள்ளே புகுந்ததும் உடனே மூச்சை உள்ளே இழுக்கும் தசைகளுக்கு கட்டளை போகின்றது. நீண்ட மூச்சு இழுக்கச் சொல்லி உடனே காற்றுப் பாதை மூடப் படுகிறது. நுரையீரலில் அதிக காற்றழுத்தம் ஏற்பட்டாலும், காற்றுப் பாதை சட்டெனத் திறக்க மூக்கினுள் தங்கியிருக்கும் தும்பு, தூசுகள் வேகமாக வெளியேற்றப்படு கின்றன.



இந்தத் தும்மல் ஒரு பாதுகாப்பு அம்சமாகும். தும்மும் போது சுமார் 5,000 நீர்த்திவலைகள் காற்றோடு வெளியேறுகின்றன. தும்மலின் வேகம் மணிக்கு 160 கிலோ மீற்றர். தும்மினால் சுமார் 15 அடி வரை சளித்திவலைகளும், நோய்க்கிருமிகளும் தெறிக்கின்றன. எனவே தும்முவதற்கு முன் (அதற்குப் போதிய அவகாசம் இருக்கும்) ஒரு கைக்குட்டையை வைத்து மூடிக் கொள்வது அவசியம்.

இரு சிறுநீரகங்களோடு இருந்தால், சிறுநீரக் கோளாறு, இரத்த அழுத்தம் போன்ற நோய்கள் வரும். எனவே ஒரு சிறுநீரகத்தோடு இருப்பதே நோய், நொடியற்ற வாழ்வைத்தரும். இப்படிச் சொல்பவர்கள் பிரிட்டிஷ் மருத்துவர்கள்.

## செயற்கை கல்லீரல் கைகொடுக்கிறது?

கல்லீரலில் ஏற்படும் சிக்கலான நோய்களிலிருந்து தங்களைக் காத்துக் கொள்வதற்காக இனிமேல் உறுப்பு மாற்றும் சிகிச்சையை நாட வேண்டிய அவசியமில்லை. இப்பொழுது செயற்கைக் கல்லீரல் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

கல்லீரல் பொதுவாக அதிக வேலைப்பழுவினால் தான் பாதிக்கப்படுகிறது. இதற்கு அவ்வப்போது கொஞ்சம் ஓய்வு கொடுத்தால் மட்டும் போதும். மீண்டும் அது புதுத் தென்புடன் இயங்கத் தொடங்கிவிடும். 80 சதவிகிதமான கல்லீரல் கோளாறுகள் உயிரைக்குடித்து விடுகின்றன. இரத்தத்தைச் சுத்தி செய்யும் பணியினை புதிய-செயற்கைக் கல்லீரல் சில மணி நேரம் ஏற்றுக் கொள்ளும். அந்தக் கொஞ்ச நேர அவகாசத்தில் இயற்கை அவயவம் ஓய்வெடுத்துக் கொள்வதுடன் மீண்டும் பணியைச் செம்மையாகப் புரிய ஆரம்பித்து விடுகிறது.

அமெரிக்கா-டெக்சாஸ் மாநிலத்தில் வாக்கோவிலுள்ள பேய்லர் மருத்துவக் கல்லூரியில் தான் இந்த செயற்கைக் கல்லீரல் உருவாக்கப்பட்டு பரீட்சித்துப்பார்க்கப்பட்டுள்ளது.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## புதுமைத் தொடர்

### அத்தியாயம்—8




"குலாம்ஷாவை கொன்றுவிடு"

பொஸ் சொல்லிவிட்ட உத்தரவால் ரம்யா குழம்பிப் போனாள். திடீரென்று இப்படி ஒரு உத்தரவு வரக்காரணம் என்னவென்று ஊகிக்க முடியாமல் புதிர் போல் உணர்ந்தாள்.

உத்தரவு சொன்னவன் நகர, கதவு சாத்தி, பிஸ்டல் தூக்கி குலாம்ஷாவை நோக்கித் திரும்பினாள் ரம்யா. மறு நொடியே திகைத்துப் போனாள் ரம்யா.

கட்டிலின் மேலே

குலாம்ஷா இல்லை!

'கிரைம் புலி தப்பிவிட்டதா' என்று நினைத்தாள்.

"சே.....இங்கிருந்து எப்படி முடியும்" என்று மறு நொடியே தன் முதல் நினைப்பை துரத்தினாள்.

அந்த நொடியில்....

குலாம்ஷா ரம்யாவின் பின்புறமாய் நெருங்கினார்.

குலாம்ஷாவின் வலது கரம் உயர்ந்து ரம்யாவின் கழுத்தை இறுக்கி வளைக்க-

இடக்கரம் பிரிந்து கத்திபோல் ஆகி ரம்யாவின் பிஸ்டல் தாங்கிய வலது கரத்தின் மணிக்கட்டில் இறங்கியது. கராட்டி உபயத்தில் சச்சிதமான அடி. பிஸ்ரல் எகிறி கீழ் நோக்கி விழ, குலாம்ஷாவின் இடது கரம் அதை லாவகமாய் ஏந்தி உரிமையாக்கிக் கொண்டது.

இப்போது பிஸ்டல் குலாம்ஷாவின் கரத்தில் இருந்து ரம்யாவைப் பார்த்து சிரித்தது. ரம்யாவின் அழகான சங்குக்கழுத்தும் குலாம்ஷாவின் கரத்தில் சிக்கி இருந்தது.

கதவு திறந்திருக்கும் படியாக வந்தவனுடன் பேசியது தவறு. பேசிய அனைத்தும் குலாம்ஷாவின் காதில் விழுந்திருக்கிறது. பேசியதைக் கிரகித்து, கொல்லப்படப் போகிறேன் என்று தெரிந்து, உஷாராகி குலாம்ஷா தயாராகியிருக்க வேண்டும். தாக்குதலுக்கு வாய்ப்பான நிலை எடுத்திருக்க வேண்டும்.

ரம்யா புரிந்து கொண்டாள். எதிர்பாராத தாக்குதலில் நிலைகுலைந்த போதும் ரம்யாவின் உதட்டில் ஒரு புன்னகை வந்து எட்டிப்பார்த்து மறைந்தது.

குலாம்ஷாவுக்கும் ஆச்சரியமாக இருந்தது. ரம்யா தன்னை விடுவித்துக் கொள்ள சிறு முயற்சி கூட செய்யவில்லை.

பணிய வைக்கப்பட்டது பாதி. அவளாக பணிந்தது பாதி.

"பெண்ணே என்னை மன்னித்துக் கொள். குலாம்ஷாவை சுலபமாகக் கொன்றுவிடலாம் என்று நினைத்தீர்கள் பாருங்கள். அது மகாதவறு. பெண்ணே இப்போது நான் சொல்வது போல் செய்."

குலாம்ஷா உறுதி தொனித்த குரலில் வார்த்தைகளை வீசினார். அவள் கழுத்திலிருந்து கரம் விலக்கினார்.

விடுபட்ட ரம்யா கழுத்தை ஒரு கரத்தால் தடவிக் கொண்டு ஷாவைப் பார்த்து புன்னகைத்தாள்.

"மிஸ்டர் ஷா, நீங்கள் இந்த ரம்யாவைப் புரிந்து கொள்ளவில்லை. ரம்யா பெண்தான். ஆனால் பேதையல்ல"

ரம்யா சொல்லிவிட்டு தலையை இருபுறமும் திருப்பி கழுத்துப் பிடிப்பை சரி செய்து கொண்டாள். ரம்யா சொன்னதன் அர்த்தம் புரியாமல் குலாம்ஷாவின் முகத்தில் சந்தேக ரேகைகள் கோலம் காட்டின. அது புரிந்து ரம்யாவே பேசினாள்.

"ஷா நீங்கள் எப்படிப்பட்டவர் என்று எனக்குத் தெரியும். உங்கள் பலம், தந்திரம், சாகசம் எல்லாம் அறிவேன். சோ... உங்களோடு நெருங்கியிருக்கும் போது என் பிஸ்டல் எந்த நேரமும் உங்கள் கரம் வரலாம் என்பதை ஊகிக்காமல் இருந்திருந்தால், இந்த ரம்யாவின் இதுவரைகால அனுபவம் என்னாவது ஷா?"

புன்னகை மாறாமல் பேசினாள். அலட்சியம் தொனித்த குரலில் பேசினாள். குலாம்ஷா குழம்பிப் போனார். மூளையில் மின்னலாய் அந்த யோசனை வரவே பிஸ்டலை பார்வையால் தடவினார். ரம்யா வாய்விட்டுச் சிரித்தாள். சிங்கார அழகியின் சங்கீதச் சிரிப்பு.

"ஷா பிஸ்டலில் மகசீன் இருக்கிறது. ஆனால் மகசீனில் தோட்டாக்கள் காலியாக இருக்கிறது. அந்தத் தோட்டாக்கள் என்னிடம் இருக்கின்றன. என் முன் யோசனை எப்படியிருக்கிறது?"

அவள் சொல்லிக் கொண்டிருக்க பிஸ்டலின் பின்புறமாய் செருகியிருந்த மகசீன் (ரவைக்கூடு) உருவி அதிலே விழிகளைப் போட்ட ஷா ஏமாற்றமாய் உணர்ந்தார். ரம்யா பொய் சொல்லவில்லை. மகசீனின் வயிறு காலியாக இருந்தது.

குலாம்ஷா வியந்தார். வியந்ததை மறைக்காமல் வெளியேயும் சொன்னார்.

"ரம்யா நீ இரகசிய உலகுக்கு கிடைத்த பொக்கிஷம். வித்தைகள் தெரிந்தவள். பாராட்டுகிறேன் பெண்ணே - குலாம்ஷா தன் வாழ்க்கையில் முதல் தடவையாக ஏமாந்துவிட்டான். எனினும் ஒரு அதி புத்திசாலியான எதிரியிடம் தோற்பதில் கவலையில் பாதி போய்விட்டது"

"என்னை நீங்கள் புத்திசாலி என்று சொன்னதற்காக சந்தோசப்படுகிறேன் ஷா. அதேசமயத்தில் என்னை உங்கள் எதிரி என்கிறீர்கள் பாருங்கள். அதனால் கவலையும் அடைகிறேன்"

"ஏன் இவள் எதிரி என்று சொன்னதில் கவலை கொள்ளுகிறாள்? என்ன பொருள் உள்ளே மறைத்து பேசுகிறாள்?"

ஷாவுக்கு சத்தியமாக ஒன்றும் புரியவில்லை.

"எத்தனை ரகமான எதிரிகளை சந்தித்துவிட்டேன். தோல்வியை மட்டும் நோ...... சந்தித்ததில்லை. ஆனால் இவளிடம் தோல்வி மட்டுமா, இவள் நோக்கமே மனதில் பிடிபடாமல் போகிறதே"

ஷா மனதுக்குள் குழப்பத்தை நிரப்பிக் கொண்டு ரம்யாவின் முகத்தை கூர்ந்து கவனித்தார். போலித்தனம் அதில் துளியும் இல்லை.

குலாம்ஷாவின் மனதில் விரிந்த குழப்பம் புரிந்தவளாய் ரம்யா பேசினாள்.

"ஷா உங்களை சாவுக்கு அனுப்புவதில் எனக்கு சம்மதமில்லை. தவிர என் அனுபவம், என் உழைப்பு உதாசீனம் செய்யப்பட்டிருக்கிறது. ரம்யா தன் மூளையை மூலதனமாகப் போட்டு முழுதாக உழைத்தவள். மூளையை மட்டுமா ஷா? இந்த அழகான உடலை சில கழுகுகளுக்கு சுவைக்கக் கொடுத்தும் அதனால் வந்த பலனை இந்தக் கூட்டத்திற்காய் கொடுத்தவள்."

பேசியபோது ரம்யாவின் குரலில் கோபம் தொனித்தது. தொனி உயர்ந்தது.

"ஆனால் என்னிடம் தந்த ஒரு பணியை என்னுடன் ஆலோசிக்காமல் எப்படி முடிவெடுத்தார்கள்? உத்தரவை நிறைவேற்று என்று எவனோ ஒருவனைவிட்டு அவன் திமிராய் பேச.... சே.. என் உழைப்பை புறங்கையால் தள்ளி அவமானம் செய்துவிட்டார்கள் ஷா... நோ.... விடமாட்டாள் ரம்யா. விடப் போவதில்லை. விசுவாசத்திற்கு இதுதான் பரிசு எனில் அதற்கு துரோகமே என் பதில். சொல்லுங்கள் ஷா நீங்கள் தப்பிப் போக விரும்புகிறீர்களா?"

மூச்சிரைக்கப் பேசி வினாதொடுத்து நிறுத்தினாள்.

'இது அடிபட்டபுலி. உள்ளே காயப்பட்டு, பழிதீர்க்க குறிவைத்து கோபம் கொண்ட புலி. எதிரிக்கு எதிரி நண்பன். அதனால் இவளை பயன்படுத்துவதில் தவறு கிடையாது. இவள் நட்பு இத் தருணத்தில் பலம்வாய்ந்த ஆயுதம்'

குலாம்ஷா மனதுக்குள் வியூகம் வகுத்து தயாரானர்.

குலாம்ஷாவின் மனதில் புதிய திட்டம் விரிந்தது. அந்தத் திட்டம் விரிந்த சமயத்தில் அந்தக் குரல் மேலிருந்து கேட்டது.

"சபாஷ் ரம்யா. இப்படித்தான் நடக்குமென்று தெரியும் எங்களுக்கு"

குரல் வந்த திசையில் இருவரும் நிமிர்ந்து பார்க்க மேல் புற ஜன்னலில் அவன் முகம் தெளிவாய்த் தெரிந்தது. இளித்தான். பொஸ்ஸின் உத்தரவை ரம்யாவிடம் வந்து கூறியவன். போவது போல் போக்குக்காட்டி ஜன்னல் புறம் ஏறி வேவு பார்த்திருக்கிறான்.

அவன் கரத்தில் கறுப்பாய்......

அன்றுதான் எண்ணெய் தடவி சுத்தம் செய்யப்பட்ட பிரியமான பொருளாய் பளபளத்தபடி இருந்தது பிஸ்டல். இருவரையும் பசியோடு பார்த்தபடி தன் எஜமானின் உத்தரவிற்காக காத்திருந்தது அந்தப் பிஸ்டல்.

அதே சமயத்தில் அறைக்கதவு உடைக்கப்பட்டது.

படீர் என்ற பெரிய சத்தத்தோடு கதவு பிளக்க, முன்னால் வந்தவன் ஆறடி உயரத்தில் மாமிச மலைபோல் அசைந்து வந்தான். பின்னால் நால்வர். அடியாட்களாக இருக்க வேண்டும். நால்வரும் துப்பாக்கி வைத்திருந்தார்கள். ஏ.கே.47 ரக புத்தம் புதிய துப்பாக்கிகள்.

'மனிதர்களை விட ஆயுதங்கள் அதிகமாகிவிட்டன. அதுதான் குற்றங்கள் கோலோச்சுகின்றன'

குலாம்ஷா நினைத்துக் கொண்டார்.

"பொஸ்ஸின் நம்பிக்கையானவன்"

ரம்யா குலாம்ஷாவின் காதருகே முணுமுணுத்தாள். அவன் பெயர் சொல்ல வாய்திறந்தாள்.

மாமிச மலை அவளை பேச வேண்டாம் என்று இடக்கை உயர்த்தி சைகையால் காட்டியபடியே

"ரம்யா! நானே அறிமுகப்படுத்துகிறேன் கண்ணே. உனக்கு எதற்கு வீண் சிரமம்? ஆ..... மிஸ்டர் கிரைம் கிங் குலாம்ஷா அவர்களே! உங்களைச் சந்திப்பதில் உலக சந்தோசம். நான் நிருபராஜ். பெயரை கேட்டிருப்பீர்கள். இப்போது உருவத்தையும் பார்த்துக் கொள்ளுங்கள். ரம்யா! சுகம் தரவேண்டிய சொர்க்கத்தை நரகத்துக்கு அனுப்ப வைக்கிறாயே நீ. ஏனம்மா சாக நினைத்தாய்? ஏனம்மா எங்களிடம் இல்லாத ஆற்றல் இந்த ஷாவிடம் இருக்கிறதா என்ன? ஓகே...ரம்யா நீ இனி வேண்டாம்."

சொல்லிக் கொண்டே சட்டை விலக்கி பிஸ்டல் வெளியே எடுத்து உயர்த்திப் பிடித்து லோட் பண்ணினான். ரம்யாவின் மார்பு நோக்கி குறிவைத்தான்.

பிஸ்டலின் விசை நோக்கி ஆட்காட்டி விரல் விரைந்து போய் தட்ட முற்பட்ட நொடியில்....

"நிறுத்து நிருபராஜ்"

கம்பீரமாய் ஒரு பெண் குரல் ஒலித்தது.

அழகுச் சிலையாக, காமன் தொடுத்த வலிய கணையாக அவள் உள்ளே வந்துகொண்டிருந்தாள்.

■

மார்பில் காலால் மோதி ஓடியவளும் மதுமிதா. இப்போது மாடியில் நிற்பவளும் மதுமிதா.

டி.ஐ.ஜி டென்சில் தன் அனுபவத்தில் இப்படியொரு அதிர்ச்சியை சந்திக்கவில்லை.

வாட்ச்மேன் பக்கம் திரும்பி பார்க்க, அவனும் வாயடைத்துப் போனவனாய் நட்டகல்போல அசைவற்று நின்றான்.

மறுகணம் தன் பிஸ்டல் எடுத்து மாடிமேல் நின்ற மதுமிதாவை நோக்கி குறிவைத்து,

"டோண்ட் மூவ். அங்கேயே நில்" என்று உத்தரவிட்டு, அருகே நின்ற கொன்ஸ்டபிளிடம்,

"மேலே போய் அவளை கீழே கொண்டுவா. தப்ப முயன்றால் யோசிக்காதே.... சுட்டுவிடு. போ"

உத்தரவு வாங்கி கான்ஸ்டபிள் செல்ல, டி.ஐ.ஜி டென்சில் மதுமிதாவை பிஸ்டலின் குறியில் வைத்திருந்தார்.

மேலே சென்று கான்ஸ்டபிள் மதுமிதாவை தன் துப்பாக்கி முனையில் நடத்தி பத்திரமாகக் கீழே கொண்டு வந்தான்.

நைற்றியில் இருந்த மதுமிதாவின் அழகுகள் சுதந்திரமாக இருந்தன. பயத்தில் குலுங்கி அவள் நடந்துவர அழகுகளும் அசைந்தன. டி.ஐ.ஜி டென்சிலும் கூட அழகுகள் மீது பாய்ந்து செல்ல அடம் பிடிக்கும் விழிகளுக்கு தடை உத்தரவு போட கஷ்டப்பட்டார். சங்கடத்தால் நெளிந்தார்.

டி.ஐ.ஜியை நெருங்கி வந்த மதுமிதா தடாலென நிலத்தில் சரிந்தாள்.

*(இன்னும் வரும்)*

## சிந்தியா பதில்கள்

உயர்விலும் தாழ்விலும் உடன் வருவது எது?

**மின்ஹா இம்டியாஸ்-கொழும்பு-9**

*உடம்பு.*

■

அன்பின் சிந்தியா! நீங்கள் சிறுவயதில் காதலித்ததுண்டா?

**வி.எஸ்.மணியம்-பசறை.**

*மணியம் அண்ணா! எனக்கிப்போ எத்தனை வயதென்று நினைக்கிறீர்களாக்கும் நீங்கள்!*

■

ஹலோ டியர் சிந்தியா! காதல்-காதல்-காதல் இல்லையேல் சாதல் என்னும் அடியைப் பற்றி உங்கள் கருத்தென்ன?

**செல்வன் எச்.முகமட்-உடத்தலவின்னை.**

*செல்லம்மா துணைவியாக கிடைத்த சந்தோசத்தில் பாரதியார் உணர்ச்சி வசப்பட்டு எழுதியதாக்கும்.*

■

அன்பின் சிந்தியா, தினமுரசு பத்திரிகை ஆசிரியர் அவர்கள் அரசியல் சம்பந்தமான உண்மைகளை வெளியிடுகிறாரே, அதனால் எதிர்ப்புகள் ஏற்படுகிறதா?

**தி.திருச்செல்வம்-உடபுசல்லாவ.**

*உண்மையான பத்திரிகையாளர்களுக்கு எதிர்ப்புகள் சகஜம். ஆபத்துக்கள் இயல்பு. மூச்சடக்கும் என்பதற்காக முத்துக்குளிக்காமல் இருப்பவர்கள் பத்திரிகைத் துறைக்கு வராமல் இருக்கலாம்.*

■

டியர் சிந்தியா! நான் 18 வயதில் காதலிக்க நினைக்கின்றேன். இதைப் பற்றி உங்கள் அறிவுரைகள் என்ன?

**ஏ.எச்.எம்.ரிஸ்வான் - மாவனல்லை.**

*18 வயதான பின்னர் கேளும். ஐடியா ஏதாவது அப்போது கைவசம் இருப்பின் செப்பப்படும்.*

■

அன்பின் சிந்தியா! விரோதியை விட துரோகியை நம்பக்கூடாதென்று சொல்கிறார்களே ஏன்?

**எம்.றம்ஸி - காலி.**

*விரோதி வெளிப்படையாக தெரிபவன். விழிப்போடிருக்கலாம். துரோகி உள்ளிருந்தே முதுகில் குத்துகின்றவன். முதுகில் எமக்கு விழியில்லை அல்லவா?*

■

எதிர்காலக் கணவராக வரும் காதலனுக்கு பரிசாக என்ன கொடுக்கலாம்?

**ஆர்.சரோஜாதேவி. பெல்மோரல் எஸ்டேட்.**

*நிறைவான அன்பை.*

■

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்., சுப்பர் ஸ்டார் ரஜனி, நடிகர் திலகம் சிவாஜி இவர்களில் ரசிகர்கள் அதிகம் யாருக்கு?

**ரி.சுரேஸ்.தேசிங்.ஜெய்- மாத்தளை.**

*அதுதான் மக்கள் திலகம் என்று நீங்களே கூறிவிட்டீர்களே. பதில் அதில் உள்ளதல்லவா?*

■

ஒரு பெண்ணை காதலிப்பது எப்படி என்று கூறுங்களேன்?

**எ.ரீபன்ராஜ்- மட்டுநகர்.**

*காதல் என்பது ஒரு தொழில் அல்ல ரீபன்ராஜ் சொல்லித்தரவும் - நீவிர் அதைக் கற்றுக் கொள்ளவும்.*

■

இன்றைய சினிமாவால் எங்களைப் போன்ற இளைஞர்கள் கெட்டுப் போகிறார்கள் என்கிறார்களே?

**எஸ்.மோகன்தாஸ் - வவுனியா.**

*நீங்கள் கெட்டா போய் இருக்கிறீர்கள் மோகன்? மனக் கட்டுப்பாடு இருந்தால் கெட்டுப் போகச் செய்ய எவராலும் - எதனாலும் முடியாது.*

■

திரைப்படக் கலைஞர்கள் எதற்கு மயங்கக் கூடாது?

**எஸ்.எம்.விஸ்வநாதன் - பண்டாரவளை.**

*திடீரென்று உயரும் புகழ் கண்டு.*

■

இன்றைய இலங்கையின் அவசிய அவசரத் தேவை என்ன?

**எம்.எஸ்.எம்.ராசிக் - வரக்காமுறை.**

*தீர்வுகாணப்பட வேண்டிய பிரச்சனைகளுக்கு தீர்வுகாணும் கருத்தொற்றுமை. அதற்கான பொறுப்புணர்வு.*

■

தேனிசைத் தென்றல் தேவா, இசைஞானி இளையராஜா, இவர்களில் யாரது இசை உங்களுக்கு பிடிக்கும்?

**என்.எல்.முஸம்மில் புதிய காத்தான்குடி-06.**

*இருவரும் நன்றாகத்தானே இசைக்கிறார்கள். இருவரையும் ரசிப்போமே. ரகுமானையும் மறக்க வேண்டாம்.*

■

நீர் என்னைக் காதலிப்பதாக கனவு கண்டேன் நிஜமா?

**வி.கணேசலிங்கம் - கலஹா.**

*உமது பெயரை கனவுலிங்கம் என்று மாற்றிக் கொள்ளலாம். பொருத்தமாக இருக்கும் அல்லவோ!*

■

நான் நடிக்க ஆசைப்படுகிறேன். உதவி செய்வீர்களா?

**எம்.சிவகுமார் - குருநாகல்.**

*எதில், வாழ்கையிலா, வண்ணப்படத்திலா?*

■

'கண்ணே மதுமிதா' கதையை எழுதும் ரசிகன் யார்?

**எம்.எல்.எம்.பிராஸ் பாஸி சீனன் கோட்டை.**

*நீங்கள் அறிந்தவர்தான். இப்போதைக்கு சஸ்பென்ஸ்.*

■

இலங்கையின் இனப்பிரச்சனைக்கு தீர்வு காணப்படும் என்பதில் உமக்கு நம்பிக்கை உண்டா?

**து.விஜயராமன் - அன்கும்பர, கண்டி.**

*பொய் சொல்ல விரும்பவில்லை.*

■

தென் ஆபிரிக்கா கிரிக்கட் அணியில் கருப்பினத்தவர்கள் இல்லாமல் இருப்பது இன ஒதுக்கலா?

**ஏ.ஆர்.அப்துல் அலீம்கான் - கல்ஹின்னை.**

*அதே தான். வேறு என்னவாம்?*

■

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: கே.எஸ். பாலா
வயது: 22
முகவரி: குயின்ஸ் டவுன் குரூப் செரன்டிப் எஸ்டேட், கட்டவளை, ஹாலி-எல.
பொழுதுபோக்கு: வானொலி கேட்டல், பத்திரிகைக்கு ஆக்கங்கள் எழுதுதல்.



பெயர்: றஸ்மியா அன்சார்
வயது: 17
முகவரி: 4ம் குறுக்கு வீதி, புதிய காத்தான்குடி-03.
பொழுதுபோக்கு: பத்திரிகை, நாவல், கவிதை, கட்டுரைகள் வாசித்தல்.



பெயர்: கே. யோகராஜா
முகவரி: 152/1, வெலியமுன வீதி, ஹேகித்த, வத்தளை.
பொழுதுபோக்கு: தொலைக்காட்சி பார்த்தல், பத்திரிகை வாசித்தல்.



பெயர்: பசூல் முகமட்
முகவரி: 39, கிறீன் லேன், கொழும்பு-13.
பொழுதுபோக்கு: கிரிக்கெட், கரம் விளையாடுதல், நகைச்சுவைப் புத்தகங்கள் வாசித்தல்.

பெயர்: வே. ராஜன்
முகவரி: 11/பீ 18, செட்டியார் தெரு, கொழும்பு -11
பொழுதுபோக்கு: பத்திரிகை தொடர்பு, கணணி துறையில் ஈடுபாடு.

பெயர்: ஹுஸைன் எஸ். ஹமீத்
வயது: 23
முகவரி: 58, கலதெனிய, மடிகே, உடத்தலவின்ன.
பொழுதுபோக்கு: புத்தகம், பத்திரிகை வாசித்தல, கோழி, பூஞ்செடிகள் வளர்த்தல், பாடல் கேட்டல்.

பெயர்: செல்வி கணேசன் இராஜேஸ்வரி
முகவரி: கோங்கோ கொட்டுவ, குருதெனியா ரோட், தளத்து ஓயா.
பொழுது போக்கு: வானொலி கேட்டல், தொலைக்காட்சி பார்த்தல், செல்லப் பிராணியுடன் விளையாடல், பத்திரிகை, கதைப் புத்தகம் வாசித்தல்.

பெயர்: மொஹமட் நியாஸ்
வயது: 23
முகவரி: 356, கனுல்வெலை, பிபிலை.
பொழுது போக்கு: கிரிக்கெட், பத்திரிகை

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# ஒரு றோஜாவும் சில ரசாயனத் துளிகளும்

மாவனல்லை ரிஸ்கி ஷெரீப்



றோஜாயிதழ் மேல்
பனித்துளியாய்....:

எனக்குள் ஒரு குளுமையை நான் இப்போது உணர்கிறேன்.

அந்தக் குளுமைக்கும் சுகந்தமான சந்தோஷத்துக்கும் காரணம் என்னவென்று ஆராயும் போது 'அதுதான் காதல்' என்று உள்மனசு சொல்கிறது.

அப்படியாக.....

யார்மீது எனக்குக் காதல் என்று நீங்கள் யாராவது அறிவீர்களா?

என்னையும்- என் மன அமைதியையும் குழப்பிய அந்தத் தேவதையை நீங்கள் கண்டிருக்கிறீர்களா?

தேவதை என்று 'அவளைக்' கூறும் போதே என் நாவு இனிக்கிறது. அவள் 'என்னவள்' எனக்கே உரியவள்' என்று எண்ணும்போதே என் நரம்பு நாளம் முழுக்க புதிய இரத்தோட்டம் பாய்கிறது.

இப்போதெல்லாம் நான் காற்றை வெகுவாக நேசிக்கின்றேன். காற்று என் சுவாசத்துக்குப் பயன்படுவதற்காகவுமல்ல! ஓசோன் படைபற்றி நான் ஆராய்ச்சி செய்பவனுமல்ல! என்றாலும் நான்காற்றை நேசிக்கின்றேன். ஏனென்று நீங்கள் கேட்கக்கூடும். சொல்கிறேன்.

காற்றாவது என் காதலுக்குத் தூதுபோகாதா என்ற சின்ன நப்பாசைதான்! ஏனெனில் என் காதலைப் போய்ச் சொல்ல...யாருமேயில்லாத காதல் அனாதை நான்.

அவளைக் கண்டிருக்கிறேன். தப்பு!

அந்த தேவதையைக்கண்டிருக்கிறேன். அவளது இளமையுடன் கூடிய அழகை சிலவினாடிகளுக்குள்ளேயே ஒரு மின்னல் வேகத்துடன் ரசித்து...இப்போது சில நாட்களாக எனக்குள்ளேயே நான் ஊமையாகிப் போயிருக்கிறேன்.

'ஐ லவ் யூ' என்று ஆயிரம் முறை எனக்குள்ளேயே நான் சொல்லிப்பார்த்தேன். ஆனால்....அது அவளுக்குக் கேட்கவேயில்லை. 'காற்று விடு தூது' என்றாலும் அது காற்றுக்கும் கேட்கவில்லை. அப்படிப் பட்ட அவளின் பெயர் என்ன? அஸ்மியாவா, சில்மியாவா, ஷார்மிலாவா, ஊர்மிளாவா என்று கூட எனக்குத் தெரியாது. ஆனால், எப்படியோ அவள் எனக்குள்- என் இதயத்துக்குள் என்னையறியாமலேயே குடிபோயிருக்கிறாள் என்று எனக்குத் தெரியும். இப்போது உங்களுக்கும் தெரிந்திருக்கும்.

அவள் என்னை நேசிப்பதாகச் சொன்னால் - என்னை விரும்பினால்... வானவில்லை எடுத்து வந்து பாய்நெய்து, நிலவையே பறித்து வந்து பூக்களாய்த் தூவி, அதில் நம் முதல் இரவை வைத்துக் கொள்வதாகவும் (மடத்தமனான) ஒரு கற்பனையை மனதுக்குள் வளர்த்திருக்கிறேன். எல்லாமே அவளுக்காக... அந்த அற்புத அழகிக்காக. ஆக எனக்குள்ளேயே நான் 'காதல் பைத்தியமாகிப்' புலம்பிக்கொண்டிருக்கிறேன் பார்த்தீர்களா?

நான்!

எனக்குள் நான் நானாகவேயிருந்தாலும்; உங்களுக்காக என் பெயரை நான் சொல்லியாக வேண்டும். என் பெயர் ஸாஜஹான்! என் பெயருக்குள்ளேயே தாஜ்மஹால் இருந்தாலும் - காதல் இருந்தாலும்; நீங்கள் நினைக்கிறமாதிரி அந்த மன்னனாகிய மும்தாஜின் ஷாஜஹானல்ல. சாதாரண ஷாஜஹான்! சாதாரண குடும்பம்! சாதாரணமான படிப்பு பீ.ஏ! சாதாரணமான உத்தியோகம்! சாதாரணமான சம்பளம், நாலாயிரம் ரூபாய்களை எடுக்கும், சாதாரண அழகுள்ள சாதாரணமான இருபத்தியைந்து வயது இளைஞன்.

சாதாரணமாகவேதான் அன்று அவளைச் சந்தித்தேன்.

அன்று!

"உனக்குப் பெண் பார்க்கப் போகிறோம். அவசரமாகப் புறப்பட்டு வரவும்". என்று நான் வேலைபார்க்கும் பத்திரைகைக் காரியாலயத்துக்கு நாநா 'தந்தி' அடித்திருந்தார். எனக்கு இப்பொழுதே கல்யாணம் முடிக்க விருப்பமில்லை. என்றாலும் நாநாவின் விருப்பத்தை தட்டமுடியாமல், ஆபிஸுக்கு ஒரு வாரம் லீவு எடுத்துக் கொடுத்துவிட்டுப் புறப்பட்டுப் போனேன். ஏனெனில், எனக்கு எல்லாமே நாநாதான். நான் தாய்ப்பாலே குடிக்காமல் புட்டிப்பாலில் வளர்ந்ததாக என் பின்னணியில் ஒரு கண்ணீர்க் கதையுண்டு: நான் பிறக்கும் முன்னமே தந்தையை இழந்து, பிறக்கும் போது தாயையும் இழந்ததாக எனது நாநா சொல்லித்தான் தெரியும். எனக்கு உறவென்று சொல்லிக்கொள்ள இருப்பதே இந்த 'நாநா' மட்டுமே.

சின்னவயதில் ஐஸ் கிரீம் முதல் பேனா-பென்சில், பெருநாளைக்கு உடுப்பு என்று அத்தனையையும் வாங்கித் தந்து என்னை வளர்த்து ஆளாக்கியவர் இந்த நாநாவே. என் உடன்பிறப்பு. ஒரே இரத்தம்! என்னைப் பொறுத்தவரையில் எனக்காகவே தன் வாழ்க்கையை அர்ப்பணித்த தியாகியவர். இப்போது ஊர்ப்பாடசாலையில் உப அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார். திருமணம் முடித்து பனிரெண்டு, பத்துவயதில் மகன், மகள் இருக்கிறார்கள். நாநாவைப் போலவே நல்ல குணநலன்கள் கொண்ட மதினியும், பிள்ளைகளும் இப்படியாக..... என்னையும் இணைத்துக்கொண்ட சந்தோஷமான குடும்பம்.

எமது வீடு மாவனல்லையில் இருந்தது. பாதையோரம் பசுமையான தென்னந் தோட்டத்துக்கு மத்தியிலே...ஒரே கூரையின் கீழ் இரண்டு வீடுகள். இரண்டும் எனக்குச் சொந்தமானவை என்றாலும்; ஒரு வீட்டை நானூறு ரூபாய் மாத வாடகைக்கு விட்டிருந்தோம். ஏறக்குறைய எட்டு வருடங்களாக அன்சார் காக்காவே எமது அடுத்த வீட்டில் வாடகைக்கு இருக்கிறார். கண்டியில் ஏதோவொரு ஹாஜியாரின் வியாபார ஸ்தாபனத்தில் கணக்குப் பிள்ளை உத்தியோகம் பார்க்கும் ஐம்பது வயதுகளைக்கொண்ட நல்ல மனிதர். மனைவி, மகளென ஒரு சின்னக்குடும்பம்! மகள் போனவருடம்தான் கல்யாணம் முடித்து நுவரெலியாவுக்குக் குடி போயிருந்தார். இப்போது அந்த வீட்டில் அன்சார் காக்கா தம்பதியினர் மட்டுமே இருந்தார்கள்.

நான் வீட்டையடையும் போது,

சரியாக நேரம் மாலை ஐந்து மணியிருக்கும். நல்ல மழை. தவிர-வீடும் பூட்டியிருந்தது. மழைக்கு ஒதுங்கி அப்படியே திண்ணையில் சுவரோரமாய் ஒன்றிக்கொண்டேன். அடுத்தவீட்டில் இருந்து அன்சார் காக்காவின் மனைவி பரீதா ராத்தா ஆச்சரியமாக எட்டிப் பார்த்தார். முகம் மலர்ந்தார்.

"ஆ....ஸாஜஹான் தம்பியா? என்ன தம்பி மழையில நனைஞ்சுக்கிட்டு, வாங்க நாநா மதினியெல்லாம் குழந்தைக்கு மருந்தெடுக்க டவுனுக்குப் போயிருக்காங்க. இப்போ வந்துடுவாங்க. அதுவரைக்கும் மழையில வெளியிலயா நிக்கப்போறீங்க....? வாங்க. இதுவுங்க வீடுதானே உள்ளே வாங்க. வாங்க தம்பி....." பரீதா ராத்தா கருணையோடு, பாசத்தோடு அழைக்க... வெளியே ஊசிமழையின் கூர்மையான குளிரைத் தாங்கமுடியாமல், உள்ளே போய் டிராவலிங் பேக்கை மேசைமீது வைத்துவிட்டு, கதிரையில் அமர்ந்து கொண்டேன்.

"கொழும்பிலயிருந்து இப்பவா வர்றீங்க?"

"ஆம் ராத்தா!"

"நல்லா நனைஞ்சுட்டீங்க. தடிமல் கிடிமல் வந்துடப்போகுது. டவல் எடுத்துட்டு வர்றேன். தலையை நல்லா துவட்டிக்கீங்க. அப்படியே சூடாய் தேநீரும் எடுத்து வர்றேன்."

"எதுக்கு சிரமம்? வேண்டாம் ராத்தா ஒண்ணும்" என்று மளுப்பினேன்.

என்றாலும் குளிருக்கு கதகதப்பாக சூடான தேநீரும் முரட்டுத் துணியாலான துவாயும் தேவையாயிருந்தன.

"இதெல்லாம் என்ன சிரமம்!" என்றுவிட்டு, பரீதா ராத்தா உள்ளே போய்விட, அங்கே மேசைமீது இருந்த "உன்னை முத்தமிட்டது தப்பா?" என்ற நாவலையெடுத்து, அமைதியாக மேலோட்டமாக மேய ஆரம்பித்தேன். தெப்பமாக நனைந்து போயிருந்த சேர்ட் அப்படியே என் மேலோடு ஒட்டிக்கொண்டிருந்தது.

சில வினாடிகளின் நழுவலின் பின்-

"இந்தாங்க!"

தேன் சுரக்கும் அந்தக் குரலுக்கு, திடுமென நிமிர்ந்தேன்.

கையில் சிவப்பு வர்ணத்துவாயுடன், குங்குமப் பூக்கலர் சல்வாரில், புன்னகையை பொன்னகையாய் அணிந்து கொண்டு அவள் நின்றிருந்தாள். இருபது வயதுக்குள் செழுமையாய், மெழுகு பொம்மையாய் வளர்ந்திருந்த என் இதய சாம்ராஜ்ய இளவரசி. என் தேவதை!

என் வாழ்க்கையில் நான் சந்தோஷமான வினாடிகளை அனுபவித்தது என்றால்... அவை இந்த நிமிடங்கள்தான் என்று அடித்துக்கூறுவேன்.

எங்கேயோ பலமான இடியொன்று இடித்து ஓய்ந்து போக ,என்னையறியாமலேயே என்னிதயம் எங்கேயோ நழுவுவதை உணர்ந்தேன். அந்தப் பளிச் பளிச் வினாடிகளில் நான் அவளையே பார்த்துக்கொண்டிருக்க...

சுண்டிவிட்டால் குருதிபாயும் அவள் பட்டுக்கன்னத்தில், எங்கிருந்தோ வந்த நாணமும், வெட்கமும் ஒருங்கே குடிகொள்ள...

"இந்தாங்க!"

துவாயை என் மடிமீது போட்டுவிட்டு, அவளோ துள்ளியோடும் புள்ளிமானாய் உள்ளே ஓடிமறைய, திடீரென என்னிதயத்தை ஏதோவொன்று அடைப்பதை உணர்ந்தேன்.

"யார் வீட்டு ரோஜா?"

"யாரிவள்,"

"யாரிந்த தேவதை?"

எனக்குள் நானே பலவாறு கேட்டுக் கொண்டேன். மனதுக்குள் குழம்பிப் போனேன். காண்பது கனவா? நனவா? என்கிற பிரமையில் அப்படியே... "உன்னை முத்தமிட்டது தப்பா?" நாவலை நழுவ விட்டேன். இனம்புரியாதவொரு சுகம் என்னிதயம் முழுக்கப் பரவுவதை என்னால் உணரமுடிந்தது. நான் எங்கேயோ வெறித்துக் கொண்டிருக்க...

"என்ன தம்பி பலமான யோசனை?" என்றவாறு பரீதா ராத்தா தேநீரோடு வர, முடிந்தும் முடியாமலும் சுதாகரித்துக் கொண்டேன்.

தேநீரை வாங்கி....அது சுடுவதையும் உணராமல் மடக் மடக்கென்று ஒரே மூச்சாகக் குடித்துவிட்டு கோப்பையை வைத்தேன். பரீதா ராத்தா என்னை அதிசயமாகப் பார்ப்பதைக் கூட் நான் கவனிக்கவில்லை.

பரீதா ராத்தா சம்பிரதாயத்துக்காக ஏதேதோ உரையாடினார்.

ஆனால்- நானோ ஒரு நிலையில் இல்லை.

எதையும் உணரும் நிலையிலும் இல்லை.

என் நினைவு முழுக்க அந்தப் பெயர் தெரியாத அழகியே வியாபித்திருந்தாள். மனம் முழுக்க அவள் விட்டு விட்டுப் போன வாசனை பரவிப்போயிருந்தது. அவள் மீண்டும் மீண்டும் வெளியே வரமாட்டாளா என்று என் உள்மனம் ஏங்கத் துவங்கியது.

மனதில் அவளை அடக்கிக்கொண்டு பரீதா ராத்தாவோடு என்னென்னமோவெல்லாம் கதைத்தேன். "யார் இந்தப் பொண்ணு-" என்று பரீதா ராத்தாவிடம் கேட்கத்தூண்டிய நாவை கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டேன்.

சரியாக ஆறுமணியாகும்போது, மழை விட்டு... எனது நாநா குடும்பம் வந்துவிட, அங்கேயிருந்து விடைபெற்றேன். ஆனால்... அதன்பிறகு அன்று அவளைக் காணவேயில்லை.

இரவு வந்தது!

வயிறு பசியெடுத்தும் சாப்பிடத் தோன்றாமல் அப்படியே படுக்கையில் சரிந்தேன். ஆனால் நித்திரை வரவில்லை. மாறாக...என் கண்களுக்குள் அவள்தான் வந்தாள். அவஸ்தையூட்டினாள். கலர் கலராய்ச் சிரித்தாள்.

அவளது, கருநாகங்களாகப் பின்னப் பட்ட இரட்டைச் சடைக் கூந்தலும், ஆப்பிள்க் கன்னமும், போதை தரும் எச்சில் உதடுகளும், மேலுதட்டுக்கு மேலிருந்த கரிய நிற சிறிய மச்சமும், சங்குக் கழுத்தும், கழுத்துக்குக் கீழேயிருந்த பெண்மை அழகுகளும் என்னை சித்திர வதை செய்தன.

விடியும் வரை அவளையே நினைத்திருந்து... விடியும்போது அவளையே கனவில் நிறுத்தித் தூங்கிப்போய்.... காலையில் லேட்டாய் எழுந்து, மதியம் பிந்தி நாநா, மதினியோடு அயலூரில் ஒரு வீட்டுக்குப் பெண் பார்க்கப்போனேன்.

ஆனால், எனக்கு எதுவுமே பிடிக்கவில்லை.

பெண்ணும் பிடிக்கவில்லை.

ஏனெனில்-

என் உள்ளம் முழுக்க என் தேவதையே வியாபித்திருந்தாள். அதை வெளியே சொல்லவும் முடியாமல்,மெல்லவும் முடியாமல் திரும்பி வந்து...."பெண் பிடிக்கவில்லை" என்று நாநாவிடமும் மதினியிடமும் சொன்னேன். "எனக்கு என் தேவதையைத் தவிர, யாரையுமே பிடிக்காது" என்று மனதுக்குள் மவுனமாக சொல்லிக்கொண்டேன்.

இரண்டு நாட்கள் மெல்லமாய் நகர்ந்தபோது கூட என்னால் மீண்டும் அவளைப் பார்க்க முடியவில்லை. மனதுக்குள் பலமாய் நொந்துபோனேன். லீவு முடிந்து மீண்டும் வேலைக்குத் திரும்பும் வரைக்கும் அவளைப் பார்க்கக் கிடைக்காதா...? என்று நினைக்கும் போது, அந்த நினைப்பையே என்னால் ஜீரணிக்க முடியாதிருந்தது.

அவளைப் பற்றி நாநாவிடமோ, மதினியிடமோ கேட்கக்கூடிய தைரியமும் எனக்கு இல்லை. விசாரிக்கவும் பயமாக இருந்தது. என்றாலும்... காலையில் எழுந்ததில் இருந்து மாலை-இரவு நித்திரைக்குப் போகும் வரைக்கும் எனக்கு அவளைப் பற்றிய ஒரே எண்ணம்தான். இரவு கனவிலும் அவளே மவுனமாய் வந்துபோனாள். நானும் மவுனமாகவே இருந்து கொண்டிருக்கிறேன். இப்படியாக....

மவுனமாகவே இன்னும் மூன்று நாட்கள் மடிந்து போக-

நாளை மறுநாள் நான் மீண்டும் வேலைக்குப் போக வேண்டியிருக்கிறது. ஆனாலும் என்னுடன் சேர்ந்து-

என் வாழ்க்கையே தொலைந்து போனாலும், நான் அவளைப் பார்க்காமல், என் அன்பையும், காதலையும், ஆசையையும் வெளியிடாமல் போகவுமாட்டேன் என்று மனதுக்குள் திடசங்கற்பம் பூண்டேன். என் வாழ்க்கையே அவள் என்றாகிவிட்டாள்.

அடியேய்....
என் இதயக்குளத்தைக்
கலக்கிவிட்டு
எங்கேயோ....
கரையேறிக் கொண்டிருக்கிறாயே
நியாயமா?"

என்று கவித்துவமாகக் கத்தவேண்டும் போலிருக்கிறது. என் டயறியையெடுத்து என் தேவதையைப் பற்றி நான்கு பக்கமளவு புதுக்கவிதை எழுதினேன். என் கிளியோபாட்ராவை நினைத்துக்கொண்டே, அவளைப் பற்றிய எண்ணங்களிலேயே சந்தோஷமாகவோ, துக்கமாகவோ எப்படியோ நிறைய சிகரட் புகைத்தேன். சிகரட் புகையை வளையம் வளையமாக விடும்போது கூட, அந்தப் புகை வளையத்துக்குள்ளும் அவளேதான் வந்துபோனாள். அவள் நினைப்பிலேயே இப்போதெல்லாம் காலையில் எழுந்தவுடனேயே வழவழ வென்று ஷேவ் செய்கிறேன். கண்ணாடியில் அடிக்கொருதரம் பார்த்து மீசையையும், தலைமுடியையும் சரி செய்கிறேன். அழகான உடையணிந்து கவர்ச்சியாக இருக்க முயல்கிறேன். இப்படியாக ஒரு ஊமைக் காதல் என்னைப் பாடாய்ப் படுத்திக்கொண்டிருந்தது! படுத்திக் கொண்டிருக்கிறது.

"காதல் வயப்பட்டவளுக்காகக் காத்திருப்பது கொடூரமான தண்டனை!" என்பதையுணர்ந்தும் அவளுக்காகவே காத்திருக்கிறேன். ஆக - இப்போதாவது, இதைப்படிக்கும் போதாவது உங்களுக்கு என் 'காதல்' வேதனை புரியும் என்று நினைக்கிறேன்.

"அந்தப் பெயர் தெரியாத என் தேவதையை நான் மீண்டும் பார்க்க மாட்டேனா? அவளுடன் பேசமாட்டேனா?"

எனக்குள்ளேயே என்னைப் புலம்ப வைத்துவிட்டு அல்லவா அவள் போயிருக்கிறாள். என் விழிகளுக்குப்படாமல் மறைந்திருக்கிறாள். நான் என்ன பாவம் செய்தேன்?

இறைவா! ஏன் எனக்கு இப்படியொரு தண்டனை?

இன்றைய இரவும் ஏமாற்றமாக, அவளைப் பற்றிப் புலம்பிக்கொண்டே, நிம்மதியில்லாமல் உறங்கப்போகிறேன். முன்னைய சில இரவுகளைப் போலவே இந்தயிரவுப் படுக்கையும் என்னை முள்ளாய்க் குத்துகிறது.

விடிந்தது.

"இன்றாவது அவளைச் சந்திக்க மாட்டோமா," என்று படுக்கையிலேயே பிரார்த்தித்துக் கொண்டு எழுந்தேன். என் பிரார்த்தனைக்கும் பலன் இருக்குமென்று அப்போது நான் சத்தியமாக நினைக்கவில்லை. பலன் இருந்தது. அதுவும் அன்றைய தினமே......

நான் சிகரட் புகைப்பதற்காக கொல்லைப்புறமாக தோட்டப்பக்கம் போயிருந்தேன். நாநாவும், பிள்ளைகளும் பாடசாலை போயிருந்தார்கள். வீட்டில் மதினி மட்டுமே இருந்தாலும் அவர் முன்னால் சிகரட் புகைக்கமாட்டேன். அப்படியொரு மரியாதை! ஏனெனில் மதினியை நான் என் தாயாக எண்ணிக் கொண்டிருக்கிறேன். தாயையே கண்டிராத நான்......தாய்ப்பாசத்தையும் அன்பையும் உணர்ந்தது என் மதினியிடம்தான்.

தோட்டத்தில் கிணற்றடிக் கல்லொன்றில்அமர்ந்து, சிகரட்டை ஆழமாக இழுத்து புகையை ஈரல்வரை உறிஞ்சி வெளியேற்றிக் கொண்டிருந்த போதுதான்; என் பின்னால் 'சர சரவென' ஒலிகேட்கத் திரும்பிப் பார்த்தேன். மனதுக்குள் உற்சாகமாய்க் கத்தினேன். என் பின்னால்- வெட்கமாக, கையில் வாளியோடும் குடத்தோடும் அவள் நின்று கொண்டிருந்தாள், என் சுவர்க்கம்! என் ஆத்மா! என்இனிய தேவதை!

"தண்ணி எடுக்கணும்!" என்றாள்.

அதே... அதே தேன்சுரக்கும் மதுரக் குரலில்......

என்னையறியாமலேயே மெல்லமாய் வழிவிட்டு எழுந்து நின்றேன். என் மனதுக்குள் ஏதோவொரு பறவைக்கூட்டம் 'படக்படக்'கென்று சிறகடிக்கும் சந்தோஷத்தையும், அச்சத்தையும் ஒருங்கே உணர்ந்தேன்.

அவள் வந்து தண்ணீர் அள்ள ஆரம்பித்தாள்.

நான் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு... கேட்டேன்.

மனதுக்குள் இருக்கும் ஆயிரம் ஆசைகளையும் வெளியிட வேண்டும் என்று மனம் படபடப்புடன் ஊமையாய் அடம் பிடித்தாலும்...சிரமப்பட்டு அடக்கிக் கொண்டேன். மெதுவாய்க் கேட்டேன்.

"நீங்க ஊருக்குப் புதுசா?"

அவள் சட்டெனத் திரும்பினாள். கன்னத்தில் குழிவிழ மெல்லமாய், அழகாய், ஆரோக்கியமாய்ச் சிரித்தாள். நூறு வாட் பல்ப் பளிச்சென எரிந்த பிரசாசம்...

"ம்ஹூம்" என்றாள்.

"அப்போ நீங்க எந்த ஊரு?" கேட்டேன்.

"நாவலப்பிட்டிக்குப் பக்கத்துல..."

கள்ளங்கபடமில்லாமல் அவள் பேசுவது எனக்குப் பிடித்திருந்தது. என் வாழ்க்கை பூராவும் அவளுடன் பேசிக் கொண்டே இருக்க வேண்டும் என்றும் ஆசையெடுத்தது.

"நீங்க அன்சார் காகக்காவுக்கு சொந்தமா?"

என் குரலில் ஒட்டியிருந்த பிசிர்த் தன்மையைப் பார்த்து... அவள் மேலும் சிரித்தாள். அந்த சிரிப்பிலேயே நான்

(எதிரே)

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## சிறு கதை

# மறக்க முடியவில்லை!

- மூதில் வண்ணன் -




அந்த வீடுகள் இரண்டும் பக்கத்துப் பக்கத்து வளவில் அமைந்து இருந்தன. நெருங்கிய உறவினர்கள் என்பதால் வீடுகளைப் பிரிக்கும் நடுவேலி பிரிந்து கிடந்த போதும் அவர்கள் எவரும் அதைக் கவனிக்கவே இல்லை. சொந்தங்கள் தானே! எப்போதும் வீட்டுக்கு வீடு போக்குவரத்துக்கு அந்த வழியையே அவர்கள் பாவிப்பது வழக்கம்.

ஒரு வீட்டில் என்ன செய்தாலும் சமைத்தாலும் அடுத்த வீட்டுக்குப் பரிமாறப்பட்ட பின்னே தாங்கள் சாப்பிடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தன இருவீடுகளும். ஆகவே அந்த வேலி இல்லாமல் இருப்பது அவர்களுக்கு வசதியாகவே இருந்தது.

முன் வீட்டில் தான் கணேஷ் இருந்தான். அவன் ஏற்கனவே தகப்பனை இழந்து விட்டவன். கஷ்டப்பட்டுப் படித்துக் கொண்டிருந்தான். அவனது திறமையைக் கண்டு தாய் பலவித தொழிலும் செய்து அவனைப் படிப்பித்துக் கொண்டிருந்தாள். இத்தனைக்கும் அவர்கள் நன்றாக வாழ்ந்த குடும்பம்தான். திடீரென தந்தை இறந்ததால் அந்தக் குடும்பம் தளம்ப வேண்டி ஏற்பட்டது. அவர்கள் அறியாமல் அவர் வைத்து இருந்த கடன் வேறு கஷ்டத்தைத் தந்தது. காணியை விற்று கடனைக் கொடுத்து ஒரு பெண்ணுக்கும் கல்யாணம் முடித்தாகிவிட்டது. இன்னுமொரு பெண்ணும் கணேசும் படித்துக் கொண்டிருந்தனர்.

பக்கத்து வீட்டில் இருந்த மாமாவும் அவனது படிப்புக்கு அவ்வப்போது தேவையான உதவிகளைச் செய்து கொண்டிருந்தார். அவர் ஒரு தலைமை ஆசிரியர். மாணவர்களின் திறமையை அறிந்து வளர்ப்பவர். மருமகன் கணேசும் கெட்டிக்காரன் என்றதும், "ஏ.எல் தொடர்ந்து படி என்னாலான உதவியைச் செய்கிறேன்" என்று கூறிவிட்டார்.

அவருக்கு இரண்டு பெண்களும் இரண்டு ஆண்களும் இருந்தனர். மூத்தவள் பெண். நடுவில் இரண்டும் ஆண்கள். கடைசியில் பெண்ணுமாகப் பிறந்து இருந்தனர்.

கணேஷ் ஏ.எல். எடுத்து விட்டு வீட்டில் இருந்தான். ஓ.எல் படித்துக் கொண்டிருந்த மாமாவின் மூத்த மகள் லதா தினமும் தனது பாடங்களைக் கேட்டுப் படிக்க கணேசிடம் வந்து போவாள்.

கணேஷ் ஏ.எல்லில் சித்தியடைவான் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். அதில் சித்தியடைந்து விட்டால் மகாபொல 'ஸ்கொலர்ஷிப்' பெற்று பல்கலைக்கழகப் படிப்பைத் தொடரலாம் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

மாமாவிடம் அவன் எந்த உதவியும் கேட்டுச் செல்ல மாட்டான். அவனது தங்கை மாமா வீட்டுக்குச் செல்லும் போது அவரே விசாரித்து அறிவார். அல்லது லதா கணேசிடம் கேட்டு வந்து சொல்லிக் காசையும் வாங்கிக் கொண்டு கொடுப்பாள். கடைசித் தங்கை சிறுமி சுதா. அவளின் வாயை இரண்டு வீட்டிலும் உள்ளவர்கள் கிளறுவது வழக்கம். அவள் எப்போதும் "நான் கணேசத்தானைத்தான் கல்யாணம் முடிப்பன்" என்று தான் கூறுவாள். இதைக் கேட்பதற்காகவே அடிக்கடி அவர்கள் சீண்டுவது வழக்கம்.

ஆனால் லதா வயசுக்கு வந்தவள். கணேசத்தானிடம் நெருங்கிப் பழகுபவள். பாடம் கேட்டுப் படிப்பவள். வாய் திறந்து இது பற்றி எதுவுமே பேசமாட்டாள். அனால் அவளது பேச்சும் செயலும் சிரிப்பும் அவனது மனதில் ஒரு கிளர்ச்சியை ஏற்படுத்தவே செய்தன. அதற்குத்தான் என்ன தடை? அவள்தான் முறைப் பெண்ணாயிற்றே!

கணேசுக்கு மனதிலே சபலம் ஏற்பட்டாலும் அதை அவனும் வாய் திறந்து பேசியதே இல்லை. எங்கே தான் ஏதாவது பேசப்போய் அவள் அதைத் தவறாக விளங்கிக் கொண்டு அல்லது அதை வெறுத்து எங்கே இங்கு வராமல் நின்று விடுவாளோ என்று பயந்து போய் எதுவுமே பேசாமல் இருந்தான். அவள் வருவதும் பாடம் கேட்பதும் படிப்பதும் செல்வதும் வழக்கமாக இருந்தன.

அன்று மாலை கணேசின் தங்கச்சி வந்து சொன்னாள் "அண்ணா இன்று லதா மச்சாளுக்குப் பிறந்த நாள். இன்று காலையில நானும் அவவும் கோயிலுக்குப் போய் வந்த நாங்க. இண்டைக்குப் படிக்க வரமாட்டா என்று நினைக்கிறேன்" என்று.

அவள் வரமாட்டாள் என்பது அவனுக்குள் ஒரு தவிப்பை ஏற்படுத்தியது. அதைவிட அவள் வந்தால் அவளுக்குப் பரிசாக என்னத்தைக் கொடுப்பது என்பது தவிப்புக்கு ஒருகாரணமாக இருந்தது. மதியமே தாயின் பக்கத்தில் அமர்ந்து விஷயத்தைச் சொல்லி காசு வாங்கிச் சென்று ஒரு சொக்லேற் பெட்டி வாங்கி வைத்துக் கொண்டான்.

அவள் எப்படியும் தன்னைப் பார்க்க வருவாள் என்ற நம்பிக்கை இருந்தது. அவனது நம்பிக்கை வீண் போகவில்லை. புதுக் கவுணை அணிந்து கொண்டு பிறந்த நாளுக்காக வீட்டில் செய்த பலகாரங்களையும் எடுத்துக் கொண்டு சுதாவுடன் வந்திருந்தாள் லதா.

கண்களும் கண்களும் கவ்விக் கொண்டன. வீட்டில் தேனீர் கொடுத்தார்கள். கணேஷ் சொக்லேற் பெட்டியைப் பரிசாகக் கொடுத்தான். அவனுக்குத் தெரியுமா இதுவே பெரிய விவகாரமாகப் போகும் என்று! எத்தனையோ முறை அவளுக்கு ரொபி கொடுத்து இருக்கிறான். அவள் வாங்கிச் சாப்பிட்டிருக்கிறாள். அது போல் தான் இதையும் எண்ணினான்.

வீட்டுக்குச் சென்றதும் சுதா மகிழ்ச்சியில் ஆரவாரம் செய்து கொண்டு சொக்லேற் பெட்டியைப் பிரித்தாள். 'என்ன சுதா சத்தம்?' என்றவாறு வந்தார் அப்பா. அதனிடையில் பெட்டியைப் பரித்து மற்றவர்களுக்குக் கொடுத்துக் கொண்டிருந்தாள் சுதா.

"அப்பா கணேசத்தான் அக்காவுக்குப் பிறந்த நாளுக்குப் பரிசாகக் கொடுத்த சொக்லேற்" என்று அவருக்கும் நீட்டினாள்.

அவரது மனதில் என்னவோ பற்றிக் கொண்டது. கையாலே தட்டி விட்டவர் "இதை யாரிடி உங்கள வாங்கி வரச் சொன்னது? கொண்டு போய் திருப்பிக் கொடுங்க. உங்களை என்ன செய்யிறதெண்டு தெரியல்ல....."

"பிரிச்சுச் சாப்பிட்டு விட்டார்கள் எப்படித் திருப்பிக் கொடுக்கிறது? பேசாமல் சும்மா இருங்க" என்றாள் மனைவி.

"பேசாமல் சும்மா இருக்கிறதா? உனக்கு ரெண்டு தந்தால் தான் சரி"

"என்ன நீங்க சத்தம் போடுறது. அவங்களுக்குக் கேட்கப் போகிறது..." இது மனைவி.

"கேட்கட்டும் என்று தானே சொல்லுறன். நாளைக்கு வேற வாங்கித் தாறன் கொண்டு போய் கொடுத்திட வேணும். இனி லதா அந்தப் பக்கம் போறதையும் விட்டிட வேணும். முளைச்சு நாலு இல விடல்ல அதுக்குள்ள பெரிய எண்ணங்கள் வந்திடும். உண்ட மருமகன் என்ன உழைச்சுக் கொட்டுறார். பரிசு வாங்கிக் கொடுக்க? வீட்டில உட்கார்ந்து சாப்பிடக்குள்ள கொழுப்பு வைக்காம என்ன செய்யும். இந்த எண்ணம் எல்லாம் சரிவராது என்று சொல்லிவை. எனக்குத் தெரியும் எண்ட மகளுக்கு எப்படிச் செய்யிறது எண்டு. சின்னஞ் சிறுசுகள் விகற்பமில்லாமல் பழகுதுகள் என்று தான் விட்டுத்து இருந்தநான். இப்ப பார்க்கத்தான் விஷயம் விளங்குது. அவன ஒழுங்கா இருக்கச் சொல....."

அவர் சத்தம் போட்டுத்தான் பேசிக் கொண்டிருந்தார். வீட்டிலிருந்தே அவர்கள் எல்லோரும் கேட்டுக் கொண்டிருந்தனர்.

லதா அழுது கொண்டிருந்தாள். சுதா சொக்கலேற்றைத் தின்ன முடியவில்லையே என்று தடுமாறிக் கொண்டிருந்தாள். 'என்ன இந்துப்பாவுக்கு என்ன வந்தது?' என்று எண்ணினர் பையன்கள்.

கணேசுக்கு தெட்டத் தெளிவாக விளங்கியது. மாமாவின் மனநிலை புரிந்தது. இன்னும் முளைவிட வில்லையே. இதற்குள்ளாகவா?

அடுத்த நாள் காலை பத்து மணியிருக்கும். சுதா ஒரு சொக்லேற் பெட்டியைக் கொடுத்து விட்டுச் சென்றாள். இருவர் நின்று வேலியை அடைத்துக் கொண்டிருந்தனர். மாமி கெஞ்சியதில் அதில் ஒரு சிறு 'கடப்பு' இருந்தது. ஏதும் அவசியம்-அவசரம் என்றால் சொல்லலாம்- என்பது போல.

மாதங்கள் சில உருண்டோடின.

கணேஷ் நாலு பாடங்களில் சித்தியடைந்திருந்தாலும் பல்கலைக்கழகத்துக்கு எடுபட வில்லை. புள்ளிகள் குறைவாகவே எடுத்து இருந்தான். இதற்கும் மாமா ஏசினார்.

"எனக்குத் தெரியும் இந்த எண்ணம் வந்தா எப்படி படிப்பு வரும்? இனிக் குட்டிச் சுவராகப் போறதுதான். கெட்டிக்காரன் படிக்கட்டும் என்றுதான் நானும் உதவினேன். இப்படிக் கெட்டுப் போவான் என்று யார் கண்டது?"

"என்ன கெட்டுப் போனதைக் கண்டார்," என்று மெதுவாகக் குமுறினான் கணேஷ்.

'அவர் பெரியவர் பேசுகிறார் நீ பேசாமல் இரு' என்று அடக்கினாள் தாய்.

லதாவைக் கண்டே பல மாதங்களாகி விட்டன.

அன்று மாப்பிள்ளை கேட்டுப் போகும் கொழுக்கட்டைப் பெட்டியுடன் வீட்டார் எல்லாரும் சென்றனர். கணேசின் ஒன்றுவிட்ட அண்ணன் ஒருவன் டாக்டராக இருக்கிறான். அவனை லதாவுக்குக் கேட்டுச் சொல்கிறார்கள் என்ற செய்தி சற்று நேரத்தில் லதா மூலமாகவே தெரிய வந்தது.

"அத்தான் என்னை மன்னிச்சிடுங்க. எனக்கு ஒண்டும் தெரியாது" என்று கூறிவிட்டு ஓடிவிட்டாள் லதா.

சிரித்தான் கணேஷ் -அலட்சியமா? விரக்தியா?

கணேசுக்கு வங்கியில் வேலை கிடைத்து வெளியூர் சென்றுவிட்டான்.

இங்கு லதாவின் கல்யாண விடயம் சீதனப் பிரச்சினையில் இழுபறிப் பட்டுக் கொண்டிருந்தது. புது வீடு கட்டித் தர வேண்டும் என்றும் கார் வாங்கித் தர வேண்டும் என்றும் மாப்பிள்ளை வீட்டார் கேட்டுக் கொண்டிருந்தனர். வீடுகட்டித்தரச் சம்மதித்து வேலையும் தொடங்கிவிட்டார்கள். இன்னும் ஆறு மாதத்தில் பென்சன் கிடைக்க இருக்கிறது. கிடைக்கும் தொகைப் பணத்தை எடுத்து வீட்டை முடித்து கல்யாணத்தையும் முடித்து விடலாம் என்று திட்டம் போட்டு வேலைகள் நடந்து கொண்டிருந்தன.

கணேஷ் வேலை பெற்றுச் சென்றவன் ஆறு மாதத்தின் பின்னர்தான் ஊருக்கு வந்தான். அம்மா, தங்கை இருக்கிறார்களே!

அவனையும் தேடிப்பல சம்பந்தங்கள் வந்தன. தங்கைக்கு முடித்த பின்னரே தன்னைப் பற்றிச் சிந்திப்பதாகச் சொன்னான். அல்லது மாற்றுச் சம்பந்தம் வந்தால் கவனிக்கலாம் என்று கூறிவிட்டுச் சென்று விட்டான். விடுமுறை முடிந்து வேலைக்குச் சென்றசில நாட்களில் வியப்பூட்டும் கடிதம் படங்களுடன் வந்திருந்தது. மாப்பிள்ளையும் பெண்ணும் படங்களில் இருந்தனர். மாற்றுச் சம்பந்தம் பேசி வந்ததை அம்மா விரும்பி ஏற்று நல்ல இடம் என்று கூறி இருந்ததை தங்கை கடிதத்தில் எழுதி இருந்தாள். அவள் எழுதியிருந்ததைப் பார்க்க அவளுக்கும் இதில் சம்மதம் என்று புரிந்தது.

தனது சம்மதத்தைத் தெரிவித்துக் கடிதம் எழுதிய கணேஷ் அடுத்த மாதம் வந்து ஏற்பாடுகளைப் பூர்த்தி செய்வதாகவும் எழுதியிருந்தான். வாழ்க்கையில் ஏதாவது ஒரு இலட்சியம் வேண்டும். தனக்காவது வாழ வேண்டும் அல்லது பிறர்க்காவது வாழ வேண்டும்.

அந்தத் தந்தி கையில் கிடைத்ததும் அதிர்ந்து போனான் கணேஷ். என்ன செய்வது என்று புரியவில்லை. உடனே புறப்பட்டுவிட்டான். விடியமுதல் வீட்டுக்குச் சென்று விடலாம்.

'மாமா இறந்து விட்டார் உடனே வரவும்' என்று கண்டிருந்தது அந்த வாசகம். என்ன நடந்தது எப்படி ஏற்பட்டது என்று எதுவுமே புரியவில்லை அவனுக்கு. வீட்டுக்கு வந்ததும் வீட்டில் யாரும் இல்லை எல்லோரும் மாமா வீட்டிலே இருந்தனர். இவன் வந்ததை அறிந்து வந்தனர்.

'என்ன நடந்தது?' என்று கேட்டான் கணேஷ்.

'அன்று காலை பாடசாலைக்குப் புறப்பட்டுக்கொண்டிருக்கும் போது ஒருவர் வந்து தனது டாக்டர் மாப்பிள்ளை இன்னுமொரு டாக்டரைப் பதிவுத் திருமணம் செய்து விட்டதாகக் கூறினாராம். அதைக் கேட்டுவிட்டுப் பாடசாலைக்குச் சென்றவர்தான். சென்று கதிரையில் இருந்தவர் மீண்டும் எழும்ப வில்லையாம். 'ஹாட் அட்டாக்காம்' மீண்டும் பிணமாகத்தான் வீட்டுக்கு வந்து சேர்ந்தார்' என்றார்கள்.

உயிர் மூச்சு எங்கே - எப்போது நிற்கும் என்று அறியாமல் மாமா துள்ளியதை எண்ணி வருந்தினான் கணேஷ். சாவீட்டுக்குச் சென்றதும் லதாவும் சுதாவும் மாமியும் அவனைச் சுற்றி நின்று அழுதனர்.

'அப்பாவைக் கொடுத்து விட்டோம் அத்தான் நாங்களும் இனி அநாதைகள்' என்று அழுதாள் லதா.

சவ அடக்கம் நடந்தேறியது. இரண்டு நாள் லீவு போட்டு வந்திருந்து தனது கடமையைச் செய்தான். அடுத்து வந்த சனி ஞாயிறு வீட்டிலே நின்றிருந்தான். அப்போது அவனதும் தங்கையினதும் ஏற்பாடுகள் பூர்த்தியாகின. எதுக்கும் மாமா இறந்த படியால் ஒரு ஆறுமாதம் முடியட்டும் என்று கூறினான்.

ஆறு மாதம் என்று ஆறு வருடங்கள் ஓடி விட்டன.

கணேசுக்கும் தங்கைக்கும் திருமணம் முடிந்து விட்டது. கணேஷ் இப்போது இரு குழந்தைகளுக்கு தந்தை.

அந்த வீடு அப்படியே கட்டியபடி முடியாமல் கிடந்தது. அவளும் கல்யாணம் முடியாமல் இருந்தாள். அடுத்தவளும் ஆயத்தமாகி இருந்தாள். மூத்தவளே முடியாத போது இளையவள் என்ன செய்வாள்?

அந்த வீடு போல் அவளும் பாழடைந்து கிடப்பதைக் காண கணேசுக்கு மனம் பொறுக்குதில்லை. இவை எல்லாவற்றிற்கும் மூல காரணமான மாமாவையும் அவரது வரட்டு கௌரவத்தையும் அவனால் மன்னிக்க- மறக்க முடியவில்லை.

இல்லையேல் இப்போது அந்த வீட்டுக்கு அவனல்லவா மருமகன்! இனி விதிவிட்ட வழிதான்.

(யாவும் கற்பனையே!)

---

(ஒரு ரோஜா.....)

உலகை மறந்தேன். ஆம்! அவள் சிரிக்கப் பிறந்தவள்.

மீண்டும் கேட்டேன்.

"நீங்க அன்சார் காக்காவுக்கு சொந்தமா?"

"இல்லை"

"அப்போ.... பரீதா ராத்தாவுடைய சொந்தமா?"

"இல்ல..."

நான் புரியாமல் பார்த்தேன்.

அவளும் என்னையே பார்த்தாள். அந்த விழிகளில் தென்பட்ட உணர்ச்சி என்னவகை என்று என்னால் படிக்க முடியவில்லை.

"அப்போ.... நீங்க... யாரு?" தடுமாறினேன்.

இப்போது, அவள் என்னைப் புரியாமல் பார்த்தாள்.

"உங்களை இதற்கு முன் நான் கண்டதில்ல. அதுதான்... நீங்க யாரு?"

"கரீம் ஹாஜியார் தெரியுமா?

அன்சார் காக்காவுடைய முதலாளி...."

"ஓ...தெரியும்! கண்டியில்இருக்கிறாரே. பெரிய பணக்காரர்! நிறையத்தடவை அவரைக் கண்டிருக்கிறேன். அன்சார் காக்காவைத்தேடி அடிக்கடி வருவார்." என்றேன்.

"அவரேதான்!" என்றாள்.

என்னால் ஆர்வத்தைக் கட்டுப்படுத்த முடியாமல்கேட்டேன்.

"நீங்க அவருடைய மகளா?"

"இ.... இல்ல..." இலேசாகக் கண் கலங்கினாள்.

"அவருடைய பேத்தியா!"

"இல்ல!" என்றவளின் முகத்தில் கடுமையான சோகம் இழையோடுவதைக் கண்டேன். நான் பதறிப் போய்க்கேட்டேன்.

"அப்போ.....?"

"அவருடைய...அவருடைய இரண்டாம் பொண்டாட்டி!"

என்னிதயத்தில் கூர்மையான அம்புகள் தைத்தன. முதுகு முள்ளந்தண்டை யாரோ பலமாய்க் கீறினார்கள். மூளைப் பிரதேசத்தில் 'ஷெல்களின்' தாக்குதலை உணர்ந்தேன். சம்மட்டி கொண்டு யார் யாரோ என் உடம்பு முழுக்க அடித்தார்கள். ஆக-

ஒட்டுமொத்தமாக உலகமே சூனியமானதை அந்தக் கணத்தில் உணர்ந்து கொண்டேன். கையில் இருந்த எரியும் சிகரட் விரலைச் சுட்டும்கூட உறைக்கவில்லை. எச்சில் விழுங்கவே ரொம்பவும் சிரமப்பட்டேன்.

நம்பமுடியவில்லை.

என் கண்களையே என்னால் நம்பமுடியவில்லை.

அவள் மளமளவென்று தண்ணீர் அள்ளிக் குடத்தில் ஊற்றினாள். நிரம்பிய குடத்தை எடுத்துக்கொண்டு...... வரட்டுமா?" என்றாள். அவள் குரலில் சுருதியேயில்லாமல் இருக்க... "நல்லம்!" என்று அவள் விழிகளைப் பார்த்துக் கூறினேன்.

அந்த தேவதையின் கண்கள் குளமாய்க் கலங்கிப் போயிருக்க...விருட்டென ஓடிப் போனாள். அவள் மனதுக்குள் அழுதிருப்பது யதார்த்தமாகப் புரிந்தது.

எனக்குள்ளேயே நான் இமயமலையின் சரிவை உணர்ந்தேன். அப்படியே... கல்லில் அமர்ந்து கொண்டு, முகத்தை கையில் ஏந்திக்கொண்டு அழ ஆரம்பித்தேன்.

ஒன்றன் பின் ஒன்றாக நிறைய சிகரட் புகைத்தேன்.

எத்தனை மணிக்கு வீடு வந்தேன்? எப்போது சாப்பிட்டேன்? என்பதைக்கூட அறியாமல் பித்துப் பிடித்தவன் போலிருந்தேன்.

அவள் பற்றிய காயம் மனதுக்குள் ரணமாய் ஆகிப்போயிருக்க, இந்த ரணம் என் வாழ்க்கைமட்டும் ஆறவே ஆறாது.

நான் எதையுமே கிரகிக்காத நிலையில்... மாலை மங்கி இரவு வந்தது. நேரம் இரவு எட்டுமணியிருக்கும். வெளியே காரொன்று வந்து நிற்கும் சத்தம் கேட்டது. அவதானிக்கக் கூடிய நிலையில் நான் இல்லை. என் அறையில் - கட்டிலில் சாய்ந்து நான் அவளையே நினைத்துக் கொண்டிருக்கிறேன். அப்போது......

வராந்தாவில் நாநாவும், மதினியும் பேசிக்கொள்வது எனக்கும் கேட்டது.

என் தேவதையைப் பற்றியே அவர்களது பேச்சு இருந்ததால்... காதுகளைக் கூர்மையாக்கிக் கொண்டேன்.

"கரீம் ஹாஜியார் வந்து அந்தப் பெண்ணக் கூட்டிட்டுப் போறாரு." மதினி நாநாவிடம் சொல்ல, நாநாவும் திருப்பிக் கேட்கிறார்.

"எந்தப் பொண்ணு?அடுத்த வீட்டுல இருந்த அந்த சின்னப் பொண்ணா?"

"ஓம்... பாவமில்லையா?"

"இல்லாம... அந்தப் பொண்ணுக்கு இருபது வயசிருக்கும். ஆனால்...அந்த மனுசனுக்கோ அறுபது வயசும் தாண்டியிருக்கு. இந்தப் பொண்ணு வயசுல கரீம் ஹாஜியாருக்கு இரண்டு மூன்று மகள்கள் இருக்காங்க. பாவம்!" நானா பெருமூச்சு விட்டார். உண்மையாகவே பரிதாபப் பட்டார். மீண்டும் சொன்னார். "எல்லாமே பணம் செய்யுற வேலை. அவர் பொண்டாட்டிக்கு வயசாயிருச்சி என்கிறதால...கட்டில் சுகத்துக்காக இந்தச் சின்னப் பெண்ணுடைய வாழ்க்கையை நாசமாக்கிப் போட்டுட்டாரு. அதுவும் ஒரு ஹாஜியார் செய்ற வேலையா? என்றாலும் இந்தப் பொண்ணுக்கு புத்தி எங்கே போச்சு?" நாநாவுடைய குரலில் கவலையிருந்தது.

"அப்படிச் சொல்லாதீங்க. பாவம்! அந்தப் பொண்ணு அட்வான்ஸ் லெவல் படித்துக் கொண்டிருந்திச்சாம். ரொம்பவும் வறுமைப்பட்ட குடும்பம்! எல்லாம் நான்கு பொம்பிளப் புள்ளைங்க இருக்காங்களாம். இந்தப் பொண்ணுதான் கடைசிப் புள்ளையாம். மற்றப் புள்ளைகளக் கல்யாணம் பண்ணிக் கொடுப்பதாகச் சொல்லி..... கரீம் ஹாஜியார்தான் இவங்க வீட்டுக்குப் போய்... உம்மா வாப்பாவோடு பேசி இந்தப் பொண்ணக் கல்யாணம் பண்ணிட்டிருக்காரு."

"அதுக்காகக...இந்த அழகானபுள்ளைய கிழவனுக்கா கட்டி வைக்கிறது?"

"கஷ்டத்துக்காக-வறுமைக்காக உம்மா வாப்பா சம்மதிச்சிருப்பாங்க!"

"அப்போ...கரீம் ஹாஜியாருடைய முதல் பொண்டாட்டி புள்ளைங்க..."

"அவங்க கண்டியில இருக்காங்க. அவங்க யாருக்கும் இந்த விஷயம் தெரியாது. அதனாலதான் யாருக்கும் தெரியாம ஒரு வாரமா இங்கே கொண்டுவந்து வைச்சிருக்காரு. இப்போ, கம்பளையிலோ எங்கேயோ வேறு வீடு பார்த்திருக்காங்களாம். அதுதான் வந்து கூட்டிட்டுப் போறாரு. என்னவென்றாலும் பாவம் அந்தப் பொண்ணு,"

"எல்லாமே தலை விதி!"

அத்தோடு பேச்சு நின்று போக...மதினி சமையல் கட்டினுள் நுழைந்தார். நாநாவோ முன் ஹாலில், ஏதோ எழுத ஆரம்பித்தார். ஆனால்... நானோ எனக்குள் சித்திரவதைப்பட ஆரம்பித்தேன். வயிற்றில் அனலாய்ப் பசியெடுத்தது. எனினும் கட்டுப்படுத்திக் கொண்டேன்.

இன்றும் சாப்பிடப் பிடிக்கவில்லை.

திரும்பத் திரும்ப என் தேவதையும், அவளது கண்ணீர் விழிகளும், ஏக்கமான சோகமான முகமுமே என் ஞாபகத்தில் வந்து போயின.

'பெயர் தெரியாத என் தேவதையே என்னை விட்டுப் போய்விட்டாயா?"

அந்தக் கிழக்கரீம் ஹாஜியார் மேல் ஏதோ இனம்புரியாத கோபம், வெறி எழுந்தது. பணத்தின் மீது வெறுப்பு வந்தது.

பாவம் அந்தப் பைங்கிளி. தன் உணர்ச்சிகளையும், உவகைகளையும், அத்தனை விருப்பு வெறுப்புக்களையும்... இப்படியாக அத்தனை இளமைக் கனவுகளையும் கல்லறைக்குள் தொலைத்துவிட்டு, ஒரு இரசாயன வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறது.

"என் தேவதையே நீ என்ன பாடு படுகின்றாய்?"

என்று சத்தமாக...சத்தமாகக் கூவணும் போலிருந்தது. அடக்கிக் கொண்டேன். அழ ஆரம்பித்தேன்! என் இனிய தேவதையான...

அந்த ரோஜாவுக்காகவும், அவளைச் சுற்றியிருக்கும் இரசாயனத் துளிகளுக்காகவும், எனக்காகவும் அழ ஆரம்பித்தேன்.

பனித்துளி பட்டாலே
உதிர்ந்து போகும் ரோஜாயிதழ்........
இரசாயனத் துளி பட்டால்;
உருகிப் போகுமே.
உருத்தெரியாமல்-
கருகிப் போகுமே-
பாவம்!

என் இதயமே கழன்று வெளியே விழவேண்டும் என்கிற வேகத்தோடு, கேவிக் கேவி...தலையணை நனையும் மட்டும் அழுது கொண்டிருக்கிறேன். பெண் பிள்ளைமாதிரி ஒரு அப்பாவிப் பெண்ணுக்கா அழுதுகொண்டிருக்கிறேன். என் வாழ்க்கையிலேயே-

முதல் தடவையாக மனம் நொந்துபோய் அழுவது இதுதான்!

கடைசிமட்டும்

என் இனியவளுக்காக நான் அழுது கொண்டேயிருப்பேன்.

என் கண்ணீரிலாவது அவளது கனவுகள் நிறைவேறட்டும்!

-நிறைவு-

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## உன்னை நீ தாண்டாதே

அத்ரி மகரிஷியின் மகன் ஆத்ரேய முனிவர். இவர் நிறைய யாகங்களைச் செய்தார். இறுதியில் மகேஸ்வர யாகம் என்று ஒரு பெரிய யாகம் செய்தார். அதன் பலனாக எல்லா உலகங்களுக்கும் செல்லக்கூடிய சக்தியைப் பெற்றார்.

முதலில் சொர்க்க லோகத்தைப் பார்ப்போம் என்று அங்கு போனார். அங்குள்ள போகங்கள் கருத்தைக் கவர்ந்தன. மீண்டும் மண்ணுலகம் திரும்பினார். இப்போது தன் இருப்பிடம் அவருக்கு வெறுப்பாக இருந்தது. "சே, இதென்ன வாழ்க்கை" என்று அவருக்குத் தோன்றியது.

தினமும் கஞ்சியைக் குடிக்கும் குழந்தை, ஒரு முறை பாயாசத்தை ருசி பார்த்ததும், மறுநாள் கஞ்சியைக் குடிக்க மறுப்பது போன்று, முனிவரின் உள்ளமும் பேதலித்தது. தனக்குப் பெருமை சேர்ப்பது ஆசிரமும், அன்றாடக் கடமைகளும் தான் என்பதை மறந்தார்.

தேவசிற்பி த்வஷ்டாவை அழைத்தார். "இந்த இடத்தில், இப்போதே, இந்திரனிடமுள்ள எல்லாப் போகப் பொருட்களையும் படைத்துக் கொடு. இல்லையேல் உன்னைச் சாம்பலாக்கி விடுவேன்," என்றார்.

த்வஷ்டாவும் தேவசபை, கற்பகம், காமதேனு, அப்சரஸ் பெண்கள் அனைத்தையும் படைத்துக் கொடுத்தான்.

முனிவர் தான் இந்திரனைப் போல அனைத்தும் அணிந்து தன் மனைவியை இந்திராணியைப் போலாக்கி, மண்ணுலகிலிருந்தபடியே விண்ணுலக இன்பங்களை அனுபவித்தார்.

இதை அரக்கர் பார்த்து, இந்திரன் தான் இங்கும் வந்து ஆட்சியை நடத்துகிறான் என்றெண்ணிப் போருக்கு வந்து விட்டனர். இந்திரனைப் போன்று, அரக்கனை எதிர்த்து இவரால் போர் செய்யவா முடியும்?

நடுநடுங்கிப் போனார். "ஐயய்யோ, என்னை விட்டு விடுங்கள். நான் இந்திரனில்லை....அத்ரேய முனிவன்" என்று அலறினார்.

அவர்களிடமிருந்து விடுபடும் பாடு பெரும்பாடாகிவிட்டது. முனிவருக்கு கடைசியில் உண்மை புரிந்தது. "இந்த வேடத்தை விடுங்கள்", என்று கூறி முனிவரை அரக்கர்கள் விடுவித்தனர்.

முனிவர் மீண்டும் த்வஷ்டாவை அழைத்து, இந்திரபோகங்களை அகற்றி, பழையபடி தன் ஆசிரமத்தைக் கொடுக்கும் படி சொன்னார்.

த்வஷ்டாவும் அப்படியே செய்தான். அதன் பிறகு அவர் நிம்மதியாக வாழ்ந்தார்.

தகுதிக்கு மீறி, வெளிப்பகட்டாக வேடமிட்டு நடந்தால் அது வாழ்வின் அமைதியை அழித்து விடும். நம் தகுதிக்குத் தக்க ஆடை, அணிகலன்கள், அன்றாடக் கடமைகளே நமக்குப் பெருமை சேர்க்கும். உயர்வைக் கொடுக்கும்.

## ஆன்மீகம்

### மன்னிப்பு



மனிதன் இவ்வுலக வாழ்க்கையிலே தனக்கு நன்மை செய்கிறானோ இல்லையோ, தனக்கும் ஒருவன் தீமை செய்துவிட்டால் அவனுக்குப் பதிலுக்குத் தீமை செய்து விடத் துடிக்கிறான். சந்தர்ப்பம் எப்போது வரும் என்று காத்திருக்கிறான்.

கிறிஸ்தவம் 'மன்னித்தல்' என்னும் பண்பாட்டை அதிகம் வலியுறுத்துகிறது. ஒருவன் செய்யும் தீமையை மன்னிப்பதே மனித நேயம் என்று கற்பிக்கின்றது.

இறைமகன் இயேசு கிறிஸ்துவை சிலுவையிலே அறைகிறார்கள். தலையிலே முள்முடி சூட்டுகிறார்கள். உடல், சதைகள் எல்லாம் பிய்ந்து தொங்குகின்றன. இரத்தம் சிலுவையிலே பெருக் கெடுத்து வழிந்தோடுகிறது. சுற்றி நிற்போர் பரிகாசம் செய்கிறார்கள்.

இந்த நிலையில் இயேசு சொல்கிறார், 'பிதாவே, இவர்களை மன்னியுங்கள். தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே..."

எத்தனை உன்னத வார்த்தைகள். தன்னைத் தோண்டுகின்ற உழவனுக்குக் கூட பதிலுக்குத் தீமை செய்யாது விளைச்சலைத் தருகின்ற நிலத்தைப் போலத் தன்னைச் சித்திரவதை செய்து அணு அணுவாய்க் கொல்பவர்களுக்குக் கூட இறைமகன் இயேசு மன்னிப்பு வேண்டினாரே, இந்த உணர்வு நம் ஒவ்வொருவருக்கும் வருமேயானால், உலகமே சமாதானப் பூங்காவாய் மாறிவிடும். அந்த நாளும் வந்திடாதோ?

## காணிக்கையின் கனம்

ஒரு சமயத்தில் நபிகள் நாயகத்திற்கு அவர் செய்ய வேண்டிய ஒரு பெரும் பணிக்காக மிகுந்த பணம் தேவைப்பட்டது. தன் சீடர்களிடம், அவர்களால் எந்த அளவிற்கு உதவ முடியுமோ, அந்த அளவிற்கு உதவச் சொன்னார். சிலர் தங்கள் சொத்தில் கால் பங்கு கொடுத்தார்கள். சிலர் பாதி கொடுத்தார்கள். சிலர் மூன்றில் ஒரு பங்கு கொடுத்தார்கள். அபூபக்கர் என்னும் சீடர் தன் சொத்துக்கள் முழுவதையுமே நபிகளிடம் ஒப்படைத்து விட்டார்.

அப்போது அங்கே ஒரு ஏழைப் பெண் வந்தாள். ஒரு ரொட்டித் துண்டையும், 3 காய்ந்த பேரீச்சம்பழங்களையும் நபிகளிடம் பக்தியுடன் கொடுத்தாள். அருகிலிருந்தவர்கள் இதைக்கண்டு ஏளனமாகச் சிரித்தார்கள்.

நபிகள், பெண்ணின் காணிக்கையையும் பார்த்து, சிரித்தவர்களையும் பார்த்தார். நிதானமாகக் கூறினார்.

"அன்பானவர்களே! ஏளனம் வேண்டாம். நேற்று நான் ஒரு கனவு கண்டேன். அதில் இதே பெண் இதே காணிக்கை தந்தாள். தேவர்கள் எல்லாம் தோன்றினார்கள். அவர்கள் கையில் ஒரு தராசு இருந்தது. நீங்கள் எல்லோரும் கொடுத்த மொத்தத்தையும் ஒரு தட்டிலும், இப்பெண் கொடுத்த ரொட்டித் துண்டையும், பழங்களையும் ஒரு தட்டிலும் வைத்தார்கள். தராசு சமமாக நிற்கக் கண்டேன். இதிலிருந்து என்ன தெரிகிறது? இதயபூர்வமாக அளிக்கும் காணிக்கை எவ்வளவு சிறியதானாலும், அது விலை மதிப்பற்றதாகும்."

சிரித்தவர்கள் தலை குனிந்தார்கள்.

## வெற்றிகரமாகக் காப்பி ஊற்றுவது எப்படி?

**உண்மை + நகைச்சுவை + வித்தியாசம் = கட்டுரை**

-எம். சுரேஷ்-

இரண்டு கரண்டி சீனி, ஒரு கரண்டி கோப்பித்தூள், கொஞ்சம் சுடுதண்ணீர்..... காப்பி ரெடி. இதுக்குப்போய் விளக்கம் தேவையா? என்று ஆளுக்காள் திட்டுவது புரிகிறது. கொஞ்சம் பொறுங்கள். ஏன் அவசரப்படுகிறீர்கள்? நான் சொல்வது சாதாரண காப்பியல்ல, கல்லூரிக் காப்பி!

கல்லூரிக் காப்பியென்றால் என்ன? கல்லூரியில் படிக்கும் சகமாணவியை அல்லது யாராவது ஒரு மாணவியைப் பிடித்து நீண்ட நேரம் சலிக்காமல் கதைத்துக் கொண்டிருப்பதை (அறுப்பதை) கல்லூரிக் காப்பி என்பர். கல்லூரிக் காதலுக்கு அத்திவாரமே இந்தக் காப்பிதான்!

எல்லோராலும் வெற்றிகரமாகச் செய்ய முடியாது. இதற்கும் நீண்டகால அனுபவமும், திறமையும் தேவை. ஆகவே ஒரு சில காப்பி மன்னர்களை அணுகிப் பெற்ற ஆலோசனையை வைத்து, "வெற்றிகரமாக காப்பி ஊற்றுவது எப்படி" என்பதை விளக்கமாகச் சொல்வது, காப்பி ஊற்றுவதில் ஆரம்பகட்டத்தில் உள்ள இளைஞர்களுக்கு உதவியாக இருக்கும்.


1. முதற்படியாக பெண்கள் கூட்டத்தில் இருந்து உங்களுக்குப் பிடித்தமான ஒரு டம்ளரை (ஹி....ஹி.... பெண்ணைத்தான் சொன்னேன். காப்பி ஊற்ற இரண்டு டம்ளர் தேவை. ஒன்று நீங்கள். இன்னொன்றை......) தெரிவு செய்து கொள்ளுங்கள்.
2. தெரிவு செய்யும் டம்ளர் அதிகப் பேரால் காப்பி ஊற்றப் பயன்படுத்தப்படாத டம்ளராக இருந்தால் நன்று.
3. அதிக போட்டியுள்ள ஃபிகரோடு காப்பி ஊற்ற வேண்டும் என்று ஆசை இருந்தால் அதைக் கைவிட்டு விடுங்கள் (எப்படியும் கைவிடத்தானே வேண்டும். ......ஹி......ஹி.......)
4. வெட்க சுபாவமுள்ள பெண்கள் ரயில் எஞ்சினைப்போல் ஆரம்பத்தில் காப்பி ஊற்றத் தயங்கினாலும் போகப்போக சலிக்காமல் நீண்ட நேரம் தொடர்ந்து ஊற்றுவார்கள். ஆகவே மௌனமாக இருக்கும் டம்ளராகப் பார்க்கவும் (அதற்காக பேசாமடந்தை வேண்டாம்)
5. ஆரம்பத்தில் படிப்பு சம்மந்தமாகக் கதையுங்கள். பெண்களுக்கு..... மன்னிக்கவும் - பெண்ணுக்கு உங்கள் மேல் ஒரு பிடிப்பு ஏற்பட்டுவிடும் (ஏற்படாவிட்டால் வேறு டம்ளரைப் பார்க்க வேண்டியதுதான்)
6. கதைக்கும் போது அதிகமாக எம்ஜி.ஆர் ஸ்டைலைப் பின்பற்றுங்கள். அதாவது தாய்க்குலத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து அவர்களைப் புகழ்ந்து பேசுங்கள். சீதனம் வாங்கும் ஆண்களைக் கண்டபடி திட்டுங்கள். (பின்பு நீங்கள் சீதனம் வாங்குவது வேறு விடயம்)
7. காப்பி ஊற்ற தனிமையான ஒரு இடத்தை தெரிவு செய்து கொள்ளுங்கள் (அதற்காக மாலை தீவுக்கா போக முடியும்?)
8. கவிதைக்குப் பொய்யழகு என்று கம்பர்(?) சொல்லியிருக்கிறாராம்...... கவிதைக்கு மட்டுமல்ல காப்பிக்கும் பொய்யழகு. ஆகவே உங்கள் டம்ளரை தாறுமாறாகப் புகழ்ந்து தள்ளுங்கள். அவள் சிரிப்பை வெள்ளி முத்துக்கள் என்று சொல் லுங்கள். அவள் முகத்தை முழு நிலவென்று பாராட்டுங்கள். (அது அமாவாசை போல் இருந்தாலும் பரவாயில்லை)
9. டம்ளர் எப்படி இருந்தாலும் பரவாயில்லை. காப்பி சுவையாக இருக்க வேண்டும் என்ற தொழில் (?) பக்குவம் உங்களுக்கு இருக்க வேண்டும்.
10. கென்டீனில் ஏதாவது கொறித்துக் கொண்டு காப்பி ஊற்றுவது சுவையாக இருக்கும். ஆனால் நீங்கள் முதலில் பர்சைத் திறக்காதீர்கள்.
11. இடைக்கிடை நகைச் சுவைக் "கடிகளை" அள்ளித் தெளியுங்கள். (அவள் சிரிக்காவிட்டால் பரவாயில்லை. நீங்களாவது சிரிக்கலாமல்லவா)
12. எதையும் அளவோடு செய்ய வேண்டும். ஆகவே காப்பியையும் அளவோடு ஊற்றி நலமோடு தப்ப வேண்டும். (காப்பியைக் கல்லூரியோடு நிறுத்திக் கொள்ளுங்கள். நீண்டகாலம் காப்பி ஊற்றிவிட்டோம் என்பதற்காக அவளையே/அவனையே காதலிக்க வேண்டும் என்ற கட்டாயமில்லை- பழகப்பழக காப்பியும் புளிக்கும்!)



என்ன..... ஆளாளுக்கு இப்போதே டம்ளர் தேட ஆரம்பித்து விட்டீர்கள்போல் தெரிகிறதே. Very good....... நல்ல டம்ளராகத் தேடி நலமோடு காப்பி ஊற்ற என் வாழ்த்துக்கள்!

குறிப்பு: இது ஆண்களுக்கான ஆலோசனையாக இருப்பினும், பெண்களும் (இதை மாற்றி) வாசித்துப் பயன்பெறலாம்!
பயன்படுத்துவதும் விடுவதும் உங்கள் இஷ்டம்.
ஹி...ஹி...ஹி...

## தேன் கிண்ணம்



### இலாபம்....

சாராயத்தில் தண்ணி
கலந்து விற்பது-
குடிப்பவனுக்கும் லாபம்
விற்பவனுக்கும் லாபம்
என்ன?
குடிப்பவன் ஆயுளைக்
கூட்டிக் கொள்கின்றான்
விற்பவன் செல்வத்தை
தேடிக் கொள்கின்றான்.

-திருமலை சுந்தரப்பிரியா-

### "ஆன்டெனா"

வீட்டின் தலையில்
விறைத்து நிற்கும்
எலும்புக் கூடு

கிளையிருந்தும்
இலையில்லா
மொட்டை மரம்

களைத்து வரும்
காக்கை குருவிகளின்
தற்காலிக
தரிப்பிடம்.

உள்ளே உட்கார்ந்திருக்கும்
சின்னத் திரைக்கான
அடையாள அறிவிப்பு

கரப்பானின் உணர்கொம்பை
முன்னோடியாகக் கொண்ட
உயர்ந்த கொம்பு

மழையில் நனைந்தும்
வெய்யிலில் உலர்ந்தும்
உழைத்து நிற்கும்
நீயும் ஒரு தியாகி தான்!

ஷர்மிளா இஸ்மாயில்
கண்டி.

### மலையகத் தோழனுக்கும் தோழிக்கும்.....

நெருப்பு ராத்திரிகளைச்
சுமந்து போன
உங்கள் வாழ்க்கைப்
பக்கங்களிலெல்லாம்
மீதமாவது
வெறுமை மட்டும் தானா?

எத்தனை ஏய்ப்புகள்....
எத்தனை ஆசைகள்....
எல்லாம்
பூச்சியத்தின் மைய
முறுவலாய்
மங்கிப் போனதான
தேக நரம்புகள்!

தோழா!
உன் கண்ணீரின்
மறுபக்கத்தில் தான்
தேநீர் என்பது
இன்று எத்தனை பேருக்குத்
தெரியும்?

தோழி!
உன் வயிற்றில்
ரொட்டி புரண்டெழும்போது
அவர்கள்
முதல்ரக தேநீரை
செமிபாட்டிற்காய்க்
குடித்துக் கொள்வார்கள்.

வேத புராணங்கள் கூட
கை கொடுக்காத நிலையில்
நீங்கள்
மலை உச்சிக்குத்
தள்ளப்பட்டவர்கள்.

தோழனே! தோழியே!
கொஞ்சம் குரல்
கொடுங்கள்.
உலகம் உணர்ந்து
கொள்வதற்காய்
அதனைச் செய்யுங்கள்

இல்லாவிடில்
இன்னும் இன்னும்
உங்களை நோக்கி
வாக்குவங்கனம்
ஊர்ந்து வரும்.
வெளிச்சம் காட்டும்.
வேஷத்தில்
பிரமையாவீர்கள்.

முடிவில்
கொழுந்துக் கூடையோடும்
கைத் தடியோடும்
மலையை மிதிப்பீர்கள்
அவர்களின் காலடியில்
உங்கள்
வாழ்க்கை என்பதைக்கூட
உணராமல்

அக்குறணை/ஹரீரா அனஸ்

### பேசும் நிலா!

கடற்கரை ஓரங்களில்
சுதந்திரக் கவிதைகளை
நண்டுகள் எழுதும்!
மணலில் கால் புதைத்து
செருப்பு ஒழித்து
விளையாடிய இடங்கள்
இன்னும்-
என் ஞாபகங்களில்.....

இப்போது உன்னைப் போல்
நண்டுகளும்
என்னைக் கண்டு
ஒழிக்கின்றன!

நாம்-
கடலில் விட்ட
ஒற்றைச் செருப்பு
இன்று-
கரையேறி விட்டது!

நாம் இருந்த இடத்தில்
இப்போது நிறைய
புல் முளைத்திருக்கிறது!

சின்ன விரலில்
நீ-
போட்ட மோதிரம்
இதயத்துடன்
உடைந்து போய்விட்டது!

உன்-
இதழ்களால் நனைத்துத் தந்த
அந்த-
ரோசா நிறக் கைக்குட்டை
கிழிந்து போய் விட்டது!

நாம் நட்ட ரோசாச் செடி
காத்திருக்கிறது!
பூக்கமறுக்கிறது!!

எம்.ஏ.தஸ்ரிப்
அக்கரைப்பற்று-01.



### எப்படி வந்தது?

பாஷைகளுக்கு இல்லாத
திறமை உன் பார்வைகளுக்கு
மட்டும் எப்படி வந்தது?
வார்த்தைகளுக்கு இல்லாத
இனிமை உன் மௌனத்தில்
மட்டும் எப்படி வந்தது?

பிரியபாரதி
நுவரெலியா.

### விண்ணப்பம்

தோழி
கூடலுக்கு வா
உரிமையுடன்
உல்லாசம் போகலாம்.

சிவப்புத் தேரில்
நீலப் பட்டுடுத்து
நிஜங்களுக்கு
உருவூட்டலாம்.
ஒருணர்வில் இணங்கி
உரிமைகளை
வரையலாம்.

ஒவ்வொரு இடுக்கிலும்
உணர்வுகளை வரைந்து
விடியலைத் தேடும்
வைகறைகளுக்கு
விழாக் கோலம் போடலாம்.
சகதிகளைத் துடைத்து
சங்கதிகளை தீட்டலாம்.

வெப்பமடையும்
எங்கள்
ஒவ்வொரு மூச்சும்
முடியாமற் போன
முயற்சிகளுக்கு
முடிவு சொல்லும்.

யாகத்தின் வேகத்தால்
யாசிக்கிற முனிவனைப் போல
நாமும் யாசிப்போம்.

தோழி
கூடலுக்கு வா
கவிக்
கூடலுக்கு வா.

இந்தத் தேசத்தை
தூசிக்கிற
விதேசங்களுக்கு
விரோதம் வரைவோம்.

ஒற்றுமைக் கலசம்
அமைத்து
சுதந்திர வீணை
மீட்டுவோம்.

தோழி
கூடலுக்கு வா

- அம்தரவல்ல நிலாவாசன்-

### மனித நேயம் எப்போது?

திரும்பவும் திரும்பவும்
மனித நேயம்
மரித்துக்கொண்டிருக்கும்
மண்ணில் இனத்துவேசம்
எட்டிப் பார்க்கிறது!

தேசப்பிதாக்களின்
அறிவுரைகளும்
வள்ளுவரின் திருக்குறளும்
குப்பைக்குள்
போனபோதுதான்
இந்த மண்ணில்
மனிதக் குருதி
பாயத்தொடங்கியது!

கலியுக காலமென்றால்
உலகில்
உயிர்களையா
துப்பாக்கிகள்
காதலிக்க வேண்டும்!

அன்றைய பூக்ககள் கூட
வாசம்பரப்பின
ஆனால்...
இன்றைய பூக்கள்
வெடிமருந்துகளின்
வாசத்தினை
பரப்பத்
தொடங்கியிருக்கின்றன!

ஓ....
மானுடமே
என்றுதான்
மனிதநேயம்
தலை தூக்கும்?

-ஹப்புத்தளையூர் எப். லெனாட்குமார்-

### கல்யாண சந்தையிலே...

கல்யாண
சந்தையிலே
(ஏனோ)
கைகலப்பாம்
பெண்களால்......
காரணம்
விலைக்கு
வந்த வீரமகன்களில்
பலர்
முன்பே
பலபெண்களிற்கு
விற்பனையானவர்களாம்.

-கந்தையா காந்தரூபன்
பூண்டுலோயா



வானமெங்கும் இடி ஓசை
ஆங்காங்கே மின்னல் தெறிப்புக்கள்
பொழிந்தன குண்டுகள்

அழகானந்தன் அரவிந்தன்
கொழும்பு-15.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

## ஸ்போர்ட்ஸ்

# இலங்கை அணிக்கு வெளிநாடுகளில் பந்தய அனுபவம் தேவைப்படுகின்றது!

—பிரட்மனபிமானி—

இந்திய அணியின் இத்தடவை சுற்றுப் பயணத்தின் முதலாவது டெஸ்ட் பந்தயம் கண்டி மாநகரின் அஸ்கிரிய விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகி யிருந்தது. ஆயினும் பந்தயம் ஆரம்பமாகி ஒரு சில நிமிட நேரங்களில் மழை காரணமாக ஆட்டம் ஒத்திப்போடப்பட்டது.

அந்த முதலாவது டெஸ்ட் பந்த யத்தின் முதல் நாள் ஆட்டம் மழையினால் தடைப் பட்டதையடுத்து தொடர்ந்து அப்பந்த யத்துக்கான ஏனைய நான்கு தினங்களிலும் ஆட்டத்தை ஆரம்பிப்பதற்கு இந்திய-இலங்கை வீரர்கள் ஆர்வமாக இருந்தனர்.

ஆயினும் மழையே அப்பந்தயத்தில் ஜெயித்திருந்தது. முதலாவது டெஸ்ட் பந்தயத்திற்கென ஒதுக்கப்பட்டிருந்த எந்தவொருநாளிலும் முழுமையான ஓர் ஆட்டம் இடம் பெற முடியாதவகையில் முழுப்பந்தயமுமே, மழை காரணமாக ரத்தாகியிருந்தது.

இதனையடுத்து இந்திய-இலங்கை கிரிக்கெட் பிரியர்கள் மட்டுமல்லாது, ஆட்டக்காரர்கள் கூட மிகுந்த ஏமாற்றத் துடன் முதலாவது டெஸ்ட் பந்தயத்தை கோட்டை விடலாயினர்.

ஆனால் கொழும்பில் கெத்தாராம சர்வதேச விளையாட்டரங்கில் இடம் பெற்ற மட்டுப்படுத்தப்பட்ட ஒரு நாள் சர்வதேச ஆட்டம், சிங்கள விளையாட்டரங்கில் இடம்பெற்ற இரண்டாவது டெஸ்ட் பந்தயம், சரவணமுத்து விளையாட்டரங்கில் இடம் பெற்ற மூன்றாவது டெஸ்ட் பந்தயம் என்பன கிரிக்கெட் ரசிகர்களுக்கு சிறந்த விருந்துகளாகவே அமைந்திருந்தன.

கெத்தாராம விளையாட்டரங்கில் இடம்

ஆடியிருந்தார்.

அத்துடன் சுழல்பந்துவீச்சாளர் அனில் கும்ப்ளே, இலங்கைத் துடுப்படி வீரர்களுக்கு சிம்மசொப்பனமாகவே இருந்தார். உயரமான தோற்றத்தைக் கொண்ட கும்ப்ளேயின் பந்து வீச்சு இலங்கை வீரர்களைத் தடுமாற்றத்துக் குள்ளாக்கி விட்டிருந்தது.

அனில்கும்ப்ளே இரண்டாவது டெஸ்ட்டின் இரண்டு இன்னிங்ஸ்களிலும் மொத்தம் 8 விக்கட்டுகளைக் கைப்பற்றி 172 ஓட்டங்களைக் கொடுத்திருந்தார். இதன் மூலம் இரண்டாவது டெஸ்ட் பந்தயத்தின் சிறந்த பந்து வீச்சாளராக கும்ப்ளே தெரிவாகியிருந்தார்.


முதலாவது டெஸ்ட்டின் துடுப்படி வீரர் நவஜோத்சித்து முதலாவது இன்னிங்ஸ்சில் 82 ஓட்டங்களைப் பெற்றார். இரண்டாவது இன்னிங்ஸில் 105 ஓட்டங்களைப் பெற்றார். இதன் மூலம் இரண்டு இன்னிங்ஸிலும் கூடுதலான அளவு ஒட்டங்களைப் பெற்ற துடுப்படி வீரர் என்ற ரீதியில் இரண்டாவது டெஸ்ட் பந்தயத்தின் சிறந்த துடுப்படி வீரராக இந்திய சீக்கிய வீரர் நவஜோத் சித்து

ஆனால் இந்தியாவுடனான போட்டி யில் இவர்கள் தவிர்க்கப்பட்டு, புதியவர்கள் போடப்பட்டிருந்தனர். இப்புதியவர்களின் பந்து வீச்சு இந்திய அணியினருக்கு துடுப்படியில் நல்ல வாய்ப்புக்களை வழங்கியிருந்தது.

எனவே ம்தலாவது இலங்கை

இதன் காரணமாக அவரது அபார பந்து வீச்சுத்திறமைக்கு மூன்றாவது டெஸ்ட் பந்தயத்தின் போது சரவணமுத்து விளையாட்டரங்கு ' ஈடுகொடுத்ததுடன், இந்திய வீரர்களின் ஓட்ட எண்ணிக்கை

## சுழல் பந்து வீச்சாளர் முரளிதரன் மேலும் தட்டிக் கொடுக்கப்பட வேண்டும்!





அணியின் தோல்விக்கு பந்து வீச்சாளர்களில் மேற்கொண்ட மாற்றம், துடுப்படியில் நிதானமற்ற தன்மை என்பனவே முக்கிய காரணங்களாக இருந்தன.

இலங்கை, இந்திய அணிகளுக்கிடையிலான மூன்றாவதும், இறுதியுமான டெஸ்ட் பந்தயம் சரவணமுத்து விளையாட்டரங்கில் ஆரம்பமாகியிருந்தது.

இந்த அரங்கு ஓவல் விளையாட் டரங்கு (OVAL) என்றும் அழைக்கப் படுவதுண்டு. இலங்கையில் உள்ள மிகப் பழமை வாய்ந்த கிரிக்கெட் அரங்காக

உயரும் வேகத்தையும் மிகவும் குறைத்து விட்டிருந்தது.

மூன்றாவது டெஸ்டின் முதலாவது இன்னிங்ஸில் முரளிதரன் அபாரமாக பந்து வீசி 136 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கட்டுகளைக் கைப்பற்றியிருந்தார். அத்துடன் திடலின் குறுக்கே மிக லாவகமாகப் பாய்ந்து காட்ச் (Catch) ஒன்றையும் அவர் பிடித்திருந்தார்.

இது தவிர இலங்கையின் துடுப்படி வீரரான அரவிந்த டி. சில்வா, மூன்றாவது டெஸ்டின் முதலாவது இன்னிங்ஸில் 148

மூன்றாவது டெஸ்ட் பந்தயத்தின் சிறந்த பந்து வீச்சாளராக இந்திய சுழல் பந்து வீச்சாளர் அனில் கும்ப்ளே தெரிவாகி யிருந்தார்.

இலங்கை - இந்திய அணிகளுக் கிடையிலான போட்டிகளை எடுத்து ஆராயும் போது இலங்கை அணி பல சிறந்த வீரர்களைக் கொண்டுள்ள போதிலும், போதியளவு டெஸ்ட் பந்தயங்கள் விளை யாடிய அனுபவத்தைக் கொண்டிராத தாகவே காணப்படுகின்றது.

இந்தியாவைப் பொறுத்தவரை உப அணித்தலைவர் சச்சின் டென்டுல்க்கர், துடுப்படி வீரர் வினோத் கம்ப்ளி ஆகியோர் வயதில் மிகக்குறைந்தவர்களாக இருக்கின்ற போதிலும் நல்ல ஆட்ட அனுபவம் மிக்கவர்களாகவும், சர்வதேச ரீதியாக பல பந்தயங்களுக்கு முகங் கொடுத்தவர் களாகவும் காணப்படுகின்றனர்.

பள்ளிப்பருவம் முதல் இன்று வரை ஒன்றாகவே விளையாடும் சச்சின் டென்டுல்க்கர், வினோத்கம்ப்ளி ஆகியோ ரின் துடுப்படி ஆட்டம் மிகவும் மெச்சத் தக்கதாகவும், சிறந்த துடுப்படி நுணுக் கங்களைக் கொண்டதாகவும் காணப் பட்டன.

இவர்கள் இருவரும் இலங்கையில் எடுத்த நூறு ஓட்டங்கள், மற்றும் ஏனைய ஓட்டங்கள் என்பன இவர்களது அபார திறமையை வெளிக்காட்டியிருந்தன.


இலங்கையின் நடுவர்களும் சில சமயங்களில் தகுந்த தீர்ப்பை தாமதித்து வழங்கியிருந்தனர். அத்துடன் இவர்களது முடிவுகள் சில கேள்விக்குரியனவாகவும் விளங்கியிருந்தன.


எனவே இரு நாடுகளுக்கிடையிலான பந்தயங்கள் இடம்பெறும் போது அந்நாடு களைச் சேர்ந்திராத நடுவர்கள், நடுநிலை வகிப்பது மிகவும் இன்றியமையாத தாகின்றது. இல்லையேல் ஆட்டக்காரர்கள் மத்தியில் நம்பிக்கையின்மை, விரக்தி, கசப்புணர்வு என்பன தோன்றுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

தற்போது இலங்கையில் தங்கியுள்ள பிரபல இந்திய கிரிக்கெட் துடுப்படி வீரர் சுனில் கவாஸ்கரும் போட்டி யொன்றில் நடுநிலையான நடுவர்கள் இருப்பதன் அவசியத்தை வலியுறுத்தி யிருந்தார்.

இலங்கை அணியைப் பொறுத்தவரை அது மேலும் சர்வதேச பந்தயங்களுக்கு வெளிநாடுகளுக்குச் சென்று முகங் கொடுக்க வேண்டும். அத்துடன், ஆஸ்திரேலியா, மேற்கிந்தியத் தீவுகள், பிரிட்டன், நியூஸிலாந்து ஆகிய நாடு களுக்கும் சென்று ஆட்டங்களில் பங்கெடுக்க வேண்டும்.

இதன் மூலமே அவர்கள் தமது





## பந்தயங்களில் ஈடுபடும் நாடுகளைச் சாராத நடுநிலையான நடுவர்கள் மூலமே நேர்த்தியான தீர்ப்புக்களை எதிர்பார்க்கலாம்!

பெற்ற ஆட்டம் இரு அணி களினதும் அபாரத் திறமைகளை வெளிப்படுத்தின.

இந்திய அணியின் இலக்கை எட்டிப் பிடிப்பதற்கு இலங்கை அணி சிறந்த முறையில் துடுப்பாட்டத்தை நடத்தியிருந்தது. இந்திய அணி 213 ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றிருந்தது. ஆனால் இலங்கை அணி 212 ஓட்டங்களைப்பெற்ற நிலையில் ஒரு ஓட்டத்தைப் பெறத் தவறிய நிலையில் தோல்வியைத் தழுவியிருந்தது.

இந்திய அணியின் இந்த சர்வதேச ஒரு நாள் பந்தயத்தின் போது வெளிப் படுத்திய அசாதாரண துணிவும், மன உறுதியும் அவர்களது முதிர்ச்சியைக் காண்பிப்பதாக இருந்தன.

இலங்கையின் துடுப்படி வீரர்கள் இந்தியா ஏற்படுத்தியிருந்த இலக்கை நெருங்கியிருந்த போதிலும் இந்திய பந்து வீச்சாளர்களும் ஏனைய பந்து பிடிப் பாளர்களும் தமது மனஉறுதியை இழக் காமலும், சோர்வடையாமலும் இலங்கை வீரர்களை எதிர் கொண்டிருந்தனர்.

இந்தியர்கள் ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் பல வெற்றி களையீட்டியுள்ளார்கள். இரு தடவைகள் உலகக் கிண்ண சாம்பியன்களாகவும் வெற்றி பெற்றுள்ளார்கள். பல இளம் புதுமுகங்க ளுடனும் தமது உறுதிப்பாட்டைத் தொடர்ந்து பேணுவதையே இந்த ஒரு நாள் சர்வதேச பந்தய வெற்றிமூலம் அவர்கள் புலப்படுத்தி யுள்ளனர்.

இந்தியாவின் இத்தடவை சுற்றுப் பயணத்தின் இரண்டாவது டெஸ்ட் பந்தயத்தின் போது அபரிமிதமான ஆட்டத்தைப் பார்வையிடும் சந்தர்ப்பம் கிடைத்திருந்தது.

இந்த இரண்டாவது டெஸ்ட் பந்தயத்தின் போது இந்திய வீரர்களின், குறிப்பாக இந்திய துடுப்படி வீரர்களின் ஆட்டம் மிகவும் குறிப்பிடத்தக்கதாக இருந்தது.

வினோத் கம்ப்லி, நவஜோத் சித்து, சச்சின் டென்டுல்க்கர், மனோஜ் பிரபாகர், அணித்தலைவர் மொஹமட் அஸாருதீன் ஆகிய அனைவருமே துடுப்படியில் தமது திறமையை நன்கு வெளிப்படுத்தி யிருந்தனர்.

வினோத் கம்ப்லி, நவஜோத் சித்து, சச்சின் டென்டுல்க்கர் ஆகிய மூவரும் செஞ்சரிகளை போட்டு தமது அணியின் எண்ணிக்கையைப் பலப்படுத்தி யிருந்தனர்.

இந்திய வீரர் மனோஜ் பிரபாகர் பந்துவீச்சாளராக மட்டுமல்லாமல், துடுப்படி வீரராகவும் திறமையாக

தெரிவாகியிருந்தார்.

இலங்கை அணியினரின் ஆட்டம், இலங்கை ரசிகர்களுக்கு பலத்த ஏமாற் றத்தையே வழங்கியிருந்தது. இலங்கை அணி கடந்த ஆண்டிலும், பின்னர் இந்த ஆண்டின் ஆரம்பத்திலும் முறையே நியூஸிலாந்து, இங்கிலாந்து அணிகளுடன்

### பார்வையாளர் பகுதியில் இருந்து...

இந்திய-இலங்கை டெஸ்ட் ஆட்டத் தொடர் பற்றி பார்வையாளர்கள் பேசிக் கொண்டதில் காதில் விழுந்த சில.

சமயத்தில் இலங்கைக்காக பதின்மூன்று பேர் விளையாடுகிறார்கள்.

முரளிதரனுக்கு முதலில் சான்ஸ் கொடுக்காமல் விட்டது பெரிய பிழை..முரளி எடுத்த 4 விக்கெட் பிழைக்கு விழுந்த அடி.

சவணமுத்து. விளையாட்டரங்கை முக்கியத்துவம் கொடுத்து சிறப்பாக்கினால் அது ஒரு நல்ல ஆடுகளமாகும். ஏனைய விளையாட்டரங்குகளுக்கு கொடுக்கும் முக்கியமும், வாய்ப்புக்களும் வசதிகளும் சரவணமுத்து விளையாட்ட ரங்குக்கும் வழங்கினால் என்னவாம்?

அம்பயர்ஸ் எங்கட மானத்தை வாங்கிப் போட்டார்கள்.

கிரன்மோரேக்கு சீண்டும் கிண்டல்களில் எப்போதும் விருப்பம். அசாருதீன் அவரை அடக்கியதைப் பாராட்டலாம்.

இந்திய வீரர்கள் விளாசும்போது பார்வையாளர்கள் சிலர் கைதட்டக் கஷ்டப்பட்டது கெட்ட பொறாமை.

விளையாடி வெற்றிகளைப் பெற்றிருந்தது.

ஆனால் இந்தியாவுடனான ஆட்டத் தில் தோல்வியையே தழுவியிருந்தது. இலங்கை அணியின் சார்பில் அரவிந்த டி சில்வாவே முதலாவது டெஸ்ட்டில் கூடுதலான அளவு ஓட்டங்களை இரண்டாவது இன்னிங்ஸின் போது பெற்றிருந்தார். அவரது எண்ணிக்கை 93 ஆகும். மற்றும் அணித்தலைவர் அர்ஜுன ரணதுங்க 88 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

இலங்கையர்களின் முன்னணித் துடுப்படி வீரர்கள் பலர் விரைவிலேயே ஆட்டமிழந்தமையே இலங்கையின் ஏனைய துடுப்படி வீரர்களை தடுமாற்றத்துக் குள்ளாக்கி விட்டிருந்தது.

இது தவிர பந்து வீச்சாளர்களில் செய்யப்பட்டிருந்த மாற்றமும் எதிர்பார்த் தளவு வெற்றியைத் தரவில்லை. வேகப் பந்து வீச்சாளர் சம்பக்க ராமநாயக்கா, சுழல் பந்து' வீச்சாளர் முத்தையா முரளிதரன் ஆகியோர் முதலாவது டெஸ்ட் அணியில் இடம் பெற்றிருக்கவில்லை. இவர்கள் இருவரும் இங்கிலாந்து, நியூசிலாந்து ஆகியனவற்றுக்கிடையிலான போட்டிகளில் ஆடியிருந்தனர்.

இந்த சரவணமுத்து விளையாட்டரங்கு விளங்குகின்றது.

இந்த அரங்கு தமிழ் யூனியன் விளையாட்டரங்கிற்குச் சொந்தமானதாகும். நீண்டகாலமாக இந்த அரங்கு புறக்கணிக்கப்பட்டதொன்றாக விளங்கிய போதிலும், இதன் தரையமைப்பு, விஸ்தீரணம் என்பன சர்வதேச கிரிக்கெட் அரங்குகளுக்கு நிகரானதாக விளங்கு கின்றது.

எனவே அரசாங்கமும் இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையும், சரவணமுத்து விளையாட்டரங்கை மேலும் அபிவிருத்தி செய்து, பார்வையாளர் களுக்கான வசதிகளையும் இந்த அரங்கில் விரிவுபடுத்த வேண்டும்.

சரவணமுத்து விளாயாட்டரங்கில் ஆரம்பமான இந்திய-இலங்கை அணி களுக்கிடையிலான மூன்றாவது இறுதி டெஸ்ட் பந்தயம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்திருந்தது.

சரவணமுத்து அரங்கில் பந்தயத் திடல் சுழல்பந்து வீச்சாளர்களுக்கு வாய்ப்பான தாக விளங்கியிருந்தது. இலங்கை வீரர் முத்தையா முரளிதரனும் தமிழ் யூனியன் விளையாட்டுக்கழக உறுப்பினராவார். எனவே அந்தக் கழகத்துக்குச் சொந்தமான சரவணமுத்து விளையாட்டரங்கு முரளிதரனுக்கு மிகவும் பரிச்சயமானது. அத்துடன் அவரது சுழல்பந்து வீச்சுக்கும் வாய்ப்பானதாக இருக்கின்றது.

## நையாண்டிச் சேட்டைகள் தரமான பந்தயங்களில் சலனத்தை ஏற்படுத்தும்





ஓட்டங்களைப் பெற்றிருந்தார். ரொஷான் மஹாநாம இரண்டாவது இன்னிங்ஸில் 151 ஓட்டங்களை எடுத்து அபாரமாக ஆடியிருந்தார்.

இந்திய அணி சார்பில் வினோத் கம்ப்ளி முதலாவது இன்னிங்ஸில் 120 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். டென்டுல்க்கர் 71 ஓட்டங்களையும், மனோஜ் பிரபாகர் 55 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர்.

இந்திய சுழல் பந்து வீச்சுவீரர் அனில் கும்ப்ளே குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்திருந்தார். இரண்டாவது டெஸ்டிலும், தொடர்ந்து மூன்றாவது டெஸ்ட்டிலும் இவர் சிறந்த பந்து வீச்சாளராக தெரிவாகி யிருந்தார்.

இறுதியாக டெஸ்ட் பந்தயத் தொடரின் சிறந்த ஆட்டக்காரர்கள் வரிசையில் இலங்கையின் சிறந்த ஆட்டக்காரராக அரவிந்த டி சில்வாவும், இந்தியாவின் சிறந்த ஆட்டக்காரராக மனோஜ் பிரபாகரும் தெரிவானார்கள்.

அரவிந்த டி சில்வா மிகுந்த நிதானமாக விளையாடி முதலாவது இன்னிங்ஸில் 148 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். இவருடன் ரொஷான் மஹாநாம இரண்டாவது இன்னிங்ஸில் 151 ஓட்டங்களைப் பெற்றார்.

இந்த இருவரினது ஆட்டமே துடுப்படியில் இலங்கையைக் காப்பாற்றி விட்டிருந்தது. இதனையடுத்து டெஸ்ட் பந்தயத் தொடரின் சிறந்த இலங்கை வீரராக அரவிந்த டி சில்வாவும், மூன்றாவது டெஸ்டின் சிறந்த வீரராக ரொஷான் மஹாநாமவும் தெரிவானார்கள்.

திறமையை மேலும் வளர்த்துக் கொள்ள முடியும். கூடவே கிரிக்கெட்டில் நல்ல முதிர்ச்சியையும் அடையமுடியும்.

இந்திய வீரர்கள் பல சமயங்களில் நையாண்டியாக இலங்கை வீரர்களைச் சீண்டியிருந்தனர். இத்தகைய சீண்டல்கள் அரங்கிலுள்ள ஆட்டக்காரர்களுக்கு தொந்தர வாகவும், மனோரீதியாக சலனத்தையுமே ஏற்படுத்தும்.

எனவே இந்திய வீரர்கள் அனுபவ மிக்க ஆட்டக்காரர்கள் என்ற நிலையில் இருக்கும் போது சிறுபிள்ளைத்தனமாக நையாண்டிச் சேட்டைகளை விடுவது, ஒரு தரமான கிரிக்கெட் பந்தயத்தையே நையாண்டி செய்வதாக அமையும் எனக் கருதலாம்.

இலங்கை வீரர்கள் தமக்கெதிரான இந்திய வீரர்களின் நையாண்டிகள் குறித்து நடுவர்களிடம் முறையிட்டனர். ஆனால், பாகிஸ்தான், மேற்கிந்திய அணிகள் முரட்டுத் தனமான வீரர் களையும் கொண்டி ருக்கின்றன. அவர்களிடம் நையாண்டி விடும்போது பிரதிபலன்கள் வேறாக இருக்கும் என்பதனையும் இந்திய வீரர்கள் அறிந்து வைத்திருப்பது மிகவும் அவசியமாகும்.

எது என்னவான போதிலும் பாரதூர மான சம்பவங்கள் எதுவுமின்றி இந்திய-இலங்கை வீரர்கள், குறிப்பாக இந்திய அணித்தலைவர் மொஹமட் அஸாருதீன், இலங்கை அணித்தலைவர் அர்ஜுன ரணதுங்க ஆகியோர் மிகவும் பொறுப்பாக நடந்து கொண்டு நல்ல கிரிக்கெட் விருந்தினை ரசிகர்களுக்கு வழங்கி யிருந்தனர்.

F.R. VIDEO VISION

எந்தவொரு மங்கள வைபவங்களானாலும்,
வேறு நிகழ்ச்சிகள் எதுவானாலும்,
யாழ்நகரில் சேவையாற்றிய சிறந்த தொழில்
நுட்பக்கலைஞர்களைக் கொண்டு சிறந்த முறையில்
வீடியோ படம் பிடித்துக் கொடுப்பதுடன், சிறந்த
முறையில் 'மிக்ஸிங்' (MIXING) செய்து கொடுப்பதற்கும்

சிறந்த ஒரே இடம்

F.R. VIDEO VISION
386, GEORGE R. DE SILVA MAWATHA,
KOTAHENA, COLOMBO-13.
TEL: 439716 332298



ஃபின்லாந்தின் அழகான வாத்துக்கள்




13வது லூயி மன்னரின் ஓவியம் இது. வரைந்தவர் ஒவியர் வோயுயேம்.



சுவீடன் நாட்டின் 17ம் நூற்றாண்டு யுத்தக் கப்பல் "வாசா" 1628ல் முதல் பயணம் தொடங்கிய போதே கடலில் மூழ்கி விட்டது. மூழ்கிய கப்பலை 1960இல் தேடி எடுத்து பொருட்சிசாலையில் வைத்து வருகிறார்கள். கப்பல் பழையது தான் என்றாலும் பாட்டன் சொத்தில் விசேஷம்.

## பட்டத்து ராணியும் - ஆதிக்க ஆசையும்

1621 - பிரான்ஸ் நாட்டில் 13வது ஹென்றி மன்னன் மனைவியிடம் அன்பு காட்ட மறுத்தான்.

அந்தப்புர அழகிகளின் மடியிலே கிடந்தான். பட்டத்து ராணி விரக்தியில் விழுந்தாள்.

13வது லூயி மறைந்து அவர் மகன் 14ம் லூயி பதவிக்கு வந்தபோது தாயாரான ராணி தன் விரக்தியை மக்கள் மீதான ஆதிக்கமாக வெளிக்காட்டினார்.

உரிய தருணத்தில் விழித்துக் கொண்ட 14ம் லூயி தாயாரின் ஆதிக்க ஆசைக்கு அணைபோட்டு பிரான்ஸ் மக்களை ஆதிக்கத்திலிருந்து மீட்டார். பட்டத்து ராணியான அவரது தாயார் நாட்டைவிட்டு ஓடினார். ஆதிக்கம் தேடிய ராணி காணாமல் போனது பாடமான சரித்திரம்.

## கைதட்டல் பெறும் காட்சிக்காக கை போகவிருந்தது

சில்வெஸ்டர் ஸ்டலோன், ஹொலிவூட்டின் வசூல் மன்னன்.

இருவாரங்களுக்கு முன்னர் வெளிவந்த அவரது படமான கிளிவ் ஹாங்கர் வசூலில் சக்கைபோடு போடுகிறது.

அடுத்து வரவிருப்பது 'டிமொலிஷன் மான்' (அழிக்கும் மனிதன்)

ரொக்கியைப் போலவே படப்பிடிப்பின் பின் சில்வெஸ்டர் அழிவின் விளிம்புக்கு சென்று திரும்பி இருக்கிறார்.

டூப் நடிகர்களை பயன்படுத்த மறுத்துவரும் வழக்கமான சில்வெஸ்டர் ஸ்டலோன் தானே சாகசக் காட்சிகளில் நடிப்பது வழக்கம்.


10 மாடிக் கட்டிடத்தில் இருந்து கீழே குதிக்கும் காட்சியில் அவரே நடித்தார். கீழே காற்று மெத்தை விரிக்கப்பட்டிருந்தது. அதன்மீது விழுந்த சில்வெஸ்டர் மயக்கமாகி விட்டார்.

வைத்தியர்கள் பரிசோதித்தார்கள். வலது கரம் பாதிக்கப்பட்டிருந்தது. தீவிர சிகிச்சையால் அது செயலிழக்காமல் காக்கப்பட்டது.

"எனது கைதட்டலுக்காக ஒரு கையை பலி கொடுப்பது போல இருந்தது. மரணமாகவில்லையே என்று நிம்மதி" என்கிறார் சில்வெஸ்டர்.

திரையில் மட்டுமல்ல நிஜத்திலும் சில்வெஸ்டர் துணிச்சல்காரர்தான்.





கைத்தொழில் கலைப்பட்டதாரி மாணவர்களின் உருவாக்கத்தில் ஃபின்லாந்தின் நவீன கார்.



## ஜாம் பால் கேக்

சூட்டடுப்பு (ஓவன்) வசதியற்றவர்கள் சுவையான கேக் தயாரிக்கலாம். மிகவும் எளிதாகப் பெறக்கூடிய பொருட்களே இந்தக் கேக் தயாரிப்புக்குத் தேவை. ஜாம் எனப்படும் பழப்பாகு குறைந்த விலையில் எங்கும் கிடைக்கும். அத்துடன் சீஸ் எனப்படும் பாலாடைக் கட்டியும் தாராளமாகக் கிடைக்கிறது. இறக்குமதி செய்யப்படும் தோடம்பழம் - அதாவது ஒரேஞ்ச் பழமும் இப்பொழுது சந்தையில் கிடைக்கும். இவைதான் நாம் தயாரிக்கப் போகும் கேக்குக்கு முக்கியமாகத் தேவைப்படும் பொருட்கள்.

தேவையானவை:

| | |
|---|---|
| பழப்பாகு (ஜாம்) | - 1 மேசைக்கரண்டி |
| பாலாடைக்கட்டி (சீஸ்) | - 1 1/2 கோப்பை |
| பால் | - 1 1/2 கோப்பை |
| பால் பவுடர் | - 1 கோப்பை |
| சீனி | - 1/2 கோப்பை (சுவைக்கேற்ப அதிகரிக்கலாம்) |
| கேசரிப் பவுடர் | - 1 சிட்டிகை |
| தோடம்பழம் (ஒரேஞ்ச்) | - 1/2 கோப்பை |

(தோலுரித்து - சுளைகளிலிருந்து விதைகள் நீக்கப்பட்டது)

செய்முறை:

ஒரு அகலமான பாத்திரத்தில் பாலைக் கொதிக்க விடவும். கொதிக்கும் போது சீனியையும் பால்பவுடரையும் அளவான வெந்நீரில் கலந்து பாலில் சேர்க்கவும். பால் தடிப்பாகும் வரை அதே அளவு சூட்டில் அடுப்பிலிருக்க விடவும். பாலாடைக் கட்டியைத் துருவி சிறிதளவு வெந்நீர் விட்டு கூழ் போலாக்கி கொதிக்கும் பாலில் சேர்த்து மேலும் சில நிமிடம் கொதிக்க வைக்கவும். கேசரிப்பவுடரை கலவையிலிட்டு பழப்பாகினையும் விட்டுக் கிளறவும்.

பாத்திரத்தில் ஒட்டாத பருவம் வந்ததும் தோலுரித்து விதை நீக்கிய ஒரேஞ்ச் சுளைத் துண்டுகளை பால் கலவையுள் தூவவும்.

ஓரங்களில் சிறிதளவு வெண்ணெய் தடவிய மற்றுமொரு பாத்திரத்தில் கொதிக்கும் பால் கலவையை ஊற்றிக் குளிர விடவும்.

பிற்பகல் தேநீருடன், துண்டுகளாக வெட்டி நால்வருக்குப் பகிரலாம்.

ஜாம் பால் கேக்

மாமிச மலைகள் மோதும் மல்யுத்த போட்டிகள் சர்வதேசமெங்கும் நடைபெறுகின்றன.

கடந்த வருடம் ஜப்பானில் 25 நாடுகளைச் சேர்ந்த 73 மலைகள் மோதிக்கொண்டன. வென்றவர்கள் யார் என்கிறீர்கள்? ஜப்பானியர் களேதான்.






இப்பத்திரிகை கொழும்பு கிருலப்பனை சோமாதேவி பிளேஸ், 88/14ஆம் இலக்கத்தில் தினமுரசு பதிப்பகத்தாரால் 29, வெல்பாரா, நாவலவில் உள்ள சாமஸ் அச்சகத்தில் ஆகஸ்ட் மாதம் 22ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.